
கல்கி

KALKI
25.10.87
ரூ. 2.





- சுற்றுலாவுக்கு ஏற்ற வ. உ. சி. மாவட்டம்
- தாமிரபரணியைத் தடுக்கிறாரா பி. ஹெச். பாண்டியன்?
- தூத்துக்குடியில் ஒரு குட்டிக் கூவம்!



• சதம் போட்ட மார்ஷ்

அதிர்ஷ்டம் ஆஸ்திரேலியா பக்கம்; இயலாமை இந்தியா பக்கம்!

• பருவமழை பெய்கிறதோ இல்லையோ, ஒரு மாதம் கிரிக்கெட் மழை சக்கைப் போடு போடுகிறது. மழை என்னும் போது ஆஸ்திரேலியாவில் மெல்போர்னில் கொட்டிய மழைதான் ஒருநாள் கிரிக்கெட்டுக்கு வித்திட்டது என்பது நினைவு வருகிறது. அங்கு இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே நடந்த ஐந்து நாள் டெஸ்ட், மழையால் தடைப்படவே ஒரு நாள் பந்தயம் பற்றிய யோசனை உதித்தது. இன்று, ஒருநாள் பந்தயங்கள் ஐந்து நாள் பந்தயங்களைத் தூக்கிச் சாப்பிட்டுவிடும் அளவுக்குப் பிரபலமடைந்து வருகின்றன.

• சென்னையில் ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்ற பந்தயத்தில் ஸித்து, காவஸ்கர், ஸ்ரீகாந்த் அபாரமாக ஆடி நம்பிக்கை ஒளியை ஏற்படுத்திய போது காப்டன் கபில்தேவிலிருந்து மற்ற ஆட்டக்காரர்கள் அனைவரும் அந்த ஒளியை அணைப்பதில் ஈடுபட்டது பரிதாபம்! ஒரு ரன் தோல்வி நீக்க முடியாத ஆழமான வடு! இந்த இயலாமையை என்னவென்று சொல்வது? ஐந்து ஸிக்ஸர்கள் அடித்து அன்றைய ஆட்டத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவர் ஸித்து.

• ஆஸ்திரேலிய — இந்திய மாட்சில் இரண்டு ரன்கள் படுத்திய பாடு — வெற்றி தோல்வியின் தலைவிதியையே நிர்ணயித்தது! அம்பயர் பேர்டு முதலில் 'ஸிக்ஸர்' என்று கைதூக்கி, பின் சாஸ்திரியின் ஸிக்னலில் அதை பவுண்டரி சிக்னல் ஆக்கி மறுபடியும் விழித்துக் கொண்டு 'ஸிக்ஸர்' என்று பெவிலியனுக்கு வந்ததும் ஸ்கோரரிடம் திருத்தச் சொன்னது குழப்பத்தின் சிகரம்! இந்த இரண்டு ரன்கள் சேர்க்கப்படாமல் விட்டால் இந்தியா வெற்றியைப் பெற்றிருக்கும்! இந்த இரண்டு ரன்கள் வெற்றியை ஆஸ்திரேலியா பக்கம் திருப்பிவிட்டன!

• இன்று இந்தியா, ஆஸ்திரேலியாவிடம் ஒரே ரன் தோல்வியைப் பெற்றது போல் 1976 — 77 இல் நியூஸிலாந்து பாகிஸ்தானை சாயல்கோட்டில் ஒரே ரன்னில் வெற்றி கண்டிருக்கிறது. 1980 — 81 இல் நியூஸிலாந்து ஆஸ்திரேலியாவை ஒரு ரன்னில் தோல்வியடைய வைத்திருக்கிறது!

• எல். பி. டபிள்யூ முடிவை ஜீரணிக்க இயலாத ஆஸ்திரேலிய ஆட்டக்காரர் பூன், தம் மனக் கசப்பைப் பெவிலியன் டிரஸ்ஸிங் அறைக் கதவை மட்டையால் ஓங்கி ஓங்கி அடித்துத் தீர்த்துக் கொண்டார்! அவருடைய உணர்ச்சிக் கொந்தளிப்பைக் கண்டு பெவிலியனிலிருந்த ரசிகர்கள் பிரமித்தனர்.

• காப்டன் பார்டர் கிரிக்கெட்டை மறந்து அடையாறு பார்க் ஹோட்டலுக்கு வந்து ஸிஸர்ஸ் மோட்டார் சைக்கிள் பந்தயத்துக்குக் 'கொடி' காட்டிதுவக்கிவைத்தார்! மோட்டார் சைக்கிள் பந்தய வீரரிடம், 'எத்தனை மைல் போட்டி?' என்று கேட்டு அவர், '750 கிலோமீட்டர் தூரம்' என்றதும் 'பெஸ்ட் அப் லக்!' என்று வாழ்த்தி அனுப்பினார்! அந்த அதிர்ஷ்டம் பார்டருக்கும் நிறைய இருந்தது. சிதம்பரம் ஸ்டேடியத்தில் ஒரு ரன் வெற்றி!

• போதாக்குறைக்கு ஜிம்பாப்வே மாட்ச் காப்டன் பார்டருக்கு ஒரு ரிகார்டு கொடுத்தது. ஒருநாள் கிரிக்கெட் பந்தயத்தில் 4000 ரன்களை வெற்றிகரமாகக் கடந்த பார்டர், நான்காவது இடத்தைப் பெறுகிறார். இதற்கு முன் இந்தச் சாதனையைச் செய்தவர்கள் டெஸ்மாண்ட் ஹெயின்ஸ், விவியன் ரிச்சர்ட்ஸ், ஜாவேத் மியான்தாத் ஆகியோர்.

• ரிலையன்ஸ் கோப்பை கிரிக்கெட் சூடு பிடித்துவிட்டது! பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் பல கேந்திரங்களில் ஒரு நாள் கிரிக்கெட் பந்தயங்கள் எந்த நாட்டுக்கு வெற்றியைத் தருவது என்பதில் போட்டியிடுகின்றன. பம்பாய் செமிபைனலும் கல்கத்தா இறுதி ஆட்டமும் ரசிகர்களுக்கு உலகக் கோப்பை சாம்பியன்களை அறிமுகப் படுத்தும்!

— குண்டுமணி

புகைப்படம்: பாலாஜி

தாமிரபரணியைத் தடுக்கிறாரா பி.ஹெச். பாண்டியன்!

* காய்ந்து கிடக்கும் வாழை





* ஸ்ரீவைகுண்டம்: வறண்டு கிடக்கும் தாமிரபரணி

"ஒரு நதியின் ஆரம்பத்திலிருப்பவர்கள் தங்களிஷ்டப்படி தங்கள் விவசாய நிலங்களுக்கு அந்த நதி நீரைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; நதியின் கடைசிப் பகுதியிலுள்ள விவசாயிகளைப் பற்றிக் கவலைப்படவே தேவையில்லை என்றால், 'காவிரியில் தண்ணீர் திறந்து விடுங்கள்' என்று நாம் கர்நாடக அரசை வற்புறுத்துவதில் என்ன நியாயம் இருக்க முடியும்?'' என்று ஆவேசப்படுகிறார்கள் தாமிரபரணி நதியின் கடைக்கோடியிலுள்ள ஸ்ரீவைகுண்டம், ஆத்தூர் பகுதி விவசாயிகள்.

காரணம் கேட்டபோது, ''எல்லாம் சபாநாயகர் பி. ஹெச். பாண்டியன் செய்கிற வேலை சார். அவருடைய தொகுதியான சேரன்மாதேவி, தாமிரபரணியின் அடிமடையிலேயே இருப்பதால், அவர் தமது தொகுதி மக்களிடம் செல்வாக்குப் பெற வேண்டி வேண்டிய அளவுக்குத் தண்ணீரைத் திறந்து விடச் செய்து விடுகிறார். அவர் சபாநாயகராயிற்றே என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கண்டும் காணாதது போல் இருந்து விடுகிறார்கள். அதனால் நதியின் கடைமடைப் பகுதிகளிலுள்ள விவசாயிகளான எங்களுக்குப் போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. வாடி நிற்கும் வாழைத் தோட்டங்களையும் வெற்றிலைக் கொடிக்கால்களையும் நீங்களே பாருங்கள்...'' என்று மறுபடியும் ஆதங்கப்படுகிறார்கள் அந்த விவசாயிகள்.

வாழைத் தோட்டங்களும் மற்ற பயிர்களும் அங்கே வாடிக்-கிடக்கின்றன என்பது உண்மைதான் என்றாலும், அதற்குக் காரணம் சபாநாயகர்தான் என்பது எந்த அளவுக்கு உண்மை? அதிகாரிகளைக் கேட்டபோது, ''கிடையவே கிடையாது. பாபநாசம் நீர்த்தேக்கத்தின் மொத்தக் கொள்ளளவான நூற்று நாற்பத்து மூன்று அடியில் இந்த ஆண்டு நிரம்பியதே வெறும் 53.45 அடிதான். இது சென்ற ஆண்டை விடவும் பத்தடி குறைவு. அதனால்தான் தண்ணீர்ப் பற்றாக்குறையே தவிர, அங்கே சபாநாயகர் தடுத்து விடுகிறார் என்பதெல்லாம் உண்மைக்கு மாறானது...'' என்று உறுதியாகச் சொல்கிறார்கள்.

சபாநாயகர் தடுக்கிறாரா இல்லையா என்கிற சர்ச்சையை விட்டு விட்டாலும் கூட இருக்கிற நிலைமைகளை வைத்துக் கொண்டு பார்க்கும் போது, தாமிரபரணித் தண்ணீர்ப் பங்கீட்டில் வ.உ.சி. மாவட்ட விவசாயிகள் புறக்கணிக்கப்படுகிறார்களோ? என்ற சந்தேகம் முழுமையாகத் தீர்ந்தபாடில்லை. காரணம், இரண்டு மாவட்டங்களிலும் உள்ள அணைகள் மற்றும் கால்வாய்களின் புள்ளி விவரங்கள்தான்.



* ராமசுப்பிரமணியன்

மிடத்தில் பிரியும் ஒரு கிளைக் கால்வாய்.

"இந்தக் கால்வாய் தூர்ந்து போய் இப்போது, ஆத்தூர் மெயின் கால்வாயை விட மேடாகிப் போனதால் எங்கள் பகுதிக்குத் தண்ணீர் வரத்து மிகவும் குறைந்து போய் விட்டது. அதனால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களிலுள்ள வெற்றிலைக் கொடிக் கால்களெல்லாம் காய்ந்து கொண்டு வருகின்றன. தூர் எடுக்கச் சொல்லி எத்தனையோ முறை மனு கொடுத்தும் பயனில்லை..." என்று எங்களைச் சம்பந்தப்பட்ட இடங்களுக்கே அழைத்துச் சென்று காட்டினார் சொக்கப்பழங்கரையைச் சேர்ந்த சேதுராமநாதன் என்பவர்.

"இப்போது தூத்துக்குடியிலிருக்கும் ஸ்பிக் நிறுவனத்திற்குச் செல்லும் தண்



* ஆத்தூர் (மெயின்) கால்வாயும் கிளைக்கால்வாயும்.



* சேதுராமநாதன்

நெல்லை, வ. உ. சி. ஆகிய இரண்டு மாவட்டங்களிலுமாகச் சேர்ந்து தாமிரபரணி பாயும் மொத்தப் பாசன நிலத்தின் பரப்பளவு 86,000 ஏக்கர் என்றால், அதில் 46,000 ஏக்கர் வ. உ. சி. மாவட்டத்தில் தான் இருக்கிறது. எனினும் வ. உ. சி. மாவட்டத்திலுள்ள அணைகள் இரண்டே இரண்டுதான். நெல்லை மாவட்டத்திலோ, ஆறு அணைக்கட்டுகள். இதே மாதிரிதான் கால்வாய்களின் எண்ணிக்கையும்! வெறும் நாற்பதாயிரம் ஏக்கர் பாயும் நெல்லை மாவட்டத்தில் மொத்தம் ஏழு கால்வாய்கள் என்றால், நாற்பத்தாறாயிரம் ஏக்கர் பாயும் வ. உ. சி. மாவட்டத்தில் நான்கே கால்வாய்கள்தான். இந்நிலையில், நெல்லை மாவட்டத்திலுள்ள பாபநாசம் அணைக்கட்டின் முழுக் கொள்ளளவும் திரும்பினால் கூட, வ. உ. சி. மாவட்டத்தில் உள்ள பாசன நிலங்கள் போதுமான அளவுக்குத் தண்ணீர் பெற முடியுமா என்பது சந்தேகத்திற்குரியதே.

நிலைமை இப்படி இருக்கும் போது வ. உ. சி. மாவட்டத்திலிருக்கும் கால்வாய்களாவது ஒழுங்காகப் பராமரிக்கப்பட வேண்டாமா? அதுவும் பராமரிக்கப்படுவதில்லை என்பதற்கு ஓர் உதாரணம் ஆத்தூர் மெயின் கால்வாயிலிருந்து மாவடிப் பண்ணை என்னு

ணீர் ஆறுமுக மங்கலம் என்னும் ஊரிலுள்ள குளத்திலிருந்து குழாய் மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது. அந்தக் குளத்திற்கு ஸ்ரீவைகுண்டம் அணையிலிருந்து தாமிரபரணித் தண்ணீரைக் கால்வாய் மூலம் எடுத்துச் செல்கிறார்கள். இதனால் ஏராளமான தண்ணீர் வீணாகிறது. அதைத் தடுக்க, ஏரல் அருகில் ஒரு நீர்த்தேக்கம் அமைத்து, அதில் மழைக்காலத்தில் வீணாகச் சென்று கடலில் கலக்கும் தாமிரபரணித் தண்ணீரைத் தேக்கி வைத்து ஸ்பிக்குக்கு எடுத்துச் செல்லலாம். இல்லையெனில், ஸ்பிக்குக்கு ஸ்ரீவைகுண்டத்திலிருந்தே நேரடியாகக் குழாய் மூலம் கொண்டு செல்லலாம். இதனால் தண்ணீரைத் துளியும் விரயமாகாமல் பயன்படுத்த முடியும்!" என்று யோசனை கூறுகிறார் ஸ்ரீவைகுண்டம் தொகுதியின் முன்னாள் எம். எல். ஏ. (அ.தி.மு.க.) வான ராமசுப்பிரமணியன்.

தாமிரபரணித் தண்ணீரை மட்டும்தான் இப்படி வீணாக்காமல் பயன் படுத்திக் கொள்ள முடியும் என்பதில்லை. தாமிரபரணிப் படுகை அல்லாத மற்ற பகுதி



● சுந்தர்ராஜன்

களிலும் மழைக் காலத்தில் கிடைக்கும் தண்ணீரை வீணாக்காமல் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதற்கு ஓர் உதாரணம் தூத்துக்குடி அருகிலுள்ள மேலத் தட்டப்பாறை என்ற ஊரை ஒட்டி ஓடும் உப்பாற்று ஓடை.

''இந்த ஓடையைத் தடுத்து ஒரு நீர்த் தேக்கம் அமைத்தால் எண்ணூறு ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்று கடந்த 62 ஆம் ஆண்டே ஒரு திட்டம் தீட்டினார்கள். எனினும் இதுவரை அத்திட்டம் செயல்படுத்தப்படவே இல்லை. காரணம் கேட்டால், இந்த நீர்த்தேக்கத்தால், பக்கத்து ஊரான உமரிக் கோட்டையிலுள்ள சில விவசாயிகளின் நிலம் பாதிக்கப்படுமென்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சிறு விவசாயிகளுக்கு நீர்த்தேக்கத்தின் பாசனப் பகுதியிலேயே அதற்கு ஈடான நிலத்தைக் கொடுக்க நாங்கள் தயாராகஇருந்தும் அநாவசியமாகத் தாமதப்படுத்துகிறார்கள் அதிகாரிகள்...'' என்கிறார் மேலத் தட்டப்பாறை பஞ்சாயத்துத் தலைவர் சுந்தர்ராஜன்.

ஆக, இருக்கிற கால்வாய்களையும் குளங்களையும் ஏரிகளையும் தூரெடுத்துப் பராமரிப்பதோடு ஆங்காங்கே ஓடும் காட்டாறுகளைத் தடுத்து நீர்த் தேக்கங்களையும் கட்டினாலே பாதி வறட்சி குறைந்து போகும் என்பதில் ஐயமில்லை. இவற்றோடு, தாமிரபரணித் தண்ணீரையும் அடிமடை, கடைமடை என்று பார்க்காமல், இருக்கிற தண்ணீரை இரண்டு மாவட்டங்களுக்கும் சரியான விகிதங்களில் பங்கீடு செய்ய வேண்டும். அப்படிப் பங்கீடு செய்யப்பட்டு வழங்கப்படுகிறதா என்பதை வெறும் அரசு அதிகாரிகள் மட்டும் கவனித்தால் போதாது. அதற்கு ஒரு குழுவை ஏற்படுத்தி, அதில் இரண்டு மாவட்டங்களிலிருந்தும் மக்கள் உறுப்பினர்களைப்பங்கேற்கச்செய்து,கண்காணிக்க வேண்டும். இல்லையெனில், வ. உ. சி. மாவட்டத்திற்கு வரவேண்டிய தண்ணீரைச் சபாநாயகர் தமது தொகுதிக்காகத் தடுத்துக் கொண்டு வருகிறார் என்பது போன்ற சந்தேகங்களை நிவர்த்தி செய்ய முடியாமலேயே போய்விடும்.

— ப்ரியன்

வம்பு மார்க்கெட்:



பராக்! வருகிறார்! வருகிறார்!

மகிழ்ச்சியாக இருக்கிறார், கலைஞர்

தம்மை விட்டு விலகிப் போய், ராமாபுரம் தோட்டத்தையே முழுக்க முழுக்க நம்பிக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள், மீண்டும் தம்மிடம் வந்ததைப் பற்றிக் கலைஞர் மிகவும் பூரித்துப் போயிருக்கிறார்.

அரசியல் ரீதியான ஒரு வெற்றிப் பூரிப்பு அது. அதாவது: வெகு காலத்துக்குப் பின், இலங்கைத் தமிழரின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாகத் தாம் மாறியிருப்பது; எம். ஜி. ஆரிடமிருந்து விடுதலைப் புலிகளை விலக்கி விட்டது; ஆகிய வெற்றிகளின் திரட்சி.

விடுதலைப்புலிகள் கலைஞரை நம்புவதற்கு ஒரு பின்னணி இருக்கிறது. மத்திய அரசிடம் தங்கள் மதிப்பை இழந்து இந்திய ராணுவத்தையும் எதிர்த்துக் கொண்டு விட்டதால் இனி எம். ஜி. ஆரை நம்பிப் பயனில்லை என்று விடுதலைப் புலிகள் கருதுகின்றனர். எம். ஜி. ஆர். எப்படியும் ராஜீவுக்கு ஜால்ரா தான் போடுவார் என்பதால் இப்போது மீண்டும் தங்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்க வேண்டுமானால் கலைஞர் மூலம் மூப்பனாருக்குச் சொல்லி, மூப்பனார் மூலம் ராஜீவை அணுகி, என்ற புது அணுகு முறையை விடுதலைப் புலிகள் நம்புகிறார்கள். 'ராமச்சந்திர மார்க்கமாக' இனிக் காரியம் நடக்கும் என்ற நம்பிக்கை அறவே இல்லை.

பண்ருட்டியாருக்குத் தடை

ராஜீவ் காந்தியால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்திய தூதுக் குழுவில் இடம் பெற்று ஐ. நா. சபைக்குச் செல்லவிருந்த பண்ருட்டியார், கடைசியாகக் கைவிடப்பட்டதற்குக் காரணம் யார் தெரியுமா?

எம். ஜி. ஆர்தான்!

ராஜீவ் காந்தியின் தேர்வையும் மீறி 'அவரைப் போகக் கூடாது' என்று தடுத்து விட்டார்! (ராஜீவ் காந்தியின் விசேஷ அபிமானத்தைப் பெற்றதாலேயே இந்தத் தடை என்கிறார்கள்!)

பராக்! வருகிறார்! வருகிறார்!

எம். ஜி. ஆர். ஒரு வழியாகத் தம் அமெரிக்க தர்பாரைக் கலைத்துவிட்டு, மீண்டும் சென்னைக்கு எப்போது வந்து சேரப் போகிறாரோ, இந்தக் கணம் வரை யாருக்கும் உறுதியாக ஒன்றும் தெரியவில்லை. ஆனாலும் அவர் வரும்போது தாங்கள் தூங்கிக் கொண்டிருந்து விடக் கூடாது என்பதில் இங்கே எல்லா கோஷ்டிகளும் உஷாராகி விட்டன.

முப்பிறவி எடுத்த முதல்வரை, வரவேற்க மூன்று கோஷ்டிகள் தனித்தனியாகத் தங்களைத் தயார் செய்து கொண்டிருக்கின்றன.

மூன்றில் வீரப்பன் கோஷ்டி, பழைய மாதிரி 'தப்பு' செய்யாமல் எச்சரிக்கையாக இருக்கிறது. ('நீங்கள் விரும்பினால் முதல்வர் பொறுப்பையும் ஏற்கத் தயார்' பாணி வசனமெல்லாம் கிடையாது. கப் சிப்!)

'ஜெ' கோஷ்டி அடங்கிக் கிடக்கிறது. 'அவர்' வந்தால்தான் அது சூடாக இயங்கும்.

ரொம்பவும் கலவரத்துடனும் — அதே சமயம் 'ஆனது ஆகட்டும்' என்ற வெறுப்பிலுமிருப்பவர்கள் நெடுஞ்செழியன்,



ப. உ. ச., ராஜாராம் ஆகியோர். அவர்களுக்கு எதிராக நிறையப் புள்ளி விவரங்களைத் தயார் செய்து வைத்திருக்கிறார் ஒரு 'நாடி' அமைச்சர்!

தமிழுக்கு எதிராக...

ரொம்பக் காலத்துக்குப் பின் டி. வி. யில் நல்ல தமிழ் எழுத்தாளர்கள் உச்சப் பதவிகளில் இருக்கிறார்கள். அகிலா சிவராமன், நிலைய இயக்குனர். இன்னொரு சிறந்த தமிழ் எழுத்தாளரான ஏ. நடராஜன், இரண்டாவது சானலுக்காகத் துணை இயக்குனர். இப்படி...

இந்தத் தமிழ் மணம் சிலருக்குப் பிடிக்கவில்லையாம். பாஷை தெரியாதவர்கள் இருந்தால் தம் இஷ்டம் போல் விளையாடலாம் என்று நினைத்திருந்த அவர்கள், மேல் பதவியிலிருக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்கு எதிராகப் புகார்களை அனுப்புவதோடு, இங்கு வரும் இ. காங்கிரஸ் மந்திரிகள் காதுகளிலும் சதா ஓதிக் கொண்டிருக்கிறார்களாம்!

'தமிழ்' தாக்குப் பிடிக்குமா?

— ஒட்டக்கூத்தன் ஜி

கெட்டிக்கார பொம்முவும் கட்டபொம்மன் கோட்டை



• எட்டயபுரம்: பாரதி மணி மண்டபம்.

கட்ட பொம்மு (வீ.பா.க.பொ. இவன் அல்லன்) என்ற குறுநில மன்னனின் படை வீரர்கள் ஒருநாள் வேட்டை நாய்களுடன் சாலிகுளம் காட்டில் வேட்டைக்குச் சென்றனர். அப்போது ஒரு முயலைக் கண்ட வேட்டை நாய்கள் துரத்திச் சென்றன. பயந்து ஓடிக் கொண்டே இருந்த முயல், ஒரு குறிப்பிட்ட இடம் வந்ததும் வீரம் பெற்றுத் திரும்பி வேட்டை நாய்களைத் துரத்தியடித்ததாம்.

இதைக் கேள்விப்பட்ட மன்னன் ஆச்சரியமடைந்து, முயல் வீரம் பெற்றுத் திரும்பிப் போரிட்ட அந்த இடத்திலேயே ஒரு கோட்டையை நிர்மாணித்தான். அதற்குப் 'பாஞ்சாலன்' என்ற தனது பாட்டனார் பெயரையும் இணைத்துப் 'பாஞ்சாலங்குறிச்சி' என்று பெயரிட்டான். இதுதான் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை பிறந்த கதை!

அந்தக் கட்டபொம்மு என்பவனின் வழித்தோன்றல்தான் வீரபாண்டிய கட்டபொம்மன். அவனுக்குப் பொம்மு என்பதுதான் நிஜப் பெயர். ஆந்திராவைச் சேர்ந்த பெல்லாரிப் பகுதியின் சிற்றரசர்களில் ஒருவரான பால்ராஜா என்பவரின் மகன். அப்போது அவர்கள் முகலாய ஆட்சியின் கீழ் இருந்தார்கள். அச்சமயம் முகலாய அரசன் ஒருவன் பொம்மு குடும்பத்தில் பெண்ணெடுக்க விழையவே, அதனால் தங்கள் சந்ததியின் ஒரிஜினலிடி அழிந்து விடுமே என்று நினைத்து இரவோடு இரவாக ஊரைக் காலி செய்து கொண்டு வந்து, இங்குள்ள மணியாச்சி அருகிலிருக்கும் சாலிகுளத்தில் குடியேறினான்.

அப்போது சாலிகுளம் பகுதியில் திருடர்களின் தொல்லை அதிகமாக இருக்கவே, அவர்களைப் பொம்முவே தனியனாக நின்று, போரிட்டு அடக்கினான். அந்தக் கெட்டிக்காரத்தனத்தால் 'கெட்டி பொம்மு' என்று அழைக்கப்பட்டுப் பின், அதுவே கட்ட பொம்முவாக மருவியது.

இந்நிலையில் சாலிகுளம் அருகிலுள்ள அழகிய பாண்டியபுரம் என்னும் நகரின் குறுநிலமன்னனான ஜகவீர பாண்டியனுக்கும் நண்பனாகி, அவனுடைய எதிரிகளை அடக்கவும் உதவினான். பிறகு, ஜகவீர பாண்டியனுக்குப் புத்திர பாக்கியமும் வேறு சந்ததிகளும் இல்லாமல் போகவே, அவனுக்குப் பிறகு கட்டபொம்முவே ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றான்.

அந்த கட்டபொம்முவின் சந்ததியில் வந்து நாற்பத்தேழாவதாகப் பட்டமேற்றவன்தான் வீரபாண்டிய கட்டபொம்மன். இது நடந்த ஆண்டு 1790. அப்போதுதான் வெள்ளைக்காரர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியை நிறுவித் தாங்கள், மன்னர்களுக்குக் கொடுத்த கடன்களுக்குப் பிரதியுபகாரமாக வரி வசூலித்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றுக் கொண்டார்கள். எல்லோரும் வரி கொடுத்து விட்ட நிலையிலும் கட்டபொம்மன் கொடுக்கவில்லை.

ஆறு ஆண்டுகளாகத் தூது விட்டும் கட்டபொம்மன் வரி கொடுக்காததால், அப்போது வரி வசூலிக்கும் பொறுப்பிலிருந்த ஆலன் துரையே நேரடியாக வந்து கேட்க, அப்போதும் கட்டபொம்மன், 'வானம் பொழிகிறது; பூமி விளைகிறது...' (இந்த வசனம்தான் அனைவருக்கும் அத்துபடியாயிற்றே!) என்று சொல்லி வரி கொடுக்க மறுத்து விட்டான்.

இந்நிலையில்தான் கும்பினித் தலைவர்கள் ஒன்று கூடி யோசித்தார்கள். வரி வசூலிப்பதற்கென்றே ஜாக்ஸன் துரையை நியமித்தார்கள். அதற்கு உதவியாக ஒரு படையையும் கொடுத்தார்கள். ஜாக்ஸன் துரை அனுப்பிய தூதை மதித்துக் கட்டபொம்மன் தனது பரிவாரங்களுடன் 24.8.1798 ஆம் நாளன்று கிளம்பிச் சென்றான். ஜாக்ஸன் துரையோ நெல்லை, குற்றாலம் என்று பல இடங்களுக்கு இழுத்தடித்துக் கடைசியில் 10.9.1798 ஆம் நாள் இராமநாதபுரத்தில் கட்டபொம்மனைச் சந்தித்தான்.

அந்தச் சந்திப்பில் கட்டபொம்மனைச் சூழ்ச்சியால் கைது செய்ய முயன்றான் ஜாக்ஸன் துரை. ஆயினும் கட்டபொம்மன் வீரம் காட்டித் தப்பி விட்டான். எனினும்

ும்





• தொல்பொருள் ஆய்வுத்துறை தோண்டிக் கண்டு பிடித்துள்ள கட்டபொம்மன் தர்பார் மண்டபம்.

கட்டபொம்மனின் அமைச்சர் தானாதிபதிப் பிள்ளையால் தப்ப முடியவில்லை.

பிள்ளையைச் சித்திரவதை செய்து, திருச்சிக்குக் கொண்டு சென்ற கும்பினியார் கடைசியில், 'கட்டபொம்மனின் பெருமைகளை அறிந்தோம். அவரை அழைத்துக் கொண்டு திருச்சியில் வந்து சந்தியுங்கள்' என்று பிள்ளையை விடுதலை செய்து தூது அனுப்பினர்.

அதன்படி கட்டபொம்மனும் வந்து சந்தித்தான். அவர்களுடனேயே இரண்டு வாரம் .தங்கியிருந்தான். நல்லுறவு மலர்ந்தது! அதன் நினைவாக வெள்ளையர்கள் பல பரிசுகளைக் கொடுத்துக் கட்டபொம்மனை அனுப்பி வைத்தனர். அச்சமயம் ஜாக்ஸன் துரையும் பதவி நீக்கம் செய்யப்பட்டு லூஸிங்டன் என்பவர் புதிதாக நியமிக்கப்படவே, நல்லுறவு மேலும் வளர்ந்தது.

இந்தச் சமயத்தில்தான் வசந்த காலம் வந்தது. அதன் இனிமையை முழுமையாக அனுபவிக்கச் சாலிகுளம் சாரலுக்குத் தனது மனைவியுடன் சென்றான் கட்டபொம்மன். அதனால் ஆட்சிப் பொறுப்பு அமைச்சரான பிள்ளையிடம் வந்தது. முன்பு தான் வெள்ளையர்களிடம் பட்ட அவமானத்திற்கும் சித்திரவதைக்கும் அவர்களைப் பழி வாங்குவதற்கு இதுதான் தக்க தருணம் என்ற எண்ணமும் பிள்ளைக்கு வந்துவிட்டது. அதனால், அமைச்சரான பிள்ளை, வெள்ளையர்களிடமிருந்து வந்த நல்லுறவுக் கடிதங்களைக் கட்டபொம்மனுக்கு அனுப்பி வைக்கவே இல்லை.

அப்போது நடந்த பிள்ளையின் மகன் திருமணத்திற்கு அதிக நெல் தேவைப்பட்டது. அதற்காக ஸ்ரீவைகுண்டத்தில் வெள்ளையர்கள் சேமித்து வைத்திருந்த நெல்லை, பிள்ளையின் ஆட்கள் இரவோடிரவாகச் சென்று யாருக்கும் தெரியாமல் கொள்ளையடித்து வந்து விட்டார்கள். இது வெள்ளையர்களுக்குக் கோபமூட்டிவிட்டது. பிறகு அமைச்சரின் செயலுக்காக வருந்திக் கட்டபொம்மன் மேற்கொண்ட சமரச முயற்சி எடுபடவில்லை. வேறு வழியின்றிப் போர் மூண்டது. பிறகு நடந்த விஷயங்கள்தான் அனைவருக்கும் தெரியுமே!

இத்தனை சரித்திர நினைவுகளையும் அசை போட்டுக் கொண்டே கட்டபொம்மன் நினைவுக் கோட்டையைச் சுற்றிப் பார்த்தோம். கட்டபொம்மனின் அன்றைய கோட்டையை வெள்ளையர்கள் இடித்துத் தரை மட்டமாக்கி விட்டார்கள் என்ற போதிலும் நமது தமிழக தொல் பொருள் ஆய்வுத் துறையினர், கட்டபொம்மனின் தர்பார் மண்டபம், அந்தப்புரம் ஆகிய பகுதிகளைத் தோண்டிக் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள். அதைப் பார்க்கும் போது, இத்தனை சிறிய தர்பார் மண்டபத்தில் இருந்து கொண்டா வெள்ளையர்களையே அந்தக் கலக்குக் கலக்கினான் என்று ஆச்சரியமாக இருக்கிறது.

கட்டபொம்மனின் நினைவாகப் பக்கத்திலேயே எழுப்பப்பட்டிருக்கும் நினைவுக் கோட்டை நல்லபடியாகப் பராமரிக்கப்படுவது சந்தோஷமான விஷயம். இருந்தாலும் ஒட்டப்பிடாரம் வரைதான் நல்ல பஸ் வசதி. அதன் பிறகு சுமார் இரண்டு கி. மீ. தூரத்திலிருக்கும் கட்டபொம்மன் கோட்டைக்குச் செல்ல பஸ்ஸுக்குத் தவமிருக்க வேண்டும்; அல்லது பொடி நடையாகத்தான் செல்ல வேண்டும். இதைத் தவிர வேறு குறை இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் கட்டபொம்மன் கோட்டை, ஒட்டப்பிடாரத்திலுள்ள வ. உ. சி. வீடு, எட்டையாபுரத்திலிருக்கும் பாரதி வீடு, மற்றும் மணி மண்டபம் ஆகிய எல்லாம் நல்லபடியாகப் பராமரிக்கப்பட்டால் மட்டும் போதாது. பாரதி பாடல்கள், வ. உ. சி. எழுதிய நூல்கள், கட்டபொம்மன் வரலாறு ஆகியவற்றை அரசே அச்சிட்டு, அந்தந்த இடங்களில் மக்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்தால் மிக்க பயனுடையதாக இருக்கும்.

— பிரின்ஸ்

அட்டையில் கட்டபொம்மன் நினைவுக் கோட்டை மற்றும் திருச்செந்தூர் கோயில். வண்ணப்படங்களும், வ. உ. சி. மாவட்டம் தொடர்பான மற்ற படங்களும்: கே. வி. ஆனந்த்



இனிய உறவு பூத்தது

சமீபத்தில் வெளியான இனிய உறவு பூத்தது படத்தைப் பற்றி சோவும் — எஸ். வி. சேகரும் சந்தித்துப் பேசுகிறார்கள்.

சோ துக்ளக் அலுவலகத்தில் அமர்ந்து, எச்சரிக்கை — 1000 எழுதிக் கொண்டிருக்கும் போது எஸ். வி. சேகர் உள்ளே நுழைகிறார்.

எஸ். வி. சேகர்: வணக்கம் சார்.

சோ: வாங்க சேகர் வாங்க. நாம இப்ப சந்திக்கிறது இனிய உறவு பூத்தது படத்தைப் பத்திப் பேச. அதனால அரசியல் வேண்டாம். நாங்கூட இந்தப் படத்தில கொஞ்சம் கூட அரசியலேயே கலக்கலே பார்த்தீங்களா? என்ன சொல்றீங்க?

எஸ். வி. சேகர்: ஓ. கே. ன்னு சொல்றேன். இந்தப் படத்தில உங்களுக்கு ஒரு பரவாயில்லே காரெக்டர். எனக்கு ஒரு லேட் வெயிட் காரெக்டர். நான் குண்டாகிக்கிட்டே வர்றதினால எனக்கு வெயிட்டான காரெக்டர் தான் கொடுக்கணும்னு டைரக்டர் முடிவு பண்ணிட்டார் போல இருக்கு. ஹி... ஹி...

சோ: இது ஜோக்கா? நானும் சிரிச்சுடறேன். ஹா..ஹா..ஹா... டைரக்டர் ஸ்ரீதர் கொஞ்ச நாள் அஞ்ஞாதவாசம் இருந்துட்டு எடுத்திருக்கிற படம். டைட்டில்ல கொஞ்சம் பழைமை இருக்கத்தான் செய்யுது.

எஸ். வி. சேகர்: டைட்டிலே விடுங்க சார். கதையை எடுத்துக்குங்க. பணக்காரப் பையன் ஒருத்தன் நெறையப் பொண்ணுங்களை டாவடிக்கிறான். அதை ஒரு நடுத்தரக் குடும்பப் பொண்ணு தடுக்கணுங்கறதுக்காக பணக்காரப் பையன் எம். டி. யா இருக்கற ஆபீஸ்லயே ஸ்டெனோவாச் சேர்ந்து...

சோ: பணக்காரப் பையனை லவ் பண்ற மாதிரி நடிச்சி, அவனை ஒரு சிக்கல்ல மாட்டி வெக்கிறதன் மூலம் கல்யாணம் பண்ணிக்கிட்டு, அந்தப் பையன் தொடாதப்பவே கர்ப்பம்னு சொல்லி...

எஸ். வி. சேகர்: என்ன சொல்லவர்றீங்க?... இதுவும் பழைய கதைன்னு?

சோ: ஓல்ட் ஒயின் இன் ந்யூ பாட்டில்.

எஸ். வி. சேகர்: கதையைக் கொடுத்திருக்கிற விதம் ஓரளவு நல்லாவே இருக்கே சார்.

சோ: அதான் புது பாட்டில்னு சொல்லிட்டேனே. என்னதான் சொல்லுங்க. இன்டர்வெல் வரைக்கும் கதை கொஞ்சம் கூவம் நதிக்கரையினிலேதான்.

எஸ். வி. சேகர்: அப்பமன்னு?

சோ: இழுத்துக்கிட்டே போவுதே!

எஸ். வி. சேகர்: கில்லாடி சார் நீங்க. உங்களையும் வாரிக்கிறீங்க. உங்களுக்குப் பிடிக்காதவங்களையும் வாரி விட்டுடறீங்க. இந்தப் படத்தில பாட்டு எல்லாம் இனிமையாயிருக்கு இல்ல?

சோ: இளையராஜாதானே? பாதிப் படம் வரைக்கும் ரீ—ரிகார்டிங் மியூஸிக்கே காணோம்; ஏக பிஜி போல இருக்கு. பாட்டுங்களில ரெண்டு ஏற்கெனவே கேட்ட ட்யூன். இருந்தாலும் இப்பக் கூட கேக்கறதுக்கு நல்லாத்தான் இருக்கு. அந்த உடற்பயிற்சிப் பாட்டு, நெஜமாவே சிக்குன்னுதான் இருக்கு. கூடிய சீக்கிரம் இளையராஜா அரசவை ஆஸ்தான இசை அமைப்பாளரா ஆயிடுவார் பாருங்க.

எஸ். வி. சேகர்: வாழ்த்தாதீங்க! வாழ்த்தாதீங்க. நீங்க வாழ்த்தினா நேர்மாறா நடக்கும். நாம ரெண்டு பேர் இருக்கோம். நான் ஹீரோ சுரேஷ்கூட 'மாமா' வேலை செய்ஞ்சுக்கிட்டு கன்னம் பழுத்துக்கிட்டு அசடு வழியறேன். சிரிக்கறாங்க. உங்க முழியைப் பார்த்தாலே சிரிக்கிறாங்க. அப்புறம் எதுக்கு செந்தில் — சரளா ஜோடி?

சோ: வேஸ்ட்தான். புரொடியூசர்கிட்ட பணம் இருந்திருக்கும். அதனால புக் பண்ணியிருப்பாரு. இன்டர்வெல்லுக்கு மேல சுரேஷை வாரணும்னு 'கொக்கரக்கோ'ன்னு பொட்டைக் கோழி கொக்கரிக்கறது நல்லா இருக்கு. நான் ரசிச்சேன்.

எஸ். வி. சேகர்: நானும்! எம். டி. சுரேஷ், நதியாவை



ஆபீஸ் நேரம் முடிஞ்சப்புறம் 'தோரஹா' பண்ற மாதிரி ஒரு ஸீன் வெச்சிருக்காங்களே. ரொம்ப இன்ட்ரெஸ்டிங்.

சோ: கரெக்ட். டைப் ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் பாட்டு ஸீன் கூட நல்லா இருக்கு. ஆனா என்ன, எனக்குப் படத்திலே வேலை இல்லேன்னு பெங்களூர் போய்டச் சொல்றாரு டைரக்டர். எதுக்கெடுத்தாலும் ஆடிட்டர், இன்கம்டாக்ஸ்னு வசனம் பேச வைக்கறாரு. அது எனக்கே போதும் போதும்னு ஆய்டிச்சி.

எஸ். வி. சேகர்: சுரேஷ் — நதியா ரெண்டு பேரும் நல்லாப் பண்ணியிருக்காங்க.

சோ: காமிரா கூட மோசமில்லே. அந்தப் பொண்ணு நதியா ஃபேஸ் ஃப்ரெஷ்ஷா இருக்கு.

எஸ். வி. சேகர்: ஸ்ரீதர் சார் டைரக்ஷன். அதனால கொழப்பாம இந்தப் படத்தைப் பத்தி ரெண்டு வார்த்தை சொல்லுங்களேன்.

சோ: வெயிட் போடற மெஷின் ஜோக், வெங்கடாஜலபதி படம் வாங்கற ஸீன் அது இதுன்னு இன்டர்வெல்லுக்கு அப்புறம் உக்காந்து பார்க்கற மாதிரி இன்ட்ரெஸ்டிங்கா ஸ்ரீதர் பண்ணியிருக்காரு. பார்த்துக்கிட்டே இருங்க. ஸ்ரீதரோட அடுத்த படம் இதை விடப் பெரிய ஸக்ஸஸ் ஆகப் போவுது.

எஸ். வி. சேகர்: வாழ்த்தாதீங்க. வாழ்த்தாதீங்க.

(இருவரும் சேர்ந்து சிரிக்கிறார்கள்.)

கற்பனைச் சந்திப்பு ஏற்பாடு:

ஜெயமன்மதன்



பாப்பா வளர்ச்சிக்கான திட உணவுகளில் பாசத்தாய் அளிக்கும் முதலிடம் ஃபாரெக்ஸ்®

தாய், தன் குழந்தைக்கு தேர்ந்தெடுக்கும் முதலான திட உணவு புதிய செழுமையான ஃபாரெக்ஸ். காரணம்:

பாப்பாவின் உடல் நலத்திற்கான புரதமும், ஜீரணத்திற்கு உகந்த கொழுப்புச் சத்தும் சரியான அளவில் கொண்டது.

பாப்பாவுக்கு ஆரோக்கியமான ரத்தத்தை தரவல்ல இரும்புச் சத்துள்ளது.

எலும்பும் பற்களும் வலுவோடு வளர்ந்திட கால்சியமும் ஃபாஸ்ஃபரஸும் 2:1 என்ற அளவில் சேர்க்கப்பட்டது.


தின்னத் தெவிட்டாதது; கலப்பதும் கொடுப்பதும் எளிது.



தாயன்பைக் கூறிடும் தரமிக்க திட உணவு ஃபாரெக்ஸ்®

பால் சேர்க்கத் தேவையில்லை! நீருடன் கலந்து கொடுத்தாலே போதும்.

CLARION/B/GX/15/203


இந்திய, அமைதி காக்கும் படை
விடுதலைப் புலிகள்



இலவச
தீபாவளிக்கு இலவச வேஷ்டி, சேலை


வீரப்பன்
புரட்சித் தலைவரை வரவேற்க மந்திரிகளை நான் முந்திக்கணும்!
பண்ருட்டி



கல்கி

1987 அக்டோபர் 25
மலர் 46 இதழ் 13
பிரபவ ஐப்பசி 8



ஈழத் தமிழரின் முதல் எதிரிகள்!

ஈழப் பிரச்னையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களை ஒதுக்கிவிட்டு, மத்தியஸ்தம் செய்யப் போன இந்தியா, இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட போது, இதன் பின்விளைவாக நாளை என்ன விபரீதம் நடக்கும் என்று அஞ்சினோமோ அந்த விபரீதம் நடந்தே விட்டது! அதாவது இந்திய ராணுவம் தமிழர்களுடன் — விடுதலைப் புலிகளுடன் — மோதும்படியான சந்தர்ப்பம் உருவாகிவிட்டது. இது மிகவும் வருந்தத்தக்க நிலைதான் என்றாலும் விடுதலைப் புலிகள் தங்கள் தலையில் தாங்களே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டனர் என்பதிலும் சந்தேகமேயில்லை.

'இந்த ஒப்பந்தத்துக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை' என்று சொன்னவர்கள், 'எங்கள் லட்சியத்தை அடைய இறுதி வரை போராடுவோம்' என்று கூறியவர்கள், அத்துடன் நில்லாது, 'எங்கள் போராட்டப் பாணியை மாற்றிக் கொள்வோம் — காந்திய சத்தியாக்கிரஹ நெறியை இனி கடைப்பிடிப்போம்' என்றும் பேசினார்கள். 'இந்திய ராணுவத்துடன் மோத எங்களுக்கு விருப்பமில்லை' என்று கூறி, ஆயுதங்களை ஒப்படைக்கவும் ஆரம்பித்தார்கள். ஜனநாயக முறையில் அமையப் போகிற ஆட்சியை வரவேற்கவும், அதில் பங்கேற்கவும் தயாரானார்கள். அதற்கான பேச்சு வார்த்தைகள், நடவடிக்கைகளில் ஈடுபடவும் தொடங்கினார்கள். ஆனால் இந்தப் பெருந்தன்மையெல்லாம் வெறும் நாடகம் என்பது சீக்கிரமே தெரிந்து போய்விட்டது. சரணடைந்திருக்க வேண்டிய ஆயுதங்கள் மறைத்து, ஒளித்து வைக்கப்பட்டன. சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தார்கள். விடுதலைப் புலிகள் சிலரை ஸ்ரீலங்கா ராணுவம் கைது செய்து கொழும்புவுக்கு அழைத்துப் போக முற்பட்டது குற்றம்தான். ஆனால் அவர்களை விடுவிக்க இந்தியத் தூதரகம் முயற்சி மேற்கொண்டிருக்கும் போதே, அவர்கள் சயனைட் விழுங்கித் தற்கொலை செய்து கொள்ள, விடுதலைப்புலிகள் எதிர் பார்த்திருந்த சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. கைதாகியிருந்த ஸ்ரீலங்கா ராணுவ வீரர்களைக் கொன்றார்கள்; தொடர்ந்து நூற்று அறுபதுக்கு மேற்பட்ட அப்பாவிச் சிங்கள மக்களைக் கொன்று குவித்தார்கள். இந்திய அமைதிப் படையையும் தாக்கத் துணிந்தார்கள். இந்த அதிக்கிரமங்களைப் பார்த்துக் கொண்டு இந்திய அமைதிப் படை சும்மா இருக்க முடியாது; இந்தியா — இலங்கை ஒப்பந்தம் அதற்கு இடம் தராது என்பது தெரிந்தே விடுதலைப்புலிகள் இப்படி நடந்து கொண்டார்கள். அது அவர்கள் தலைவிதியை நிர்ணயித்ததாகிவிட்டது. வன்முறையைப் பயன்படுத்தி அவர்களை வளைத்துப் பிடிக்கவும் ஆயுதங்களை நிர்ப்பந்தமாகப் பறிக்கவும் வேண்டிய கட்டாயம் இந்திய அமைதிப் படைக்கு ஏற்பட்டுப் போயிற்று.

இப்போது தோல்வியின் எல்லையில் உள்ள விடுதலைப் புலிகள், மீண்டும் போர் நிறுத்தம், பேச்சு வார்த்தை என்று சமாதானத் தூது அனுப்புகிறார்கள். இது அவர்களுடைய வஞ்சனையின் அடுத்த கட்டமே. அந்த வஞ்சனைக்கு இன்னொரு உதாரணமாக விளங்குவது அப்பாவித் தமிழர்களை — கிழவர்கள், பெண்கள், குழந்தைகளை — அரணாக நிற்க வைத்து அவர்களுக்குப் பின்னால் ஒளிந்திருந்தபடி விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப் படையைத் தாக்குவதாகும். சாமானியத் தமிழர்கள் பலியாகக் கூடாது என்பதாலேயே நிதானத்துடன் செயல்பட்டு வரும் இந்திய அமைதிப் படை, இதன் காரணமாகவே விமானக் குண்டுவீச்சையும் தவிர்த்து வருகிறது. இதனால் நமது அமைதிப் படையினர் பலர் மரணம் அடையவும் நேர்ந்திருக்கிறது.

இதையெல்லாம் எண்ணிப் பாராமல் இங்கு தி. மு. க., 'ஈழத் தமிழருக்கு இந்திய ராணுவத்தால் ஆபத்து!' என்று லபோ திபோ என்று அடித்துக் கொள்வதை, வெட்கக் கேடு மட்டுமல்ல, தேசத் துரோகம் என்றுதான் கூற வேண்டும். ஈழத்தில் நடக்கும் போர், ஜனநாயக அமைதிக்கும் அராஜகக் கொலை வெறிக்கும் இடையில் நடக்கும் போர் என்பதை உணராமல்; இந்தியா — இலங்கை ஒப்பந்தத்தின் வெற்றிக்கு எம். ஜி. ஆர். தான் காரணம் என்று சில காலம் முன்பு கூட மார்தட்டிக் கொண்டதை மறந்து, இன்று அ. தி. மு. க. தலைவர்களிலும் சிலர், தி. மு. க. வுடன் போட்டி போட்டுக் கொண்டு, ஈழத் தமிழருக்காகப் புலம்பிக் கண்ணீர் உகுக்கிறார்கள். ஆக மொத்தத்தில், ஈழத் தமிழரின் அவஸ்தையில் இவர்கள் குளிர் காய்ந்து, பிராபல்யம் அடையப் பார்க்கிறார்கள் என்பதே உண்மை.

ஈழத் தமிழரின் போராட்டத்தில் விடுதலைப் புலிகள் போன்ற பயங்கரவாதிகளை முடுக்கிவிட்டு வேடிக்கை பார்த்ததே இந்தக் கட்சிகள்தாம். அறிஞர் ஆனபடியால் அண்ணா, தனித் தமிழ்நாடு கோரிக்கையைக் கைவிட்டு, 'உறவுக்குக் கைகொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்று வழிகாட்டினார். இந்த உயர்ந்த கொள்கையை ஈழத் தமிழரும் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்துவதற்குப் பதில், போராளிகளுக்குப் பணம் தருவதும் சுதந்திரத் தனித்தமிழ் ஈழக் கோரிக்கையைத் தட்டிக் கொடுத்து ஊக்குவிப்பதுமாய் இருந்த, இருக்கிற இவர்களே ஈழத் தமிழரின் முதல் எதிரிகள்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

பிரமிப்பூட்டும் சரித்திரங்கள்!



* பிரம்மாண்டமான அளவில் மலையைக் குடைந்து செதுக்கப்பட்ட மலைக்கோவில்.

தூத்துக்குடிக்கும் திருச்செந்தூருக்கும் இடையில், கடலை விட்டுச் சுமார் ஏழெட்டுக் கி. மீ. உள்வாங்கியிருக்கிறது கொற்கை. இன்றைக்கு வெறும் வயல் வெளிகளாகவும் குளமாகவும் தெரியும் கொற்கை, சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மிகச் சிறந்ததொரு துறைமுகப்பட்டினம் என்பது ஆச்சரியமான செய்தி. இதன் அந்தக் காலத்துச் சரித்திரத்தைப் புரட்டப் புரட்ட பிரமிப்பாக இருக்கிறது.

லண்டன் காட்சி சாலையிலுள்ள நான்கரை அங்குலம் சுற்றளவுள்ள மிகப் பெரிய முத்தும் சோவியத் யூனியன் காட்சி சாலையிலிருக்கும் இருபத்தெட்டு காரட் எடையுள்ள மிகப் பெரிய முத்தும் இந்தக் கொற்கைக் கடற்கரையிலிருந்து எடுக்கப்பட்டவைதான் என்பது எத்தனை பெரிய பெருமை! ரோம சாம்ராஜ்ய வரலாற்றுப் புலவரான பிளினி என்பவர், 'கொற்கையிலுள்ள முத்துக்களையும் மணிகளையும் பெறுவதற்காக இந்த ரோமர்கள் ஏராளமான பொற்காசுகளைக் கொண்டு போய்க் கொட்டுகிறார்களே...' என்று வேதனைப்படும் அளவுக்குக் கொற்கையின் முத்து சிறப்புப் பெற்றிருந்திருக்கிறது.


ரோமானியர்கள் மட்டுமல்ல; மற்ற மேற்கு நாட்டவர்களான எகிப்தியர், சுமேரியர், கிரேக்கர், யவனர், அரேபியர், பாரசீகர் ஆகியோரும் பர்மியர், சீனர், ஈழகர், சாவகர், கம்போசகர் ஆகிய கிழக்காசிய நாட்டவர்களும் சேர்ந்தே கொற்கையின் முத்துக்களையும், மணிகளையும் கண்டு வியந்து பொற்காசுகளைக் கொண்டு வந்து கொட்டியிருக்கிறார்கள். இப்படி அளவுக்கு மீறிப் பொன் கிடைத்ததால் அன்றைய கொற்கைப் பட்டினத்தின் கோட்டைக் கதவே பொன்னாலானதாக இருந்திருக்கிறது. மக்களின் வீடுகளிலிருந்த குடங்களும், சாப்பிடும் தட்டுகளும்கூடப்பொன்னாலேயேஇருந்திருக்கின்றன!

இடைச்சங்கம் நிறுவிய வெண்டேர் சடையன் முதல் முடத்திருமாறன் வரை எழுபத்தொன்பது பாண்டிய மன்னர்களுக்கு இந்தக் கொற்கைதான் தலைநகராகவும் துறைமுகப்பட்டினமாகவும் இருந்திருக்கிறது. பின்னர் ஏற்பட்ட இயற்கையின் மாற்றத்தால் கடல் பின்வாங்கிப் போனதால்தான் தங்கள் தலை நகரை மதுரைக்கு மாற்றியிருக்கிறார்கள், பாண்டியர்கள்.

இவையெல்லாம் வெறும் கற்பனைகள் அல்ல; பல மேல்நாட்டுச் சரித்திர ஆசிரியர்களும் நம் நாட்டு அகழ்வாராய்ச்சி நிபுணர்களும் கண்டுபிடித்து எழுதியுள்ள உண்மைகளே. முன்பு கண்ணகி இட்ட சாபத்




* கொற்கை: ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் இருந்து வரும் வன்னிமரம்.



* அக்கசாலை விநாயகர் கோயில்



* கழுகுமலை: சமணச் சிற்பங்கள்.



* புதைந்து கிடக்கும் தீர்த்தங்கரர் சிலை.

தால் சுமார் பன்னிரண்டாண்டுகள் மழை பொய்த்துப் போனதாகவும், அதற்குச் சாப விமோசனமாகப் பாண்டியன் நெடுஞ்செழியனின் தம்பி வெற்றிவேல் செழியன் கண்ணகிக்குக் கொற்கையில் சிலையெடுத்து வழிபட்டதாகவும் ஒரு வரலாறு சொல்லப்படுகிறது.

அந்தக் காலத்தில் பாண்டியர்கள் தங்கள் நாணயங்களை அச்சடித்த தெருவுக்கு அஃக சாலை என்று பெயர். அதை நினைவுபடுத்துகிற வகையில் இன்றைக்கும் அஃகசாலை விநாயகர் கோயில் ஒன்று இருக்கிறது. இன்று விநாயகர் கோயிலாக இருந்தாலும் இது அக்காலத்தில் சிவன் கோயிலாகத்தான் இருந்திருக்கிறது. ஆம்; இக்கோயில் சுவர்களிலுள்ள கல்வெட்டுக்களில் இக்கோயிலை 'அஃகசாலை ஈஸ்வரமிடையார் திருக்கோயில்' என்றும், 'கொற்கை மதுரோதய நல்லார் திருக்கோயில்' என்றும் தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும் ஆயிரக்கணக்கான வயதுடைய வன்னிமரம் ஒன்றும் கொற்கையில் இருக்கிறது. அதன் அருகில் தோண்டிய போது தான் ஏராளமான நாணயங்கள் கிடைத்திருக்கின்றன. அதன் அருகில் இருக்கும் தீர்த்தங்கரர் சிலை அக்காலத்தில் கொற்கையிலும் சமண மதத்தின் வீச்சு இருந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

இப்படி, சரித்திர காலத்தில் உலகச் சிறப்பு வாய்ந்து வந்திருக்கும் கொற்கை, சுற்றுலாத் தலமாக்கப்படும் என்று அண்மையில் அறிவித்துள்ளார் சுற்றுலாத்துறை அமைச்சர் வி. வி. சுவாமிநாதன். நல்லதுதான் என்றாலும் இன்னும் பழைய கொற்கையின் சிறப்புக்கள் பற்றி முழுமையாக அகழ்வாராய்ச்சி செய்யப்படவில்லை என்றே பலரும் கருதுகிறார்கள் என்பதால், தமிழக தொல்பொருள் ஆய்வுத்துறை இன்னும் அதை ஆராய்ந்து முழுமையான தகவல்களைக் கண்டறிந்து வெளியிட வேண்டும் என்பதே நமது ஆவல்.

இதுபோலவே, கோவில்பட்டி அருகிலுள்ள கழுகுமலையைப் பற்றிய சரித்திரங்களும் முழுமையாக ஆய்வு செய்யப்படவில்லை என்றே தோன்றுகிறது. மகாபலிபுரத்தில் எப்படி ஒரே கல்லில் ஒவ்வொரு ரதமும் செதுக்கப்பட்டுப் பிரமிப்பூட்டுகிறதோ, அதேபோல் கழுகுமலையின் ஒரு பகுதியில் மலையையே செதுக்கி பிரம்மாண்டமான ஒரு சமணர் கோயிலை உருவாக்கியிருக்கிறார்கள். என்ன காரணத்தாலோ 'வெட்டுவான் கோயில்' எனப்படும் அக்கோயிலின் முடிவு வேலைகள் நடைபெறாமலேயே போயிருக்கின்றன.

அந்த மலைக்கோயிலுக்குக் கொஞ்சம் மேலேசென்றால், ஏராளமான சமணதீர்த்தங்கரர்களின் உருவங்கள் பொறிக்கப்பட்ட ஒரு பெரிய பாறைப் பகுதி. அதற்கும் மேலே பெரிய அளவில் ஒரு தீர்த்தங்கரரின் சிலை. இவை இரண்டுக்கும் இடையில் ஒரு குடைவரை மண்டபம். அதற்குள் ஓர் ஆள் மட்டுமே தவழ்ந்து செல்லும் அளவில் ஒரு சுரங்கப் பாதை. தைரியமாக அந்த மையிருட்டில் தவழ ஆரம்பித்தால் வளைந்து வளைந்து சென்று சுமார் இருபதடி தூரத்தில் முடிவடைந்து, ஒரு சிறிய ஹால்!

அந்தக் காலத்தில் இந்தக் கழுகு மலையில் சமண மதம் போதிக்கப்பட்டிருக்கிறது. அதில் படித்த மாணவர்கள் மாணாக்கர் என்றும், மாணவிகள் மாணாக்கியர் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். பிறகு எப்படி யார் காலத்தில் என்ன காரணத்திற்காக அவையெல்லாம் மறைந்து போயின? மலைக் கோயில் சரியானபடி முடிக்கப்படாததற்கு என்ன காரணம்? இவை பற்றிய விவரங்கள் ஏதும் அங்கு சரியானபடி குறித்து வைக்கப்படாததுதான் வருத்தமடையச் செய்யும் விஷயம். அத்தனை ஏன்? இப்படியொரு பிரம்மாண்டமான மலைக்கோயில் இருப்பதைக் கூட நமது சுற்றுலாத் துறையினர் விளம்பரப்படுத்தாததை என்னவென்று சொல்ல?

— இளங்கோவன்

இரண்டாம் தலைமுறை

சோழன் எக்ஸ்பிரஸ் தஞ்சை சந்திப்பை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கும் மகள் விஜியுடனும், அடுத்த ஆண்டு டாக்டர் பட்டம் பெறப் போகும் மகன் பட்டாபியுடனும் பயணம் செய்த கணபதிராமின் மனம் நிலையில்லாமல் புலம்பிக் கொண்டிருந்தது.

''இந்தப் பட்டாபி பூங்கோதையை மணக்கச் சம்மதிப்பானா?'' —தம்மைத் தாமே இரண்டாயிரத்துப் பத்தாம் முறையாகக் கேட்டுக் கொண்டார்.

அவர் கிராமத்தில் பிறந்து, பெற்றோரை இழந்து, விதவையான தம் அக்காவின் நிழலிலேயே வளர்ந்தவர். அங்கிருந்த படியே தஞ்சைக்குப் போய் வந்து பட்டப் படிப்பை முடித்ததும், தம்மை வளர்த்தவளின் ஒரே மகளான லட்சுமியையே கைப்பிடித்தவர். பம்பாய் பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தில் நல்ல வேலை கிடைத்து அங்கேயே தங்கி விட்டவர். அக்காவின் சாவிற்குப் பிறகு, அந்தக் கிராமத்தில் அவருக்கு உறவென்று சொல்லிக் கொள்ள இருந்த ஒரே ஜீவன் — வேத மூர்த்தி.

அவர் கணபதிராமின் ஆசிரியர்; ஆலோசகர்; வழிகாட்டி. வறுமைச் சூழலிலும் அவரைப் படிக்கச் சொல்லி உற்சாக மூட்டியவர். பல சமயங்களில் பண உதவியும் செய்திருக்கிறார்.

வேதமூர்த்திக்கு இரண்டு பெண்கள். மூத்தவள் ராஜேஸ்வரி கட்டிய கணவனை மூன்றே மாதத்தில் பறிகொடுத்து விட்டு விதவையானவள். அடுத்தவள் பூங்கோதை பத்தாம் வகுப்பு முடித்துவிட்டு வீட்டிலிருந்தாள். ஏழை ஆசிரியரின் மகள் பூங்கோதையைத் தம் மகனுக்கு மணமுடித்து, தம் நிலை உயரக் காரணமானவருக்கு நன்றிக் கடன் தீர்த்தே ஆக வேண்டுமென்று உறுதி பூண்டிருந்தார் கணபதிராம். அதனைச் செயல்படுத்துவதற்காகவே இந்தக் கிராமத்துப் பயணம்!

இந்தத் திருமணத்திற்குத் தம் மகனை எப்படி சம்மதிக்க வைக்கப் போகிறோம் என்ற கவலை தான் அவரை மலைக்க வைத்தது.

கணபதிராம் தம் மகள், மகனுடன் தஞ்சை ரயிலடியில் கால் வைத்தார். பல ஆண்டுகளாகப் பார்க்க முடியாத தாயின் மடியில்





"நாங்க இஷ்டம்போல லஞ்சம் வாங்கத் தடையா இருக்கிறது எங்க மானேஜர் நந்தகோபால்தான்..."

"'நந்தி'கோபால்ன்னு சொல்லு."

— மணியன் தர்மலிங்கம்.

தலை வைத்துக் கொள்வது போல ஒரு சிலிர்ப்பும், பூரிப்பும் ஏற்பட்டது அவருக்கு.

கண்களைச் சுழல விட்டார். ஒன்பது ஆண்டுகளுக்கு முன் பார்த்தது போலவே, எந்த மாற்றமுமின்றி நின்றது ரயில்வே கட்டடம். ஒரு வித்தியாசம், அன்றைக்குத் தம் மனைவி லட்சுமியோடு வந்திருந்தார் கணபதி ராம். இன்றோ, தம் மனைவியை பறிகொடுத்தவராய், வயதுக்கு வந்து விட்ட தம் பிள்ளைகளோடு சொந்த ஊரை நோக்கி பயணப்பட்டிருந்தார்.

"நடுவிலே எத்தனை முறை கிராமத்துக்கு வந்திருக்கீங்க? நாங்க இப்பத்தான் முதல் தடவையாக வர்றோம், இல்லே டாடி?" — இது விஜி.

"முதல்லே இரண்டு வருஷம் அடுத்தடுத்து பட்டாபியைத் தூக்கிக்கிட்டு நானும் உங்கம்மாவும் கிராமத்துக்கு வந்தோம். இரண்டாம் தடவை வந்த போதுதான் அக்கா — உங்க பாட்டி — இறந்துட்டாங்க. அப்புறம் கிராமத்துக்கு வருவதே நின்னு போச்சு. அதுக்கப்புறம் பல வருஷம் கழிச்சு 1977—ல் உங்களை பம்பாயிலேயே விட்டுட்டு நானும் அவளும் மட்டும் வந்திருந்தோம்." — அவர் கண்கள் கலங்கின.

மூக்கை உறிஞ்சி, எச்சிலை விழுங்கிக் கொண்டார்.

நிமிர்ந்து பிள்ளைகளைப் பார்த்தார். அவர்கள் கண்களும் பனித்து நீரூறியிருந்தன. தலையைக் குனிந்து கொண்டார்.

சில விநாடிகள் மௌனம்.

மூவரும்கிராமத்துக்குச்செல்லும்பஸ்ஸில் ஏறி உட்கார்ந்த போது, கதிரவன் மேற்கு நோக்கி இறங்கத் துவங்கியிருந்தான்.

அவர்களது தோற்றத்தையும்உடையையும் பார்த்த கண்டக்டர் "திருவாரூரா சார்?" என்றார்.

"இல்லே. அம்மாப்பேட்டை மூணு டிக்கெட்" என்றார் கணபதிராம்.

குறுகலான சாலை. இருபுறமும் வயல் பரப்புகள். கட்டம் போட்டாற்போலக் கண்ணுக்கு எட்டிய வரை வரப்புகள்.

சாலை நெடுகிலும் கதிர்களைப் பரப்பிக் காய வைத்திருந்தார்கள்.

"என்னப்பா இது பெரிய நியூசென்சா இருக்கு? இப்படி ரோட்டை அடைச்சிக்கிட்டு வைக்கோலைப் பரப்பிட்டா பஸ் போறதா இல்லையா?" என்றான் பட்டாபி.

"இது இங்கே வழக்கமா நடக்கறதுதான் பட்டாபி. அறுவடைக் காலம்னு சாலையெல்லாம் களமா மாறிடும். பஸ்ஸெல்லாம் அட்ஜஸ்ட் பண்ணி மெதுவாகத்தான் போகும்."

"அது சரி! நாம அம்மாப்பேட்டை போய்ச் சேரவே இருட்டாயிடும். அங்கிருந்து இரண்டு கிலோ மீட்டர் நடக்கணும்னு வேற சொன்னீங்களே? எனக்கு இதெல்லாம் பிடிக்கவே யில்லே டாடி"

'கிராமத்துச் சூழ்நிலையே பிடிக்காதவன் அங்கேயே வளர்ந்த ஒருத்தியை ஏத்துக்குவானா?' அவர் மனம் மீண்டும் அரற்றியது.

அம்மாப்பேட்டையில் இறங்கியவுடனேயே ஓர் ஒற்றை மாட்டு வண்டிக்காரன் அவர்களை எதிர் கொண்டு அழைத்தான்.

"சாமி. நீங்க பம்பாயிலேருந்து தானே வர்றீக? வாத்தியார் தான் என்னை அனுப்பிச்சார், உங்களை கூட்டியாறச் சொல்லி"

வண்டியைப் பார்த்ததும் பட்டாபி முகம் சுளித்தான். "இங்கே சைக்கிள் ரிக்ஷா கூட கிடையாதா? இந்த பெண்ட்டேசட காலை மடக்கி உட்கார முடியாது. நான் நடந்தே வர்றேன்"

கணபதிராமிற்குக் கவலை அதிகமானது. 'இவன் பூங்கோதையை மணக்க சம்மதிப்பானா?'

தந்தையும் மகளும் வண்டியில் உட்கார, 'சலங் சலங்' என்ற மாட்டின் மணியோசையுடன் வண்டி நகர்ந்தது. பட்டாபி கூடவே நடக்க ஆரம்பித்தான்.

சாலையின் மேடு பள்ளங்களில் 'தடங் தடங்' என்று வண்டிச் சக்கரங்கள் விழுந்து எழுந்த போது, வண்டி பல்லக்கு போலப் பக்கவாட்டில் அசைந்த போது, விஜி 'அப்பாடி' என்று சப்தமிட்டுச் சிரித்தாள்.

ஒருவழியாக 'ஓ......ஓ......ஓஹோ...' என்று வண்டிக்காரன் வாத்தியார் வீட்டு வாசலில் மாட்டை இழுத்துப் பிடித்தபோது, பகலும் இரவும் சந்தித்திருந்தன.

வண்டிச் சப்தம் கேட்டு வெளியே ஓடி வந்தவள் — பூங்கோதை. "வாங்க வாங்க" என்றவள் பட்டாபியைப் பார்த்ததும் சரேலெனத் திரும்பி வீட்டிற்குள் ஓடி விட்டாள். அவளது செய்கையைக் கண்ட பட்டாபி மீண்டும் முகம் சுளித்தான்.

வேதமூர்த்தி கணபதிராமையும் பிள்ளைகளையும் பார்த்ததில் ரொம்பவும் சந்தோஷப்

‘ராஜீவ்காதல்’

பட்டார். பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நலம் விசாரித்துக் கொண்டார்கள். பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

அவர்கள் கிராமத்திற்கு வந்து ஒரு வாரமாகி விட்டது. இதற்குள் பட்டாபிகூட கிராமத்தை ரசிக்க ஆரம்பித்து விட்டான். பூங்கோதை அவனோடு சகஜமாகப் பேச ஆரம்பித்திருந்தாள். சமையல்கட்டே கதியெனக்கிடந்த ராஜேஸ்வரிகூட உற்சாகமாக இருந்தாள். காலையானால் ஆற்றுக்குக் குளிக்கச் செல்வது, பகல் முழுவதும் அரட்டை அடிப்பது, மாலையானால் வயல் வரப்பிலும் ஆற்று மணற் பரப்பிலும் உல்லாசமாய் 'வாக்' போவது என்று பொழுது சுகமாகக் கழிந்து கொண்டிருந்தது.

கணபதிராமின் மனம் மட்டும் நிம்மதியற்றிருந்தது. தாம்கிராமத்துக்குவந்ததன் முக்கிய நோக்கம் பற்றி எப்படி பட்டாபியிடம் பேச ஆரம்பிப்பது என்று புரியாது தவித்தார். அடுத்த வருடம் டாக்டராகப் போகிறவன், கல்லூரிக் காற்றைக் கூட சுவாசிக்காத ஒரு கிராமத்துப் பூங்கோதையை மணக்க விரும்புவானா? தூக்கியெறிந்து பேசி விட்டால்?....

அன்று காலை ஆற்றுக்குச் செல்லும் போது கிடைத்த தனிமையைப் பயன்படுத்திக் கொண்டு மெல்ல விஷயத்தைத் துவக்கினார்.

''நாம் பாம்பே புறப்பட இன்னும் இரண்டு நாள் தான் இருக்கு...''

''ஆமாம் டாடி. ஒரு வாரம் ஓடினதே தெரியலே. இன்னொருவிஷயம்.....இந்தகிராமமெல்லாம் எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. டிகிரி முடிச்சதும் இந்தப் பக்கமே ஒரு கிராமத்தில் டிஸ்பென்சரி ஆரம்பிச்சு இவங்களுக்கு ஹெல்ப் பண்ணணும்னு ஆசைப்படறேன்.''

''வெரி குட் பட்டாபி! இட் ஈஸ் ரியலி குட்.''

''அதைவிட முக்கியமான விஷயம் ஒண்ணு. உங்க அனுமதியோட வேதமூர்த்தி சார் மகளையே கல்யாணம் பண்ணிக்கிறதா நான் முடிவு பண்ணிட்டேன்''—பட்டாபியின் வார்த்தைகளில் உறுதியிருந்தது.

தந்தை மகனை ஆச்சரியத்தோடு நிமிர்ந்து பார்த்து விட்டுக் கேட்டார், ''நல்லா யோசிச்சியா? அவ நாகரிகமறியாத கிராமத்துப் பொண்ணு!''

''நானே கிராமத்துலேவந்து தானே தங்கப் போறேன்!''

''அவ படிக்காதவ. எஸ்.எஸ்.எல்.சி. தான் முடிச்சிருக்கா''

''ஒரு நல்ல மனைவியா இருக்க அது போதுமே!''

கணபதிராமிற்கு மகிழ்ச்சி பொங்கியது.

''அப்பா.... பூங்கோதையைக் கல்யாணம் பண்ணிக்கிறதா முடிவே பண்ணிட்டியா?''

''இல்லேப்பா. நான் சொன்னது ராஜேஸ்வரியை....''

''என்னடா இது?....என்ன சொல்றே?''—அதிர்ந்தார்.

''ஆமாம் டாடி! பூங்கோதையை யார் வேணும்னாலும் ஏத்துக்குவாங்க. ஆனால், விதவையான ராஜேஸ்வரிக்கு யார் வாழ்வு தருவாங்க? அதனால் நானே ராஜேஸ்வரிக்கு வாழ்வு தர முடிவு பண்ணியிருக்கேன்.''

கணபதிராம் முதலில் சற்று அதிர்ந்து போனாலும், அடுத்த கணமே அவரது நெஞ்சு பூரிப்பால் நிறைந்து போனது. தம் மகன் மனத்தளவில் தம்மைக் காட்டிலும் முன்னேறியிருப்பதைக் கண்டு அவரது சந்தோஷம் எல்லை கடந்து கொண்டிருந்தது.

அடடே! ஒரு நல்ல திட்டம்!

ஒரே ஒரு பெண் குழந்தையின் பெற்றோர், குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் அவர்களுக்குக் குஜராத் அரசு ஆறாயிரம் ரூபாயைப் பரிசாக வழங்குகிறது. யூனிட் டிரஸ்ட், ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஆகியவற்றுடன் இணைந்து குஜராத் அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது. அப்பெண் குழந்தைக்கு இருபத்தோரு வயதாகும் போது இப்பரிசுத் தொகை 48,000 ரூபாயாகக் கிடைக்கும். பெண் குழந்தையென்றால் வேண்டாமென்று ஒதுக்கிக் கருச்சிதைவு செய்து கொள்ளும் நிலையை மாற்றி, பெண் குழந்தை பிறப்பதை வரவேற்கக் குஜராத் அரசு கொண்டு வந்துள்ள திட்டம் இது!

ஆதாரம்: சண்டே; — கீதா பங்க



அழகோ அழகு ஃப்ரெஸ்கா
அற்புத நறுமணம் ஃப்ரெஸ்கா



கோத்ரெஜ் அறிமுகப்
படுத்துகிறது ஃப்ரெஸ்கா—
அற்புதமான சோப்.

ஃப்ரெஸ்கா—நிறைந்த சுகந்தம்,
நிகரில்லா நறுமண சோப்.

வளமான நுரை—தந்திடும்
வந்திடும் அதிக நாட்களுக்கு
ஃப்ரெஸ்கா சோப்.

அடக்கமான விலையிலே
அற்புதமான சோப் ஃப்ரெஸ்கா.

Godrej

Fresca

THE GOOD VALUE TOILET SOAP

அழகான அற்புதமான சோப் வழங்குவோர் கோத்ரெஜ்

Enterprise/GS/61R TmC

நீங்கள் முழுமனதுடன் நம்பக்கூடியவை இரண்டு.



கிரிக்கெட் வீரர் திலீப் வெங்சர்க்கர் உங்களைக் கைவிடமாட்டார். இம் முறையும் அவர் அனுசயமாக விளையாடி அற்புதங்களை நிகழ்த்துவார் என எதிர் பார்க்கலாம். அதே ஆட்டத்திலும் அவர் ''விஸ்டனின்'' மிகச்சிறந்த ஐந்து ஆட்டக்காரர்களில் ஒரு சிறப்பான இடத்தையும்,கம்ப்யூட்டர் மூலமாக ''டிலாயிட்டிஸ்'' கணிப்பில் உலகத்திலேயே முதல்தரமான பேட்ஸ்மேன் என்ற பெயரையும் பெற்றுள்ளார். அதேபோல் உங்களுக்கு மிகச்சிறந்த தரமான நம்பக் கூடிய பொருளை விளம்பரப் படுத்துகிறோம்.

அதுதான் கிராம்ப்டன் கிரீவ்ஸ் கலர் டிவி.

இது மிக நவீன தொழில்நுட்பங்கள் பொருந்திய டெலிவிஷன் —உங்கள் உடமை யாக்கக் கூடிய இந்த விசேஷ டிவி, பல சிறப்பம்சங்களைக் கொண்டதாகும்.

இதைவிட பரிபூரண 12-மாத உத்தரவாதம் தருகிறது. மிக விலையுயர்ந்த பகுதியான பிக்சர் ட்யூபுக்குக்கூட இதன் காப்புறுதி உள்ளது.

இணையில்லா ஸர்விஸ் பின்பலம் உள்ளது.

நினைவிருக்கட்டும் காலமெல்லாம் உங்கள் நம்பிக்கைக்கு உரியது கிராம்ட்டன் கிரீவ்ஸ்.

ஆம், காத்துக்கொள்ள வேண்டிய எங்கள் பெயரும் புகழும் மிகப் பெரியது அன்றோ.



Crompton Greaves

கிராம்ப்டன் கிரீவ்ஸ் டிவி
ஏனெனில், பல்லாண்டு இன்பமூட்டும் சாதனங்கள் சில உண்டு.

கன்ஸ்யூமர் எலெக்ட்ரானிக்ஸ் & ஹவுஸ்ஹோல்டு அப்ளையன்ஸஸ்,* கிளை; நம். 3எ கோடம்பாக்கம் ஹை ரோடு,
த.பெ.நம். 3316, நுங்கம்பாக்கம், சென்னை 600 034.

13

நிற்க நிழல் வேண்டும்

'டொக், டொக்' என்று லேசாகக் கதவு தட்டப்படும் ஓசை கேட்டுப் பிரபு திடுக்கிட்டு எழுந்தான். கனமான திரைச் சீலைகளால் ஜன்னல்களை மூடியிருந்ததில் அறை இருட்டாக இருந்தது.

திரைச்சீலையை விலக்கிக் கைக்கடிகாரத்தைப் பார்த்தபோது ஒன்பது மணி ஆகியிருந்தது.

அவன் அவசரமாகக் கதவைத் திறந்தான். வெளியில் அவன் தங்கியிருந்த குஜராத் பவனின் ஆள் சேது, கையில் எவர்சில்வர் தம்ளரில் காப்பியுடன் நின்றிருந்தான்.

''என்ன சார், ஊரே அமர்க்களப்படுது. நீங்க படுத்திருக்கீங்க?'' என்றான் சேது.

விசையைத் தட்டினாற்போல் பிரபுவின் புலன்கள் சிலிர்த்தன. இப்பொழுது காப்பியைக் குடித்துக் கொண்டு நேரத்தை வீணாக்குவதா என்று விநாடி நேரத்தில் ஒரு மூலையில் எழுந்த கேள்வியுடன்,

''என்ன விஷயம் சொல்லு!''

''துறைமுகத்திலே உங்களைப் போல நிறையப் பத்திரிகைக்காரங்க வந்திருக்காங்க. தில்லியிலேர்ந்து வந்திருக்காங்கன்னு - கேள்வி! யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள் கொண்டு போறாங்களாமில்லே?''

பிரபு இதற்குள் பல் துலக்கிக் காப்பி குடித்து பாண்ட், ஷர்ட் மாட்டிக் கொண்டிருந்தான். காமிராவில் ஃபிலிம் சுருளில் இன்னும் எத்தனை ஷாட் பாக்கி என்று ஆராய்ந்தான்.

''இத்தனை பத்திரிகைக்காரங்க எதுக்கு? அதிலே வெளிநாட்டுக்காரங்க வேறே இருக்காங்களாம்!''

''நான் வந்து சொல்றேன் சேது!'' என்று பிரபு அவனை நகர்த்தியபடி வெளியே வந்து அறையைப் பூட்டினான்.

''இந்தா காப்பிக்குச் சில்லறை'' என்று சேதுவின் கையில் திணித்துப் படிகளை இரண்டெட்டில் கடந்து, தெருவுக்கு வந்தான்.

அக்னி தீர்த்தத்தில் தீர்த்தமாடுபவர்களின் பார்வை இன்று கோவிலை நோக்கி இல்லை. துறைமுகத்தைப் பார்த்தபடி இருந்தது.

துறைமுகம் 'ஜே, ஜே' என்றிருந்தது. எட்டுப் பத்துப் படகுகளில் செஞ்சிலுவைக் கொடிகள் பறந்தன. மூட்டை மூட்டைகளாக உணவுப் பொருள்கள் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. மணற்பரப்பில் அவனுக்குப் பரிச்சயமான தில்லி பத்திரிகைக் கும்பல். சுமன் தேஷ் பாண்டே, மாதவன் நாயர், இந்தர் லால் —

''ஹாய், பிரபு, நீ எப்போ இங்கே வந்தே?'' என்றார்கள் எல்லோரும்.

அவன் தன் விஷயத்தைச் சொன்னான்.

''எப்படியிருக்கு ஜாஃப்னா?'' என்றான் இந்தர்லால்.

''ரொம்ப மோசம்! நாம் உணவுப் பொருள் கொண்டு போறது நல்ல காரியம். அரசாங்கம் விதிச்சிருக்கிற தடைகளாலே ஜனங்களுக்கு அங்கே சாப்பாட்டுக்கே வழியில்லாம இருக்கு.''

''நல்ல காரியம்தான். ஆனா வெற்றி பெறுவோமான்னு எனக்குத் தெரியல்லே!'' என்றான் சுமன்.

''முக்கால்வாசி, தன் எல்லைக்குள்ளே வர இலங்கை அரசு அனுமதிக்காது.''

''செஞ்சிலுவைச் சங்கத்துடைய மனிதாபிமான செயல்தானே இது. ஏன் அனுமதிக்காது?'' என்றான் நாயர்.

சுமன் சிரித்தான்.

''அரே 'யார்!' நாம் மட்டும்தான் கெட்டிக்காரங்கன்னு நாம் நினைக்கக் கூடாது!''

பிரபு பதில் ஒன்றும் சொல்லாமல் பரபரப்புடன் சுற்றும்முற்றும் பார்த்தான்.

''இதிலே கெட்டிக்காரத்தன சவாலே இல்லே,'' என்றான், நாயர் விடாப்பிடியாக. ''மனிதாபிமான அடிப்படையிலே நாம் அவங்களுக்குக் காண்பிக்கிற மறைமுக எதிர்ப்புத்தான். ஆனாலும் அங்கே இதுக்குத் தடை சொல்லத் தர்க்கரீதியா ஒரு காரணமும் இல்லே.''

''தர்க்கரீதி எங்கே வந்தது அரசியல்லே? நான் சொல்றேன் பார். நாம சும்மா ஒரு விளம்பரத்துக்குத்தான் இங்கே வந்திருக்கோம். கச்சத்தீவு வரை போய்மூக்கறுபட்டுத் திரும்பி வருவோம்.''

வாஸந்தி

''எத்தனை மணிக்குக் கிளம்பறீங்க?'' என்ருன் பிரபு.

''தெரியல்லே. போற ரேட்டைப் பார்த்தா, மத்தியானச் சாப்பாட்டுக்கப் புறம்தான் முடியும் போல இருக்கு. இத்தனை நேரம் மீனவர்களோடு பேரம் ஆச்சு. இது தான் சமயம்னு அவங்கதான் எக்கச்சக்க மாக் கேக்கருங்களோ, இல்லே அரசாங்கம் தான் பிசினறித்தனம் பண்ணுதோ தெரியல்லே'' என்ருன் இந்தர்லால்.

''இலங்கைக்குப் போகணும்னுலே ரேட் அதிகம்தான்,'' என்ருன் பிரபு. ''அது எத்தனை ஆபத்தான விஷயம்னு அவங்களுக்குத் தான் தெரியும். தோணி வீணப் போச்சுன்னு தொழிலே போச்சு. அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுக்குமா?''

''ஏய் பிரபு, நீ வரலியா எங்களோடு?''

''வரணும்தான், யாரைக் கேட்கணும்?''

''அதோ, மிஸ்டர் அகர்வால் நிற்கிருர் பார், பி. ஐ. பி ஆள்; போய்க் கேளு.''

அவன் விரைந்தான். அகர்வால் அவனுக்கு ஏற்கெனவே பரிச்சயமானதால் அனுமதி உடனே கிடைத்தது.

''கிளம்ப இரண்டு மணி ஆகிவிடும்'' என்ருர் அவர்.

அவன் மீண்டும் நண்பர்களிடம் சென்ருன்.

''வாங்க ஹோட்டலுக்குப் போய் ஏதாவது சாப்பிடலாம். இங்கே 'பிரமிட்' ஷேப்பிலே முறுகல் தோசை கிடைக்கும்.''

''ரைட்டோ!'' என்று எல்லோருமாகக் கிளம்பினர்கள்.

மணற்பரப்பாக இருந்த தெருக்களில் இருபக்கமும் சின்னச் சின்னக் கடைகள் இருந்தன. கிளிஞ்சல் தோரணங்களும் சோழிகளும் கடல் நுரைகளுமாகத் தெரிந்தன.

ஹோட்டலில் ஒரு மேஜை காலியாக இருந்தது. எல்லோரும் அமர்ந்து முறுகல் தோசைக்கு ஆர்டர் கொடுத்த போது, நேற்று கடற்கரையில் பிரபு சந்தித்த போலீஸ் சப்—இன்ஸ்பெக்டர் கருணகரன் வந்தார்.

''என்ன சார், நீங்களும் போய் வர்றீங்களா ஜாஃப்னவுக்கு?'' என்ருர்.

''என்ன, போகும்போதே வர்றீங்களாங்கிறீங்க?'' என்று பிரபு சிரித்தான்.

''பின்னே வேறே என்ன நடக்கும்?''

''என்ன வேணும்னலும் நடக்கட்டும்!'' என்ருன் பிரபு அயராமல். ''நாம் எத்தனை நாளைக்குச் சும்மா இருக்க முடியும் சொல்லுங்க! இதனுல் நம்ம எதிர்ப்பைக் காண்பிச்சோம்னு தெரியும்! யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு உதவ நாம இருக்கோம்னு தெரியும்!''

கருணகரன் சற்று குரலைத் தாழ்த்திச்



சொன்னார்.


"என்னைக் கேட்டீங்கன்னா, இந்த இலங்கைத் தமிழர் பிரச்னையை நாம தலையிலே போட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்கிறதே அனாவசியம்பேன்! முக்கியமா, தமிழ் நாட்டுக்குப் பெரிய தலைவலி! நம்ம அரசியல்வாதிகள் செஞ்ச கூத்துத்தான் எல்லாம். ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு கும்பலைத் தட்டி விட்டு வேடிக்கை பார்க்குது. லாபம் தேடுது!"

"தமிழர்கள் தமிழர்களுக்காக இரக்கப் படறது இயற்கைதானே கருணாகரன்."

"ஆ, அதெல்லாம் சும்மா! வெறும் பிரசாரப் பேச்சு. அரசியல் ஸ்டன்ட். அவங்க வாழ்க்கைமுறைக்கும்நம்மவாழ்க்கைமுறைக்கும் சம்பந்தமே இல்லை. நம்ம பசங்க பாருங்க வன்முறைக்குப் பழக்கப்படாதவங்க. இப்ப இவங்களையெல்லாம் குடியேத்தின பிறகு, வெடி மருந்து செய்யக் கத்துக்கத் துவங்கியிருக்காங்க. மூணு வருஷத்திலே கொலையும் கொள்ளையும் கிடுகிடுன்னு அதிகரிச்சுப் போச்சு. யார் வேணும்னாலும் போராளின்னு கிளம்புவான். கொள்ளையடிக்கிறதை நியாயப்படுத்திக்குவான். இந்த நிலைமை இப்படியே நீடிச்சா தமிழ்நாட்டுக் காரக்டரே மாறிப் போகும். இந்தப் போராளிகளை நாம ஊக்கப்படுத்தினது ரொம்பப் பெரிய தவறு!"

"இந்த மாதிரி சமயங்களிலே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கச் சமூக விரோதிகள் கிளம்பத்தான் கிளம்புவாங்க கருணாகரன்! ஆனா நான் போன வாரம் யாழ்ப்பாணத்திலே இருந்தேன். அவங்களுடைய கஷ்டம் உண்மையானது. ராணுவம் செய்கிற..."

"எனக்குத் தெரியும் சார்!" என்றார் கருணாகரன் அலுப்புடன். "ராணுவத்துக்கு அதிகாரம் கொடுத்தா அப்படித்தான் நடக்கும். போராளிங்க என்ன செஞ்சாங்க போன மாசம்? கொழும்பிலே அப்பாவி



ஜனங்கள் நிறைஞ்சிருக்கிற பிஸி இடத்திலே 'பாம்' வெச்சான். இருநூறு பேர் செத்துப் போனாங்க. சிங்கள அரசு சும்மா இருக்குமா? பயங்கரவாதிகளை ஒழிக்கக் கட்ட நினைக்காதா? ஏன் சார், பிரிவினை வேணும், தேசத்தைத் துண்டாக்கணும்னு ஆயுதம் ஏந்தறவனை அரசு தேசத்துரோகின்னு தானே நினைக்கும்?"

"அதுக்காக ஒரு இனத்தையே அழிக்க முற்படறது நியாயமா கருணாகரன்?"

"நியாயம்னு நான் சொல்லலே! நிலைமை விபரீதமாப் போனதுக்குக் காரணம், போராளிகளுடைய வன்முறையும் அதைத் தூண்டிவிட்ட நம்ம அரசியல்வாதிகளும்!"

பிரபு சற்று நேரம் பேசவில்லை. கோபுரம் போல் வந்து அமர்ந்த தோசையை விண்டு கொண்டே சொன்னான்.

"எது, எதுக்குக் காரணமானாலும் இப்ப இருக்கிற நிலைமையிலே நாமசும்மா உட்கார்ந்திருக்க முடியாது கருணாகரன்!"

"ஆகா, செய்யுங்க! இன்னிக்குத்தான் போகப் போறீங்களே! உங்களைக் கண்டவுடனேயே இலங்கை அரசு பயந்து நடுங்கி வாசலைத் திறந்து வைக்கப் போகுது!"

சர்வதேச எல்லையைக் கடந்து இலங்கை எல்லைக்குள் நுழைய முடியுமா என்கிற கேள்வி எல்லார் மனத்திலும் இருந்து கொண்டே இருந்தது. தோணிகள் கிளம்ப இரண்டு மணி ஆகிவிட்டது. சில வெளிநாட்டுப் பத்திரிகைக்காரர்கள், இப்படிப் பட்ட ஒரு நிச்சயமில்லாத பயணத்தை மேற்கொள்ள நேர்ந்ததற்காக வெளிப்படையாகவே கோபத்தைக் காண்பித்தார்கள்.

படகுகள் மெதுவாகத்தான் சென்றன. செஞ்சிலுவைக் கொடிகள் உயரத்தில் பறந்தன. சுமன் தேஷ் பாண்டே சொன்னது போல, கச்சத்தீவை அடைந்ததுமே படகுகள் நிறுத்தப்பட்டு விட்டன. இலங்கை எல்லைக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. அதற்கடுத்து மணிக்கணக்கில் இரு தரப்பில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. இப்பொழுது இந்திய ரிப்போர்ட்டர்களும் முணுமுணுத்தார்கள். எல்லோருக்கும் நல்ல பசி.

எல்லார் பொறுமையும் உற்சாகமும் போய், படகிலேயே மூலைக்கு மூலை சாய்ந்து தூங்க ஆரம்பித்தார்கள். இலங்கை அரசின் உத்தரவை மீறி எல்லைக்குள் புக முடியாத நிலையில் படகுகள் திரும்பின. மீண்டும் ராமேசுவரத்தை அடைந்தபோது பன்னிரண்டரை மணி.

எரிச்சல் பட்டுக் கொள்ளக் கூட முடியாத சோர்வுடன், பிரபு அறைக்குத் திரும்பி, படுத்தான். மற்றவர்களுக்குத் துறைமுகத்தருகிலேயே அவசரமாக ஒரு ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டது.

மறுநாள் பிரபு கண்விழித்த போதே பத்து மணி. அவன் நிதானமாகக் குளித்துக் காலை உணவு அருந்தினான்.

''என்ன சார், முகத்திலே சுரத்தே இல்லே? கரியைப் பூசிக்கிட்டீங்களா?'' என்று சேது கூடப் பரிகாசம் செய்தான்.

பிரபு பதிலே சொல்லாமல் காமிராவை எடுத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்றான். கோவில் கர்ப்பக்கிரகம் வரை சொத சொதவென்று ஈரமாக இருந்தது. பக்தர்கள், வேண்டுதல்களுடன் வந்த தம்பதிகள் இருபத்திரண்டு கிணறுகளில் தீர்த்தமாடி நடந்து செல்லும் ஈரம். இறைவனுள்ளத்தில் ஈரம் கசியுமா என்ற ஏக்கத்தின் கானல் நீராக —

''கர்ப்பக்கிரகம் பத்தாம் நூற்றாண்டிலே கண்டி மகாராஜா பராக்கிரமபாகுவினால் கட்டப்பட்டது'' என்று அவன் கேட்காமலே விளக்கினார் ஒரு கைடு. ''அதாவது பிரச்னை முளைக்கிறதுக்கு முன்னாலே!'' என்று ஜோக் அடித்தார்.

பிரபு வாயே திறக்காமல் சுவாமியைத் தரிசனம் செய்துவிட்டுத் துறைமுகத்துப் பக்கம் சென்றான். இப்பொழுது அங்கு யாருமே இல்லை. எல்லாரும் மதுரைக்குப் போய் விட்டார்கள் என்று தகவல் கிடைத்தது.

''சாமான்கள்?''

''அதுவும் போய்விட்டது.''

யாருக்கும் விவரம் சரியாகத் தெரியவில்லை.

அவன் மீண்டும் அறைக்குத் திரும்பி சாப்பிட்டு விட்டுப் படுத்தான். நேற்று ஏற்பட்ட தோல்வியை நினைக்க நினைக்கச் சோர்வாக இருந்தது. இப்படி நடக்கும் என்று இந்திய அரசு எதிர்பார்க்காமல் இருந்திராது. இது அடுத்த கட்டத்துக்கான முன்னோடியாக இருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் அவனது அனுபவங்களை நினைக்கும் போதெல்லாம் இப்பவும் மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. எந்த வகையிலாவது அப்பாவி ஜனங்களுக்கு நிம்மதி ஏற்பட வேண்டும்.

பாஷை என்கிற ஒரே ஒரு காரணத்தை வைத்து அங்கு எத்தனை பெரிய சுவர் எழும்பியிருக்கிறது இரு இனங்களுக்குமிடையே! வாஸ்தவத்தில் இரண்டு இனங்களும் இந்தியாவிலிருந்து சென்றவை. கலாசார வேற்றுமை என்று தீர்க்கமாகச் சொல்லும்படியாக இல்லை. புத்தராலயங்களில் விஷ்ணு சிலைகள் இருக்கின்றன. சிங்கள மொழியில் சமஸ்கிருத வார்த்தைகளும் தமிழ் வார்த்தைகளும் இருக்கின்றன. இதில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்கிற பேதம் எப்படி முளைக்கிறது! எத்தனை பயங்கர பேத உணர்வு இது!

மீண்டும் ஜயசீலனின் நினைவு வந்தது. சீலியாவைக்கண்டுபிடித்தானோஎன்றுகவலை யேற்பட்டது. இலங்கையின் இந்தக் கால கட்டத்துக்கு அவனது கதை ஒரு நல்ல உதாரணம் என்று தோன்றிற்று. மிகத் துல்லியமான மனம் அவனுக்கு. அதில் எத்தனை கசப்பு மண்டியிருக்கிறது? இன்றைக்கு அவனைப் பார்க்க வருவதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது.

அவன் எழுந்தான். டில்லிக்குக் கிளம்ப வேண்டியதுதான். எத்தனை நாட்கள் இங்கு உட்கார்ந்திருப்பது? இன்றைக்கு நடந்த நாடகத்தை விவரமாக எழுதி நாளைக்கு அனுப்பி விட வேண்டும் என்று நினைத்தபடி ரயில் பிடித்தான்.

''என்ன சார் நீங்க போகல்லியா யாழ்ப்பாணத்துக்கு?'' என்றபடி வந்தார் மீனவர் சங்கத் தலைவர் நடராஜன்.

''ஓ போனேனே! பாதி வழியிலேயே திரும்பி வந்தோமே!''

''அதைச் சொல்லலே சார்! இப்ப மறுபடி நாம ஒரு ஸ்டன்ட் பண்ணியிருக்கோம், தெரியாது?''

''தெரியாதே!'' என்றான் அவன் பரபரப்புடன்.

''என்னய்யா பத்திரிகைக்காரர் நீர்?பெங்களூர்லேர்ந்து கிளம்பி இலங்கை அரசுடைய உத்தரவு கேட்காமலே விமானம் மூலமா உணவுப் பொட்டலங்களைப் போட்டாச்சு. இருபது நிமிஷங்கள்லே காரியத்தை முடிச்சாச்சாம்!''

''எப்ப?''

''இப்பத்தான்! அரை மணி முந்தி சப் — இன்ஸ்பெக்டர் ஆபீஸ்லே சேதி கேட்டேன்.''

பிரபுவுக்கு நாடி நரம்பெல்லாம் பரபரத்தன.

''நேத்துப் போன களைப்பிலே நான் ரூம்லே படுத்துத் தூங்கிட்டேன்.''

சட்டென்று புரிந்தது. இது முன்னேற்பாடான செயலாக இருக்க வேண்டும்! எல்லாமே ஒரு நாடகம்!

''என்ன பூரிச்சுப் போயிட்டீக? என்னைக் கேட்டா இது நியாயமான செயல் இல்லே. இது ஒரு அத்துமீறல்தான். உலகத்து வல்லரசுகளையெல்லாம் பகைச்சுக்கப் போறோம்.''

பிரபு சிரித்தான்.

''ஏன்யா, ஆக்ஷன் எடுத்தாலும் முணுமுணுக்கிறீங்க, எடுக்கல்லேன்னாலும் முணுமுணுக்கிறீங்க. நியாயமான வழிகளுக்கு உட்படாதவங்கிட்ட இப்படித்தான் நடந்துக்கணும். மகாபாரதக் கதை தெரியுமா உங்களுக்கு?''

''என்னவோ போங்க. இதெல்லாம் எனக்குச் சரின்னு தோணல்லே. பெரிய இக்கட்டிலே மாட்டிக்கப் போறோம். இந்தப் பிரச்னையினாலே ஆரம்பத்திலிருந்தே நமக்குத் தலைவலி.''

பிரபு பதிலே சொல்லாமல் தன் யோசனைகளில் ஆழ்ந்தான். இது ஒரு சுவாரஸ்யமான திருப்பம். நடராஜன் சொல்வது போல் இப்பொழுது என்ன வேணுமானாலும் நடக்கலாம்.

மண்டபத்தில் இறங்கி முகாம் வாசலுக்குச் செல்லும் வரை மனம் ரொம்பப் பரபரப்பாக இருந்தது. வாசலில் ஜயசீலனுடன் சீலியா நின்றிருப்பாள் என்று கற்பனை விரிந்தது.

ஜயசீலன் பழைய சோர்வுடனேயே நின்றிருந்தான் தனியாக. லேசான ஏமாற்றத்துடன் பிரபு அவனை நோக்கி நடந்தான்.

(தொடரும்)





அன்னையர், அறிவர்: கேட்பரிஸ் போர்ன்விடா கோகோ, மால்ட், பால் மற்றும் அசல் சீனியின் ஊட்ட நலன்களைக் கொண்டது. போர்ன்விடா குழந்தைகள் மிக விரும்பும் அத் தனிச் சுவையை பாலின் குணத்துடன் அளிக்கிறது.

தினமும் போர்ன்விடா அளிக்கப்படும் குழந்தைகள் வேலையிலும் விளையாட்டிலும் கூர்மையோடிருக்கிறார்கள். அது, அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் சுறுசுறுப்பையும் அளிக்கிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் நலன் அளிக்கிறது.

அதன் தனிச் சுவையுடன் இணைந்திட்ட இன்றைய வளர்ச்சி.

கேட்பரிஸ்
போர்ன்விடா

தொட்டிலில் பையன் அழுதான். எப்படித்தான் முடிகிறதோ? சதா, "வீர்... வீர்..." என்று அடிவயிற்றிலிருந்து கிளம்பி வருகிற அழுகை!

ஃபைல்களைப் புரட்டிக் கொண்டிருந்த சதாசிவம் நிமிர்ந்து பார்த்தான். பையனின் தலை கீழே இறங்கியிருந்தது. காலையில் இருந்துஇதேகூத்துத்தான். அழுவதும், தொட்டிலில் கிடத்துவதும், மீண்டும் தூக்குவதும்...

அவசரமாகமுடிக்கவேண்டியசிலஃபைல்களை வீட்டிற்கு எடுத்துக் கொண்டு வந்திருந்தான். இரண்டு மூன்று தரம் உட்கார்ந்தும் உருப்படியாக இன்னும் நான்கு வரி எழுதியபாடில்லை.

"பார்த்துக்கிட்டே இருக்கீங்களே... தூக்கக் கூடாதா?" கோமதி அடுப்பை ஊதி விட்டுக் கத்தினாள். இம்மாதிரியான நேரங்களில் கத்துவதற்கென அவளுக்குப் பிரத்தியேகக் குரல் இருந்தது.

"விளையாடறியா...? என் வேலையை நான் பார்க்க வேண்டாமா?"

கேட்க நினைத்ததை அடக்கிக் கொண்டான். அதையெல்லாம் அவள் சட்டை பண்ணுகிறவள் இல்லை. "லீவு நாள்ல உங்களை யாரு ஆபீஸ் வேலை பார்க்கச் சொன்னது?" எனத் திருப்பிக் கேட்பாள். அதிகமாகப் போனால், "ஆமா... இங்க காமியுங்க... ஆபீசர் கிட்ட முடியாதுன்னு சொல்ல தைரியம் கிடையாது" என்று குதர்க்கம் பேசுவாள். கேட்டுக் கேட்டு அவளிடமிருந்து அதிக வார்த்தைகள் வெளிவருவதைத் தவிர்க்கப் பழகிப் போயிருந்தது.

"சனியனே... பொறுடா..."

சதாசிவம் பேனாவைக் கீழே போட்டு விட்டு எழுந்தான்.

தொட்டிலில் இருந்து எடுக்கிற வரை பையனின் அழுகை சற்று அடங்கிய மாதிரி இருந்தது. பிறகு ஒரேயடியாக மேலே ஏறிற்று.

"ஜோ... ஜோ..."

தோளில் போட்டுக் கொண்டு உலாவினான்.

"பையன் அம்மாவைப் பார்த்து விட்டான் போலும். மேலும் பலமாக அழுதான். இப்போது கைகால்களையும் உதைத்துக் கொண்டான்.

"இதோ... இங்கே பாரு... இங்கே பாருடா கண்ணு..."

சதாசிவம் அசைகிற கடிகார பெண்டுலத்தைக் காட்டினான். நிலைக் கண்ணாடி, கிலுகிலுப்பை, பொம்மை...

ம்ஹூம்! குழந்தைக்கு அம்மாதான் வேண்டியிருந்தது.

"கொஞ்ச நேரம்தான் வெச்சிருந்து குடேன் கோமதி..."

"ஆமா... இப்பவே மணி பதினொண்ணு. இனி நான் எப்ப சமைக்க முடிக்கிறது?"

"லீவு நாள்தானே? எதுவும் மோசம் போயிடலே. இவனை வாங்கு..."

சதாசிவத்திற்கு எப்படியாவது பையனைத் தள்ளி விட்டால் போதும் என்றிருந்தது.

"சித்த சும்மா இருங்க. சமைச்சா மட்டும் ஆச்சா? மாவாட்டறது, துணி துவைக்கறது, கழுவறதுன்னு ஆயிரம் வேலை கெடக்கு. இவனை வெச்சுக்கிட்டு இருந்தா பொழப்பு ஆன மாதிரிதான்."

"பசிக்குதோ என்னவோ...?"

"அதொண்ணும் இல்லே. வயிறு முட்டக் குடுத்திருக்கேன். வேடிக்கை கேக்கறான். சித்த வெளியே கொண்டு போய்ட்டு வாங்க."

இவ்வளவு அழுகையும், வீம்பும் வேடிக்கைக்காகத்தானா? இதுகளிடம் நேரத்தை வீணாக்கவா, தான் ஆபீஸ் ஃபைல்களை வீட்டிற்குக் கொண்டு வந்தது?


அதை இவளிடம் சொல்வதில் உபயோகம் ஏதுவும் இல்லை.

"டாய்... டாய்..."

சதாசிவம் குழந்தையைத் தலைக்கு மேல் தூக்கிப் போட்டு விளையாட்டுக் காட்டினான். அதிலும் சரிப்பட்டு வராமல் போகவே, வாசலுக்குக் கொண்டு வந்தான்.

நீண்ட போர்ஷன். எதிர் எதிர் வரிசையில் நான்கு வீடுகள். எல்லோருக்கும் பொதுவாக இந்த வரிசையில் அம்மிக் கல்லும், எதிர் வரிசையில் ஆட்டுரலும் கிடந்தன. இருபுறத்துச் சுவர்களிலும் கொடிக் கயிறு. சில துணிமணிகள்...

வீட்டை விட வெளிச்சம் அதிகம் என்பதைத் தவிர, வேறு எந்த சுவாரஸ்யமான



மும்தாஜ் யாசீன்

அம்சமும் கிடையாது. எதிர் வீட்டுக் குழந்தைகள் வாசலில் ஓடி விளையாடின.

''கவிதா... இங்கே பாரு தம்பி, விளையாடலாம் வா...''

கவிதா அங்கிருந்தபடியே கைதட்டிக் கூப்பிட்டாள். பிறகு தன் விளையாட்டுத் தோழர்களுடன் எங்கோ ஓடினாள்.

''ஏய்... இங்கே வா... இந்தா பாரு... தம்பி உன்னையே பார்க்கிறான்.''

கவிதா வரவில்லையென்றாலும் பையன் ஏனனவோ அழவில்லை. எதிர்வீட்டு முகட்டிலிருந்த காகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். காக்கையும் தத்தித் தத்தி அதே இடத்தில் உட்கார்ந்து வேடிக்கை காட்டியது. குழந்தை கையை வீசித் தன் பாஷையில் ஏதோ சொன்னான்.

கோமதி இவனது சில சத்தங்களுக்கு அர்த்தம் கண்டுபிடித்திருந்தாள். இங்கே பாருங்க. 'உங்கா' வேணும்கிறதை — உங்கிட்டத்தான் வருவானாம்— அப்பான்னு சொல்றானுங்க — என் செல்லக் கண்ணு சட்டை போட்டு விடச் சொல்லுதுங்க — இத்யாதி.

குழந்தை பேசுவதாக அவள் சொல்வதில், அல்லது அப்படியொரு அர்த்தத்தைத் தானே தேடிக் கொள்வதில் சதாசிவத்திற்கும் சந்தோஷம் இருந்தது. அப்போதெல்லாம் கோமதிக்குப் போட்டியாகத் தானும் கொஞ்சி மகிழ்வான்.

ஆனால் அதற்கெல்லாம் இன்றைக்கு நேரமில்லை. எப்படியாவது அக்கௌண்ட்ஸை முடிக்க வேண்டியிருந்தது. இழுபறியான சில செலவுகளைச் சரி செய்து, ட்ரயல் பேலன்ஸ் தயாரித்து, ஒரு வாரத்திற்குள் தலைமையகத்திற்கு ரிப்போர்ட் அனுப்பி விட வேண்டும்.

முன்பெல்லாம் ராமகிருஷ்ணன்தான் இதைப் பார்த்துக் கொண்டிருந்தான். ப்ரமோஷனில் அவன் போய்விட்ட பிறகு இந்த வருடம் இவனிடம் வந்திருக்கிறது. கொஞ்சம் சிரமமான காரியம் என்றாலும், தனது திறமையை நிரூபிக்க நல்ல சந்தர்ப்பம். ரொம்ப காலமாக இழுத்துக் கொண்டிருக்கும் பதவி உயர்வு கூட சாத்தியமாகக் கூடும்.

கோமதியின் மீது எரிச்சல் வந்தது. அவளுக்கு ஏன் இவையெல்லாம் புரிய மாட்டேனென்கிறது?

பையன் மீண்டும் சிணுங்கினான்.

காகம் பறந்து போயிருந்தது. திரும்பி வருமா என்று தெரியவில்லை.

வசீகரிக்கிற வேறு சங்கதிகள் இல்லையோ, அல்லது அழுவதற்கு இதை ஒரு சந்தர்ப்பமாக நினைத்தானோ, பையனின் குரல் மீண்டும் உச்சிக்கு ஏறியது. சதாசிவம் மறுபடியும் உள்ளே வந்தான். கோமதி இன்னும் சமைத்தபாடில்லை.

''ஏண்டி... இவனை வாங்க மாட்டே?''

''வெளையாடாதீங்க... இங்கே அடுப்பு எரியாம ஊதி ஊதி மண்டை வலிக்குது. காசா? ஓசியா? இப்படியா ஈர விறகை வாங்கிட்டு வர்றது?''

''ஆமா. ஊர்ல யாரும் சமைக்கிறது இல்ல. இவ ஒருத்திதான் இருக்கா.''

இதற்குள் அம்மாவின் முகத்தைப் பார்த்துப் பையன் இறங்கித் தவழ்ந்து போனான்.

ஃபைலில் இருந்த காகிதங்கள் தாறுமாறாகச் சிதறிக் கிடந்தன. மின்விசிறியை நிறுத்தாமல் போனது ஞாபகத்திற்கு வந்தது. சதாசிவம் குனிந்து ஒவ்வொன்றாகப் பொறுக்கி அடுக்கினான்.

''மத்த நாள்ல இவனை வெச்சுக்கிட்டுச் சீரழியறேன். லீவு நாள்ல சித்தநாழி வெச்சுக்க உங்களுக்கு வலிக்குதாக்கும்?''

'வெடுக்'கென்று குழந்தையைத் தூக்கிய கோமதி, ''அழுவியா...? அழுவியா?'' என அடித்தாள்.

பேச்சும் செய்கையும் இன்றைக்கு என்னவோ இவனிடம் மாறித்தான் இருந்தன. கோபம் தன் மீதா? ஈர விறகின் மீதா? கண்களும் மூக்கும் அவளுக்குச் சிவந்து போயிருந்தன. உண்மையில் சமைப்பது கஷ்டமான காரியம்தானே?

வழக்கமான கடையில்தான் அந்த முறையும் சதாசிவம் விறகு வாங்கி இருந்தான். ''நல்ல சரக்கு சார்...'' என எப்போதும் சொல்வதைப் போலவே கடைக்காரன் இந்தத் தடவையும் சொல்லிக் கொடுத்திருந்





அருள்வாக்கு

பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அழகுள்ளது சந்திரன். நிலாச் சாப்பாடு, நிலாவில் பாட்டுக் கச்சேரி எல்லாம் வைத்துக் கொண்டு சந்தோஷப்படுகிறோம். இருந்தாலும் எலெக்ட்ரிக் ஜோடனை அதிகமாகி விட்ட இக்காலத்தவர்களுக்குச் சந்திரனின் அருமை தெரிந்திருக்க நியாயமில்லை. சீதளமான அதன் பிரகாசம் அலாதியானது. கண்ணை உறுத்தாத ஒளிவாய்ந்தது சந்திரன். அதிலும் பௌர்ணமி சந்திரனின் அழகு விசேஷம். இந்த அழகு விசேஷமாகத் தெரிய வேண்டும் என்பதற்கே ஈசுவர நியதியில் முப்பது நாட்களுக்கு ஒரு முறைதான் பூர்ணிமை வருகிறது. தினமும் பௌர்ணமியிருந்தால் பூரண சந்திரனில் நாம் இத்தனை சந்தோஷம் அடைய முடியாது. இந்தப் பூரண சந்திர மண்டலத்தை முதலில் தியானித்து, அதில் அம்பாளைத் தியானிக்க வேண்டும்.

பூரண சந்திரனைத் தியானிக்கிற போதே மனசும் அதுபோல் குளிர்ந்து போகிறது. அங்கே துக்கத்துக்கும் துவேஷத்துக்கும் இடமில்லாமல் சாந்தமாகிறது! சகல ஜீவராசிகளுக்கும் அந்தராத்மாவாக இருக்கிற பராசக்தியின் மனஸே சந்திரனாக ஆகியிருக்கிறது. நமது சித்தசுத்திக்குச் சந்திர மண்டலத்தில் அம்பாள் தியானத்தை நம் சாஸ்திரங்கள் சொல்கின்றன.

சந்திரனில் அம்பாள் அமர்ந்திருப்பதாகத் தியானிக்க வேண்டும். தியானித்தால் நம் மனமும் அவள் மனத்திலிருந்து வந்த சந்திரனைப் போல் குளிர்ச்சி அடையும். சந்திரன் தாபத்தைப் போக்குவது போல் நம் தாபமும் சமனமாகும். சந்திரிகையில் இருட்டு விலகுகிற மாதிரி நம் அஞ்ஞானம் விலகும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

தான். இப்படி நம்பிக்கை மோசம் ஆகும் என்று எதிர்பார்க்கவில்லை. சதாசிவத்திற்கு எந்த வியாபாரியும் சுத்தமானவன் இல்லை என்று தோன்றியது.

''இந்தா... அடிச்சுக் கொன்னுடாதே... இங்கே கொண்டா...''

ஃபைல்களை மறுபடியும் போட்டுவிட்டு, சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான். குழந்தையுடன் வெளியில் வந்தான்.

விடுமுறை நாள் என்றாலும், வீதியில் கூட்டம் குறையவில்லை.

''விர்... விர்'ரென்று விலகும் வாகனங்கள், மனிதர்கள், சைக்கிள்கள்...

குழந்தை கைகொட்டிச் சிரித்தான்.

உலகம் பிரம்மாண்டமானதாகத் தோன்றக் கூடும். எதையும் புரிந்து கொள்கிற வரை ஆச்சரியம்தான்.

''கும்'மென்ற வாசனையுடன் ஒரு கும்பல் அவனைக் கடந்து போனது. பவுடரோ, செண்ட்டோ, அடிமனத்தில் இறங்குவதாயிருந்தது. பெண்களின் நகையும், பூவும் உடையும்... வசதியை இப்படி ஆவேசமாக வெளிப்படுத்த வேண்டுமா?''

கோமதிக்கும் இப்படிச் செல்ல ஆசை உண்டு.

''கல்யாணமாகி அஞ்சு வருஷமாச்சு. ஒரு திருகாணியாச்சும் வாங்கிப் போட்டிருக்கீங்களா? நல்லதா ரெண்டு புடவை எடுத்துக் குடுத்திருக்கீங்களா?''

சதாசிவத்திற்கும் தனது இயலாமை குறித்து வருத்தம் உண்டு. ஆனால் அது அவனுள் இரகசியமானதாகவே இருந்தது. அவளோ, மற்றவர்களோ சுட்டிக் காட்டும் போது கோபம்தான் வந்தது. காட்டுக் கத்தல் கத்துவான்.

''நீ நொழைஞ்ச நேரம் அப்படி. நான் என்ன பண்றது? உன் ஏழ்வு எடுக்கத்தான் சரியா இருக்கு. பத்து வந்தாப் பதினஞ்சு செலவுன்னு...''

அவள் அடங்கிப் போனதும் உண்டு. ''ஆமா... அதுக்கு முந்தி கொட்டிக் கிழிச்சது...'' என்று வளர்த்ததும் உண்டு.

வாழ்க்கைக்கு அர்த்தம்தான் என்ன? இவளை அடக்குவதற்காகவாவது தனக்கு ஒரு நல்ல காலம் வரக் கூடாதா?

தேரடி 'மூக்'குட்டில் சிறிது நேரம் நின்றுவிட்டு, வீட்டிற்குத் திரும்பலாமா என்று யோசித்த போது, பஸ் ஸ்டாப்பில் இருந்து யாரோ கூப்பிட்டார்கள்.

பட்டென்று திரும்ப, எதிரே அவனது ஆபீசர்.


ஆச்சரியத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''குட்மார்னிங் சார்'' என்றான்.

பக்கத்தில் அவரது மனைவியும், அவளது இடுப்பில் ஒன்றரை வயது மதிக்கத்தக்க ஒரு குழந்தையும்...

அவரது மனைவி என்று சொல்லத் தக்க கம்பீரங்கள் எதுவும் இல்லாமல் இருந்தாள் அந்த அம்மாள். குழந்தையும் அவளும் ஒரே அச்சு. இதற்குமேல் இளைக்க முடியாது

நம் ஊரில் உபயோகமாகும் தண்ணீரின் அளவைத்தான் மீட்டரில் கணக்கு (Water Meter) எடுக்கிறோம். ஆனால், ஐப்பானில் உபயோகப்படுத்திய பிறகு வெளியேற்றப்படும் கழிவு நீரையும் மீட்டர் பொருத்திக் கணக்கு எடுக்கிறார்கள். முறையாக, சிக்கனமாகத் தண்ணீர் செலவாகிறதா என்பதைக் கண்காணிக்க இந்த ஏற்பாடாம்!

— எல். சிவாஜிராவ்.





"இதுவரை பதினெட்டு கப் பாயசம் குடித்தும் சம்பந்திக்குத் திருப்தி ஏற்படலையே?"

"ஒரு முந்திரிப் பருப்பாவது தம் பல்லில் படும்வரை குடிச்சுக்கிட்டே தான் இருப்பேனென்கிறார்!"

என்கிறபடி உடம்பு. இரத்தப் பசையற்ற முகம். தோல் சுருங்கி, விலா எலும்புகள் தெரிய, உலகின் அத்தனை சுமைகளையும் தாங்கிக் கொள்ள நேர்ந்த மாதிரி...

இவளா அவர் மனைவி? இதுவா குழந்தை?

ஆபீசில் அந்த மனிதர் சிரித்து யாரும் பார்த்தது கிடையாது. முதன் முதலாகச் சந்திக்கிறவர்களுக்குக் கூட எரிச்சலை உண்டாக்கி விடுகிற சுபாவம். சிடுசிடுப்பு.

இப்படி ஒரு மனைவியுடன் படுத்து எழுந்து, அப்படி ஒரு குழந்தையைக் கொஞ்சி விட்டு ஆபீஸ் வருகிற ஓர் ஆளிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

ஏதோ ரகசியம் உடைபட்ட மாதிரி இருந்தது.

"ராஜுவைப் பார்த்தீங்களா மிஸ்டர் சதாசிவம்?"

ராஜு ஆபீஸ் பியூன்.

"இல்லையே சார்..."

அவருக்கு முகம் வாடிவிட்டது. மனைவியிடம் திரும்பி, "இல்லையாமே..." என்றார்.

"இங்க நிக்க வக்கிறதுக்குத்தான் வீட்ல அவ்ளோ அவசரப்படுத்தினீங்களா?"

"பொறு, கண்டிப்பா வருவான்."

"நல்லா வந்தாரு. கூடப் பழகி உங்க புத்தி வந்திருச்சு போல. எதிலும் சொன்ன வார்த்தையைக் காப்பாத்தறது இல்ல."

உடம்போடு சம்பந்தமில்லாத குரல். அதையும் ஒரு மாதிரியாக நீட்டிச் சொல்ல, நடுவீதியில் அருவருப்பாகத் தெரிந்தது.

அவர் பதில் சொல்லவில்லை.

சதாசிவம் தான் அங்கு நிற்பதா வேண்டாமா என்று யோசிக்க, "உங்க பையனா?" என அவன் பக்கம் திரும்பினார் அவர்.

"ஆமாம் சார்..."

"துருதுருன்னு இருக்கானே... கண்ணா இங்கே பாரு..." என்று கன்னத்தில் தட்டிக் கொடுத்து, கைகளை நீட்டினார். சதாசிவம் இதனை எதிர்பார்க்கவில்லை.

"எங்கே சார்... ரொம்பக் குறும்பு. பொழுதுக்கும் இப்படி வேடிக்கை காட்டிக்கிட்டே இருக்கணும். இல்லன்னா அழுகை..." தன்னைச் சமாளித்துக் கொண்டு, அவரது முகத்தை ஊன்றிப் பார்த்தான்.

"அப்படித்தான் இருக்கணும். அதான் குழந்தை..." என்று அவர் தம் மனைவியையும், பையனையும் பார்த்தார். வழக்கமாக அவன் கண்டிருந்த வெடுவெடுத்த பார்வை இல்லை. குழந்தையின் பெருமைகளுக்காக ஏங்குகிற ஒரு தகப்பனின் ஏக்கமாய்...

"பையனுக்கு என்ன சார்...?"

"என்னன்னு சொல்றது...? பிறவியே இப்படி!"

"டாக்டர்கிட்டே காட்டினீங்களா?"

"எத்தனையோ டாக்டர்கள், கோயில் குளம்னு பார்த்தாச்சு. இப்பக் கூட ஒரு நாட்டு வைத்தியரைப் பார்க்கத்தான் போறோம். ராஜு கூட்டிட்டுப் போறேன்னான். காணோம்..."

அந்த அம்மாள் மீண்டும் ஆரம்பித்தாள்.

"இனி அவர் வந்து நாம போய்ச் சேருறதுக்குள்ள விடிஞ்சுடும். வைத்தியர் இருப்பாரோ என்னவோ..."

"இருப்பாரு... எப்படியும் பார்த்துக்கலாம். பேசாம இரு..."

"உங்களுக்கு வழி தெரியாதா? துணைக்கு ஓர் ஆள் வேணுமா?"

அவர் பதில் சொல்ல முடியாமல் அவளிடமிருந்து பார்வையைத் திருப்பிக் கொண்டார்.

ஏனோ அவர் மீது பாவமாக இருந்தது அவனுக்கு.

"சார்... எனக்கு அவன் வீடு தெரியும். வேணும்னா போய்ப் பார்த்துட்டு வரவா?" எனக் கேட்டான்.

"தேங்க்யூ... முடியும்னா செய்யுங்க... ப்ளீஸ்..."

"எதுக்கும் இங்கேயே நில்லுங்க... இதோ வந்துட்டேன்..." சைக்கிள் கடையை நோக்கி நடந்தான்.

குழந்தை எதிரே வந்த ஒரு பஸ்ஸைப் பார்த்து, "புர்ர்" ரென்று பழித்துக் காட்ட, மிருதுவாக அணைத்து முத்தமிட்டாள்.

அத்தருணத்தில் உலகில் பெருமை வாய்ந்த மனிதனாகத் தன்னைப் பற்றித் தோன்றியது அவனுக்கு.

விரைந்திடுவீர் !

பயனடைவீர்

வாடிக்கையாளர் நலன் மட்டுமே கருத்தில்
கொண்டு செயற்படும் நிறுவனம்

தமிழ் நாடு சீட்டுக் கழகம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
சென்னை

பொதுமக்கள் நலன் கருதிப் பல்வேறு சீட்டுகளை நடத்துகிறது

மாதத் தவணைத் தொகை	:	ரூ.100 முதல் ரூ.1250 வரை
சீட்டுத் தொகை	:	ரூ.3000 முதல் ரூ.50,000 வரை

இந்த கழகத்துக்கே உரிய சிறப்பியல்புகள்

★ உங்களின் பணத்திற்கு முழுமையான பாதுகாப்பு

★ சீட்டில் சேர நுழைவுக் கட்டணம் இல்லை

★ ஏலம் எடுத்தவரின் பிணையம் ஏற்கப்பட்ட இரு நாட்களில் ஏலத்தொகை வழங்கப்படுகிறது;

★ பிணையம் தரும்பொழுது ஆவணம் எழுதக் கட்டணம் வசூலிப்பதில்லை.

★ உறுப்பினர் நலன் கருதித் தள்ளுத்தொகை 30 சதவீதத்திற்கு மிகாது காக்கப்படுகிறது.

★ சீட்டில் சேர, ஏலத்தொகை பெற தமிழக அரசு ஊழியர்கள் அனுமதி பெற, அறிவிப்பு தர வேண்டுவதில்லை.

அலுவலக நேரம்	:	காலை 10 மணி முதல் 5.30 வரை
வார விடுமுறை நாட்கள்	:	ஞாயிறு, திங்கள்

முழு விவரங்களுக்கு அணுகுக!

தமிழ்நாடு சீட்டுக் கழகம்

தி.நகர் கிளை
32/2, ரங்கநாதன் தெரு,
தி.நகர்,
சென்னை - 600 017

நுங்கம்பாக்கம் கிளை
8, வேலாயுதம் தெரு,
(வள்ளுவர் கோட்டம் அருகில்)
நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034.

கோயம்புத்தூர் கிளை
82, நேரு விளையாட்டு அரங்கம்,
வ.உ.சி. பூங்கா,
கோவை 18.

DI-PR. No.2468/MS/87; Dated 8.10.87/MA.

அழகு கொஞ்சும் மணப்பாடு

* ஐரோப்பிய கிராமம் போல் வீடுகள்......





* அழகு கொஞ்சும் மணப்பாடு — ஒரு பருந்துப் பார்வை.

உள்ளே நுழைந்தவுடன், ஏதோவோர் ஐரோப்பிய கிராமத்திற்குள் வந்துவிட்டோமோ என்ற பிரமை. வீடுகளின் அமைப்புகளும் சாக்கடை தேங்கிக் கிடக்காத வீதிகளின் நேர்த்தியும் அப்படி ஆளை அசத்துகின்றன. சின்னக் கிராமத்திற்குள் பிரம்மாண்டமான மூன்று தேவாலயங்கள். ஒரு தேவாலயத்தில் ஏசுபிரான் அறையப்பட்ட ஒரிஜினல் சிலுவையின் ஒரு சிறு பகுதியையும் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். அதனாலேயே இந்தக் கிராமத்தை 'சின்ன ஜெருசலேம்' என்று பாதிரிமார்களும் கிறிஸ்துவத் தோழர்களும் அழைக்கிறார்கள்; புனித யாத்திரையாகவும் வந்து செல்கிறார்கள்.

கிராமத்தின் பெயர் மணப்பாடு. திருச்செந்தூரிலிருந்து கன்னியாகுமரி செல்லும் பாதையில் சென்று சரியாகப் பதினைந்தாவது கி. மீ. யில் இடதுபக்கம் திரும்பினால் தெரியும். ஊரை ஒட்டி அழகான கடற்கரை. கரையோரக் கடலுக்குள் தெரியும் அந்த மணல் திட்டில் ஒரு சாயங்காலப் பொழுதைக் கழிக்கலாமே என்று பார்க்கிற யாருக்கும் கிறக்கம் வரும் அழகு. அதென்னவோ எல்லா ஊர்களிலும் சீறிப் பாயும் கடல் இங்கு மட்டும் குளத்துத் தண்ணீராய் அடங்கிக் கிடக்கிறது. வசதி செய்து கொடுத்தால் அனைவரும் படகுச் சவாரி செய்து மகிழலாம். அப்படியோர் அமைதி! மேலும் கடற்கரைக்குள்ளேயே தோண்டப்பட்ட மூன்று கிணறுகளிலும் அமிர்தமாய்ச் சுவைக்கும் தண்ணீர்.

கடற்கரையின் தெற்கோரமாய் மணலால் போர்த்தப்பட்ட ஒரு சிறு குன்று. மூன்று பெரிய தேவாலயங்களில் ஒன்று அதன் மேல்தான் இருக்கிறது. அதையொட்டி இன்னமும் மண்ணெண்ணெய் விளக்கே பயன்படுத்தப்படும் ஒரு கலங்கரை விளக்கம். குன்றின் மேல் ஏறித் தேவாலயப் படிகளில் நின்று கொண்டு வடக்கே பார்த்தால், எங்களுக்குள் ஏதும் பிரிவினையே இல்லை என்பது போல், கடலுக்கு அப்பால் கம்பீரமாய்த் தெரியும் திருச்செந்தூர்க் கோபுரம்!

அந்தக் குன்றின் மேலுள்ள தேவாலயத்திற்கு வேண்டுதல் செய்து கொண்டு அங்கேயே வந்து தங்கி வணங்குகிற கிறிஸ்துவர்கள் இருக்கிறார்கள். அப்படி வருபவர்கள் வந்து தங்குவதற்கென்றே அவ்வாலயத்தின் அருகில் நான்கைந்து வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவை இலவசமாகவே தரப்படுகின்றன. வருபவர்கள் சமையல் பொருள்களைக் கொண்டு வந்து சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு தங்கியுள்ளார்கள்.

இப்படித் தொழ வருபவர்கள் இருந்தும் — தேவாலயத்திற்குள் செருப்புப் போட்டுக் கொண்டே பிரவேசிக்கலாம் என்ற நிலையிலும் பக்தர்கள் அசிங்கப்படுத்துகிற அநாகரிகமெல்லாம் அங்கே கிடையாது. அழகு என்பது சுத்தமே என்பதுபோல், பக்தி என்பதும் அந்தச் சுத்தமே என்பது போல் அப்படியொரு சுத்தம்! அதனாலேயே மனத்தில் ஒரு ரம்மியமும் அமைதியும் யாருக்குமே ஏற்படும்.

இப்படிப் பார்ப்பவர் மனத்தைப் பறித்துக் கொள்கிற வகையில், ஊரின் அமைப்பும் கடற்கரையின் அழகும் அமைந்திருந்தாலும், அந்தக் கடற்கரையின் அழகே அவ்வூரில் பெரும் பகுதியாயுள்ள மீனவர்களுக்குப் பிரச்னையாகவும் இருக்கிறது.

ஆம்; கடற்கரை மேடிட்டு அழகு பெற்றதாலேயே, முன்பு போல மீனவர்கள் தங்கள் படகுகளையும் கட்டு மரங்களையும் கடற்கரை வரை கொண்டு வர முடிவதில்லை. கடலுக்குள் வெகு தூரத்திலேயே அவற்றை நிறுத்திவிட வேண்டியிருக்கிறது; அல்லது மிகவும் சிரமப்பட்டுக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. எனவே, அரசு இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

— சாங்கிருத்தியாயன்



பொன்
செல்

அத்தியாயம் 24
அனலில் இட்ட மெழுகு

கிளி 'கிறீச்'சிட்ட சத்தமும், தாதிப் பெண் பயத்துடன் கூவிய சத்தமும் கலந்து வந்து நந்தினியையும் கந்தமாறனையும் திடுக்கிடச் செய்தன. கந்தமாறன் திரும்பிப் பார்த்துப்பழுவேட்டரையர்வருகிறார்என்று அறிந்ததும் கதி கலங்கிப் போனான். சற்று முன்னால் அவன் 'பழுவேட்டரையரை எனக்கும் பிடிக்கவில்லை' என்று சொன்னது அவர் காதில் விழுந்திருக்குமோ என்ற எண்ணம் உதயமாயிற்று. அதைவிடப் பீதிகரமான எண்ணம், நந்தினியையும் தன்னையும் பற்றி அவர் ஏதேனும் தவறாக எண்ணிக் கொள்வாரோ என்ற நினைவு, — அவனுக்குத் திகிலை உண்டாக்கிற்று. கிழப் பருவத்தில் கலியாணம் செய்து கொண்டவர்களின் போக்கே ஒரு தனி விதமாக இருக்குமல்லவா? ஆகையினாலேயே அவர்

அமரர்
கல்கி

அவ்வளவு கோபமாக வந்து கொண்டிருக்க வேண்டும்! வந்து என்ன செய்யப் போகிறாரோ, தெரியவில்லை. எதற்கும் சித்தமாயிருக்க வேண்டியதுதான்.

இவ்வளவும் ஒரு நொடிப் பொழுதில் கந்தமாறன் மனத்தில் அலை எறிந்த சிந்தனைகள். ஆனால் அவனுக்கு அன்று ஒரு பெரிய அதிசயத்தைக் காணும்வாய்ப்புக் கிடைத்தது. அவன் நினைத்ததற்கெல்லாம் மாறாக அந்த அதிசயம் நடந்தது. பழுவேட்டரையர் அருகில் நெருங்கியதும் நந்தினி முகமலர்ந்து அவரைத்தன் கரியவிழிகளால்பார்த்து, "நாதா! எங்கேதாங்கள் திரும்பி வருவதற்கு அதிக நாள் ஆகிவிடுமோ என்று பார்த்தேன். நல்லவேளையாக வந்து விட்டீர்கள்!" என்றாள். அவளுடைய முகத்தைப் பார்த்து அந்தக் குரலையும் கேட்டதும் பழுவேட்டரையரின் கோபாவேசமெல்லாம் பறந்துவிட்டது. அனலில் இட்ட மெழுகைப் போல் உருகிப் போனார். அசட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்து, "ஆமாம்; போன காரியம் முடிந்து விட்டது; திரும்பி விட்டேன்" என்றார்.

பிறகு கந்தமாறனைப் பார்த்து, "இந்தப் பிள்ளை இங்கே என்ன செய்

னியின்
வன்

கிறான்? ஏதாவது காதற் கவிதை புனைந்து கொண்டு வந்து கொடுத்தானோ?'' என்று கேட்டு விட்டுத் தம்முடைய பரிகாசத்தைக் குறித்துத் தாமே சிரித்தார்.

கந்தமாறனுடைய முகம் சிவந்தது. ஆனால் நந்தினி பழுவேட்டரையரை விட அதிகமாகச் சிரித்துவிட்டு, ''இவருக்குக் காதலும் தெரியாது; கவிதையும் தெரியாது. சண்டை போட்டுக் காயமடையத்தான் தெரியும். நல்ல வேளையாகக் காயம் ஆறிவிட்டது. ஊருக்குப் போக வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார்!'' என்றாள்.

''இந்தக் காலத்துப் பிள்ளைகளின் வீரத்தைத்தான் என்னவென்று சொல்வது? இருபத்துநாலு யுத்தகளங்களில் நான் அறுபத்து நாலு காயங்கள் அடைந்தவன். ஆனால் ஒரு தடவையாவது படுக்கையில் படுத்ததில்லை. இவனுக்குக் காயம் குணமாக ஒரு பட்சத்துக்கு மேலாகியிருக்கிறது. ஆனால் என் காயங்களெல்லாம் மார்பிலும் தோளிலும் தலையிலும் முகத்திலும் ஏற்பட்டவை. இந்தப் பிள்ளை முதுகிலே காயப்பட்டவன் அல்லவா? அதனால்இவ்வளவுநாள் ஆகிவிட்டது: நியாயந்தான்!'' என்று கூறிப் பரிகாசச் சிரிப்புச் சிரித்தார்.

கந்தமாறன் கொதித்து எழுந்து, ''ஐயா! தாங்கள் என் தந்தையின் ஸ்தானத்தில் உள்ளவர். அதனால் தங்களுடைய பரிகாசத்தைப் பொறுத்தேன்!'' என்றான்.

''இல்லாவிட்டால், என்ன செய்திருப்பாயடா?'' என்று பழுவேட்டரையர் கேட்டுத் தம் உறையிலிருந்த கத்தியில் கையை வைத்தார்.

நந்தினி இச்சமயம் குறுக்கிட்டாள். ''நாதா! இவருக்கு முதுகில் மட்டும் காயமில்லை, நெஞ்சிலும் காயம் பட்டிருக்கிறது என்பது தங்களுக்குத் தெரிந்ததுதானே! இவர் தம்முடைய சிநேகிதன் என்று நினைத்துக் கொண்டிருந்தவன் இம்மாதிரி முதுகில் குத்திப் போட்டுவிட்டுப் போய் விட்டான் என்ற எண்ணம் இவர் நெஞ்சில் பெரிய புண்ணை உண்டாக்கியிருக்கிறது. முதுகில் காயம் ஆறியும் நெஞ்சில் புண் ஆறவில்லை. அந்தப் புண்ணில் கோல் இடுவது போல் நாம் பேசக்கூடாதுதானே? அன்றிரவு, இவர் காயம்பட்ட அன்றிரவு, என்ன நடந்தது என்று தங்களுக்குத் தெரியாதா, என்ன?'' என்று சொல்லிக் கொண்டே நந்தினி பழுவேட்டரையரைப் பார்த்த பார்வையில் மறைபொருள் ஏதோ இருந்திருக்க வேண்டும்! பழுவேட்டரையரின் முகத்தோற்றம் உடனே மாறிவிட்டது!

''ஆமாம்; நீ சொல்வது சரிதான்! பாவம், இவன் அறியாப் பிள்ளை. இவன் தந்தையோ என் பிராண சிநேகிதர். இவன் ஏதோ தெரியாத்தனமாகக் கூறியதை நான் பொருட்படுத்தக் கூடாதுதான். அது கிடக்கட்டும். நந்தினி! ஒரு முக்கியமான விஷயம் சொல்வதற்காக இப்போது வந்தேன். அது இவனுக்கும் தெரிந்திருக்க வேண்டியதுதான். இலங்கை மாதோட்டத்தில் ஒருவனை ஒற்றன் என்று சந்தேகித்துப் பிடித்திருக்கிறார்களாம். அவனிடம் இளவரசன் அருள்மொழிவர்மனுக்கு ஓலை ஒன்றிருக்கிறதாம். அங்க அடையாளங்களிலிருந்து அவன் நம் கந்தமாறனுடைய அழகான சிநேகிதனாயிருக்கலாமென்று நினைக்கிறேன். அவன் பெரிய கைகாரனாய்த்தானிருக்க வேண்டும். நம் ஆட்களிடம் அகப்படாமல் தப்பி இலங்கைக்குச் சென்று விட்டான், பார்!'' என்றார் பழுவேட்டரையர்.

நந்தினியின் முக பாவத்தில் அப்போது ஏற்பட்ட ஒரு கணநேர மாறு

தலை மற்ற இருவரும் கவனிக்கவில்லை.

''அடே! தப்பிச் சென்றுவிட்டானு? இலங்கைக்கா போய் விட்டான்?'' என்று கந்தமாறன் ஏமாற்றத்துடன் கூறினுன்.

''நாதா! அவன் தப்பிச் சென்றது என்க்கு ஒன்றும் அதிசயமாய்த் தோன்றவில்லை. தங்கள் சகோதரர் இந்தக் கோட்டைக் காவலுக்குத் தகுதி யற்றவர் என்றுதான் எத்தனையோ தடவைசொல்லியிருக்கிறேனே! அவர் அனுப்பிய ஆட்களும் அப்படித்தானே இருப்பார்கள்?'' என்ருள் நந்தினி.

''முன்னெல்லாம் நீ அப்படிச் சொன்ன போது எனக்கு அது சரி யாகப்படவில்லை.இப்போதுஎனக்குக் கூட அப்படித்தான் தோன்றுகிறது. இன்னும் ஒரு விந்தையைக் கேள்! மாதோட்டத்தில் அகப்பட்ட ஒற்ற னிடம் நமது பழுவூர் இலச்சினை ஒன்று இருந்ததாம். அது அவனிடம் எப்படிக் கிடைத்தது என்று அவன் சொல்லவில்லையாம்!......''

நந்தினி லேசாக ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, ''இது என்ன வேடிக்கை?பனை இலச் சினை அவனிடம் எப் படிக் கிடைத்ததாம்? தங்கள் சகோதரர் இதற்கு என்ன சொல்கிருர்?'' என்ருள்.

''அவனு? அவன் சொல்வதைக் கேட்டால் உனக்குச் சிரிப்பு வரும்! அந்தப் பனை இலச்சினை உன்னிட மிருந்துதான் அவனிடம் போயிருக்க வேண்டுமென்கிருன் காலாந்தகன்!'' என்று சொல்லிவிட்டுப் பழுவேட் டரையர் இடிஇடியென்று சிரித்தார்.

அந்தச் சிரிப்பினுல் லதா மண்டபமே குலுங்கியது போலிருந்தது. அரண் மனை நந்தவனத்து மரங்கள் எல்லாம் சிலிர்த்து நடுநடுங்கின.

நந்தினியும் அவருடன் சேர்ந்து சிரித் துக் கொண்டே, ''என் மைத்துனர் இருக்கிருரே, அவருக்கு இணையான புத்திக் கூர்மை படைத்தவர் இந்த ஈரேழு பதினுல் உலகத்திலும் கிடை யாது!'' என்ருள்.

''இன்னும் உன் மைத்துனன் என்ன சொல்கிருன் தெரியுமா? நல்ல வேடிக்கை! அதை நினைக்க நினைக்க எனக்குச் சிரிப்பு வருகிறது! தஞ்சைக் கோட்டை வாசலில் நீ பல்லக்கில் வந்து கொண்டிருந்தபோது உன்னை அந்த இந்திரஜித்து சந்தித்துப் பேசினு னும். பிறகு இந்த அரண்மனைக்குள் ளும் அந்த மாயாவி வந்திருந் தானும். ஆகையால் நீயே அவனிடம் பழுவூர் இலச்சினையைக் கொடுத் திருக்க வேணுமாம்! அப்படியில்லா விட்டால், உன்னிடம் யாரோ ஒரு மந்திரவாதி அடிக்கடி வருகிருனே, அவன்மூலமாகப்போயிருக்கவேண்டு மாம்! தன்னுடைய முட்டாள் தனத்தை மறைப்பதற்காக அவன் இப்படியெல்லாம் கற்பனை செய்து உளறுகிருன்!'' என்று கூறிப் பழு வேட்டரையர் தமது நீண்ட பற்கள் எல்லாம் தெரியும்படியாக மறுபடியும் ஹஹ்ஹஹ்ஹா என்று சிரித்தார்.

''என் மைத்துனருடைய அறிவுக் கூர் மையைப் பற்றி நான் சந்தேகித் தது ரொம்பத் தவறு. அவருடைய அறிவு உலக்கைக் கொழுந்துதான்! சந்தேகமில்லை! ஆனுல் இதையெல் லாம்நீங்கள் கேட்டுக்கொண்டுசும்மா இருந்ததை நினைத்தால்தான் எனக்கு வியப்பாயிருக்கிறது!'' என்ருள் நந்தினி. அவளுடைய முகபாவம் மறு படியும் மாறி, அதில் இப்போது எள்ளும் கொள்ளும் வெடித்தது. கண்களில் தீப்பொறி பறந்தது.

வீராதி வீரரும் போர்க்களத்தில் எத்தனையோ வேல் வீச்சுக்களை இறு மாந்து தாங்கியவருமான பெரிய பழுவேட்டரையர் நந்தினியின் சிறு கோபத்தைத் தாங்க முடியாமல் தடு மாறினுர். அவருடைய தோற்றத்தி லும் பேச்சிலும் திடீரென்று ஒரு தளர்ச்சி காணப்பட்டது.

''தேவி! நான் அதையெல்லாம் சும்மா கேட்டுக் கொண்டிருந்தேன் என்ரு நினைக்கிருய்? அவனுடைய கையினுலாகாத்தனத்தைப்பற்றிமிகக் கடுமையாகப் பேசி அவனை அழ வைத்து விட்டேன். நீ பார்த்திருந் தால் அவன் பேரில் இரக்கம் அடைந் திருப்பாய்!'' என்ருர்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கந்தமாறன் பாடு சங்கடமாகி விட்டது. நந்தினியிடம் அவனுக்குச் சிறிது பயமும் பழுவேட்டரையரிடம் இரக்கமும் அவமதிப்பும் ஏற்பட்டன. இந்தச் சதிபதிகளின் தாம்பத்ய விவகாரத்தில் சிக்கிக் கொள்ளாமல் அங்கிருந்து போய்விட விரும்பினான். தொண்டையைக்கனைத்துக்கொண்டு, "ஐயா!......" என்றான்.

நந்தினி குறுக்கிட்டு, "என் மைத்துனர் சாமர்த்தியத்தைப் பற்றிப் பேசுகையில் இவரை நாம் மறந்து விட்டோம். இவர் ஊருக்குப் போகிறேன் என்று சொல்கிறாரே, போகலாம் அல்லவா?" என்று கேட்டாள்.

"நன்றாய்ப் போகலாம். இத்தனை நாள் இங்கு இவன் தங்கியிருந்தது பற்றியே இவனுடைய தந்தை கவலைப் பட்டுக் கொண்டிருப்பார்!"

"இவரிடம் ஓலை ஒன்று கொடுத்து அனுப்ப விரும்புகிறேன். கொடுக்கலாம் அல்லவா?"

"ஓலையா? யாருக்கு?"

"காஞ்சியிலுள்ள இளவரசருக்கு!"

பழுவேட்டரையர் நந்தினியையும் கந்தமாறனையும் சந்தேகக் கண்ணால் பார்த்து, "இளவரசருக்கு ஓலையா? நீயா எழுதுகிறாய்? எதற்கு?" என்று கேட்டார்.

"இளையபிராட்டி தம்பிக்கு ஓலை எழுதி இவர் சிநேகிதரிடம் அனுப்பியிருக்கிறார். பழுவூர் இளையராணி அண்ணனுக்கு ஏன் ஓலை எழுதக் கூடாது? எழுதி இவரிடம் ஏன் அனுப்பக்கூடாது?" என்றாள் நந்தினி.

"இவன் சிநேகிதன் கொண்டு போன ஓலை இளையபிராட்டி குந்தவை எழுதிய ஓலையா? உனக்கு அந்த விஷயம் எப்படித் தெரிந்தது?" என்று பழுவேட்டரையர் கேட்டார்.

"பின்னே எதற்காக என்னிடம் மந்திரவாதி அடிக்கடி வருகிறானாம்? அவன் மந்திரத்தின் மூலமாகத் தெரிந்தது. என் மைத்துனர் ஆட்களின் இலட்சணந்தான் தெரிந்திருக்கிறதே! பழுவூர் பனை இலச்சினை அவனிடம் இருப்பதாகக் கண்டு பிடித்துக் கொண்டு வந்து சொன்னவர்கள் ஓலை குந்தவை அனுப்பியது என்று சொல்லவில்லை, பாருங்கள்!"

"இலச்சினையைப் பற்றியும் நம் ஆட்கள் சொல்லவில்லை. அன்பில் பிரம்மராயர் இராமேசுவரம் போய் விட்டுத் திரும்பி வந்திருக்கிறார். அவர் கொண்டு வந்த செய்தி...

"அந்தப் பிராமணனாவது குந்தவை தேவியின் ஓலையைப் பற்றித் தங்களிடம் சொன்னாரா?"

"இல்லை!"

"நாதா! நான் தங்களுக்கு எச்சரித்ததை எண்ணிப் பாருங்கள். இந்த ராஜ்யத்தில் உள்ள அவ்வளவு பேரும் சேர்ந்து தங்களை வஞ்சிக்கப் பார்க்கிறார்கள் என்று நான் சொல்லவில்லையா? இது உண்மை என்பது இப்போதாவது தங்களுக்குத் தெரிகிறதா? மந்திரவாதி சொன்னதை மட்டும் நான் நம்பிவிடவில்லை. கோடிக்கரையிலிருந்து சிறைப்படுத்திக் கொண்டு வந்த வைத்தியர் மகனையும் அழைத்து வரச் செய்து விசாரித்தேன். அவனும் அதை உறுதிப்படுத்தினான். இளையபிராட்டி தன் தம்பிக்கு ஓலை அனுப்பியிருப்பதாகச் சொன்னான்!" என்றாள் நந்தினி.

பழுவேட்டரையருக்குக் கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டது போலிருந்தது. கந்தமாறனை அவர் அருவருப்புடன் பார்த்தார். அந்தச் சிறு பிள்ளையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இதையெல்லாம் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை.

இதைக் குறிப்பினால் உணர்ந்த நந்தினி, "நம்முடைய கதை இருக்கவே இருக்கிறது. இவருடைய பிரயாணம் ஏன் தாமதிக்க வேண்டும்?" என்று கூறிவிட்டுக் கந்தமாறனைப் பார்த்து, "ஐயா! காஞ்சி இளவரசரிடம் இந்த ஓலையை நேரே கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். கொடுத்து விட்டு, அவர் மறு ஓலை கொடுத்தால்

சர்வஜாக்கிரதையாக அனுப்பிவைக்க வேண்டும். தங்களுடைய கடம்பூர் மாளிகைக்கு இளவரசரை அழைப்பதற்கு மறந்துவிட வேண்டாம்!'' என்றாள்.

''என் தந்தையிடம் என்ன சொல்ல? இது பழுவூர் மன்னரின் விருப்பம் என்று சொல்லலாம் அல்லவா?'' என்று கந்தமாறன் சற்று தயக்கத்துடன் கேட்டான்.

''தாராளமாய்ச் சொல்லலாம். என்னுடைய விருப்பந்தான் பழுவூர் மன்னரின் விருப்பமும். நாதா! நான் சொல்வது சரிதானே?'' என்றாள் நந்தினி.

''ஆமாம், ஆமாம்!'' என்று பழுவேட்டரையர் தலையை அசைத்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. தலை கிறுகிறுத்தது. நந்தினியை எதிர்த்துப் பேசவும் அவரால் இயலவில்லை.



கந்தமாறன் சென்ற பிறகு நந்தினி பழுவேட்டரையர் மீது தன் காந்தக் கண்களைச் செலுத்தி, கொஞ்சும் கிளியின் குரலில், ''நாதா! என்னிடம் தங்களுடைய நம்பிக்கை குன்றிவிட்டதாகத் தோன்றுகிறது. என் மைத்துனருடைய துர்ப்போதனை ஜெயித்து விட்டது போல் காண்கிறது!'' என்றாள்.

''ஒரு நாளுமில்லை நந்தினி! என் கையில் பிடித்த வேலிலும், அரையில் செருகிய வாளிலும் எனக்கு நம்பிக்கை குறைந்தாலும் உன்னிடம் நம்பிக்கை குறையாது. வீர சொர்க்கத்தில் நான் நம்பிக்கை இழந்தாலும் உன் வார்த்தையில் நம்பிக்கை இழக்க மாட்டேன்!'' என்றார்.

''இது உண்மையானால், அந்தச் சிறு பிள்ளையை வைத்துக் கொண்டு, என்னிடம் அவ்வளவு கேள்வி கேட்டீர்களே, ஏன்? எனக்கு அவமானமாய் இருந்தது!'' என்று நந்தினி கூறிய போது, அவள் கண்களில் கண்ணீர் பெருகத் தொடங்கியது.

பழுவேட்டரையர் துடிதுடித்துப் போனார். ''வேண்டாம் என் கண்ணே! இப்படி என்னைத் தண்டிக்க வேண்டாம்!'' என்று கூறி, நந்தினியின் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துச் சமாதானம் செய்தார்.

''ஆயினும் உன்னுடைய காரியங்கள் சில எனக்கு அர்த்தமாகவில்லை. என்ன, ஏது, எதற்காக? என்று கேட்க எனக்கு உரிமையில்லையா?'' என்றார்.

''கேட்பதற்குத் தங்களுக்கு உரிமை உண்டு. சொல்வதற்கும் எனக்கு உரிமை உண்டு. யார் இல்லை என்றார்கள்? அந்நியர்கள் முன்னால் கேட்க வேண்டாம் என்றுதான் சொன்னேன். என்ன வேண்டுமோ இப்போது கேளுங்கள்!'' என்றாள்.

''ஆதித்தகரிகாலனுக்கு நீ எதற்காக ஓலை கொடுத்து அனுப்புகிறாய்? கடம்பூர் மாளிகைக்கு எதற்காக அவனை அழைக்கச் சொல்லுகிறாய்? அவன் அல்லவா நம்முடைய யோசனை நிறைவேறுவதற்கு முதல் விரோதி?'' என்றார் பழுவேட்டரையர்.

''இல்லை, இல்லை! ஆதித்தகரிகாலன் நம் முதல் விரோதி இல்லை. அந்தப் பழையாறைப் பெண் பாம்புதான் நம் முதல் விரோதி. அவளை எதற்காக நம் அரண்மனைக்கு நான் அழைத்தேன்? அந்தக் காரணத்துக்காகவேதான் ஆதித்தகரிகாலனை கடம்பூருக்கு அழைக்கச் சொல்கிறேன். நாதா! நான் அடிக்கடி சொல்லி வந்திருப்பதை இப்போது ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இளையபிராட்டி குந்தவை தன் மனத்திற்குள் ஏதோ ஒரு தனி யோசனை வைத்திருக்கிறாள் என்று சொல்லி வந்தேனல்லவா? அது என்னவென்று இப்போது கண்டு

பிடித்து விட்டேன். மற்ற எல்லாரையும் விலக்கிவிட்டு அவளுடைய இளைய சகோதரன் அருள்மொழி வர்மனை தஞ்சாவூர் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க அவள் தீர்மானித்திருக்கிறாள். அதற்காகவே அவள் இலங்கைக்குத் தூதனை அனுப்பியிருக்கிறாள். அதற்காகவே இப்போது தஞ்சைக்கு வந்திருக்கிறாள். அவளுடைய சூழ்ச்சிக்கு எதிர் சூழ்ச்சி செய்து அவளுடைய நோக்கம்நிறைவேறாமல்செய்யவேண்டும். காஞ்சிக்கு நான் ஓலை அனுப்பியதன் காரணம் இப்போது தெரிகிறதல்லவா?'' என்று நந்தினி கேட்டுவிட்டுப் பழுவேட்டரையரைப் பார்த்தபார்வை அவருடையநெஞ்சை ஊடுருவி அவர் அறிவை நிலைகுலையச் செய்தது.

ஒன்றும் தெரியாவிட்டாலும் ''ஆம், தெரிகிறது!'' என்று குழறினார் அந்த வீரக் கிழவர்.

''நாதா! தாங்களும் தங்கள் முன்னோர்களும் புரிந்த அரும்பெரும் வீரச் செயல்களினாலேயே இன்று இந்தச் சோழசாம்ராஜ்யம் இவ்வளவு பல்கிப் பரவியிருக்கிறது. இந்தத் தஞ்சை புரியின் தங்கச் சிங்காதனத்தில் ஒரு நாளாவது தங்களை ஏற்றி வைத்துப் பார்க்கும் வரையில் இந்தப் பாவியின் கண்கள் இரவிலும் பகலிலும் தூங்கப் போவதில்லை! அதற்குள்ளே எந்த விதத்திலாவது தங்களுக்கு என் பேரில் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் தங்களது உடைவாளினால் என்னை ஒரே வெட்டாக வெட்டிக் கொன்று விடுங்கள்!'' என்றாள் நந்தினி.

''என் கண்ணே! இத்தகைய கர்ண கடூரமான மொழிகளைச் சொல்லி என்னைச் சித்திரவதை செய்யாதே!'' என்றார் பெரிய பழுவேட்டரையர்.

அத்தியாயம் 25
மாதோட்ட மாநகரம்

நமது கதாநாயகன் வந்தியத்தேவனை நாம் விட்டுப்பிரிந்துநெடுங் காலம் ஆகிவிட்டது. தஞ்சையிலேயே அதிக நாள் தங்கிவிட்டோம். சில நாள்தான் என்றாலும் நெடுங்காலமாகத் தோன்றுகிறது.

இந்த சில நாளைக்குள் வந்தியத்தேவன் ஈழத்துக் கடற்கரையோடு நடந்து சென்று பாலாவி நதிக்கரையில் இருந்த மாதோட்ட மாநகரை அடைந்திருந்தான்.



இராமேசுவரக் கடலுக்கு அப்புறத்தில் ஈழநாட்டுக் கடற்கரையில் இருந்த அம்மாநகரம் திருஞான சம்பந்தர் காலத்திலும் சுந்தரமூர்த்தியின் காலத்திலும் இருந்தது போலவே இப்போதும் பசுமையான மரங்கள் அடர்ந்த சோலைகளினால் சூழப்பட்டுக் கண்ணுக்கு இனிய காட்சி அளித்தது. மாவும், பலாவும், தென்னையும், கமுகும், கதலியும், கரும்பும் அந்தக் கரையைச் சுற்றிலும் செழித்து வளர்ந்திருந்தன. அந்த மரங்களில் வானரங்கள் ஊஞ்சலாடின; வரி வண்டுகள் பண்ணிசைத்தன; பைங்கிளிகள் மழலை பேசின.

அந்நகரின் கோட்டை மதில்களின் மேல் கடல் அலைகள் மோதிச் சலசலவென்று சத்தம் உண்டாக்கின.

மாதோட்ட நகரின் துறைமுகத்தில் பெரிய மரக்கலங்கள் முதல் சிறிய படகுகள் வரையில் நெருங்கி நின்றன. அவற்றிலிருந்து கரையில் இறக்கப்பட்ட பண்டங்கள் மலைமலையாகக் குவிந்து கிடந்தன.

இவையெல்லாம் சம்பந்தர் — சுந்தரர் காலத்தில் இருந்தது போலவே இருந்தாலும், வேறு சில மாறுதல்கள் காணப்பட்டன. மாதோட்ட நகரின் வீதிகளில் இப்போது கேதீசுவர ஆலயத்துக்குச் செல்லும் அடியார்களின் கூட்டத்தை அதிகம் காணவில்லை. பக்தர்கள் இறைவனைப் பாடிப் பரவசமடைந்த இடங்களிலெல்லாம் இப்போது போர் வீரர்கள் காணப்பட்டனர். கத்தியும் கேடயமும் வாளும் வேலும் கையில் கொண்ட வீரர்கள் அங்குமிங்கும் திரிந்தார்கள்.

சென்ற நூறு ஆண்டுகளுக்கு அதிகமாக அந்த நகரம் ஒரு யுத்த கேந்திரஸ்தலமாக விளங்கி வந்தது. தமிழ் நாட்டிலிருந்து ஈழத்துப் போருக்கு வந்த படைகள் பெரும்பாலும் அங்கேதான் இறங்கின. திரும்பிச் சென்ற படைகளும் அங்கேதான் கப்பல் ஏறின. நகரம் பல தடவை கைமாறி விட்டது. சில சமயம் இலங்கை மன்னர்களிடமும் சில சமயம் பாண்டிய அரசர்களிடமும் அது இருந்தது. பராந்தகச் சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து சோழர்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது.

அத்தகைய யுத்த கேந்திர நகரத்தின் கோட்டை மதில் வாசலில் ஒரு நாள் வந்தியத்தேவன் வந்து நின்றான். நகருக்குள் போக வேண்டும் என்றான். சோழ சேநாதிபதியைப் பார்க்க வேண்டும் என்றான். காவலர்கள் அவனை உள்ளே விட மறுத்தார்கள். அதன் பேரில், முன்னர் கடம்பூரில் கையாண்ட யுக்தியை இங்கும் அவன் கையாண்டான். காவலர்களைப் பலவந்தமாகத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழையப் பிரயத்தனம் செய்தான். காவலர்கள் அவனைச் சிறைப் பிடித்துக் கோட்டைத் தலைவனிடம் கொண்டு போனார்கள். வந்தியத்தேவன் கோட்டைத் தலைவனிடம் இளவரசர் அருள்மொழி வர்மருக்கு முக்கியமான ஓலை கொண்டு வந்திருப்பதாகவும் அதைப் பற்றிச் சோழ சேநாதிபதியிடந்தான் விவரம் சொல்ல முடியும் என்றும் கூறினான். அவனைப் பரிசோதித்துப் பார்த்தார்கள். 'பொன்னியின் செல்வ'னுக்கு ஓர் ஓலையும் பழுவூர் பனை இலச்சினையும் அவனிடம் இருக்கக் கண்டார்கள்.

கொடும்பாளூர்ப் பெரிய வேளார் பூதிவிக்கிரமகேசரி அச்சமயம் இலங்கைப் படையின் சேநாதிபதியாக இருந்தார். அவரிடம் போய்ச் சொன்னார்கள். பூதிவிக்கிரம கேசரி அப்போது முதன் மந்திரி அநிருத்தராயருடன் பேசிக் கொண்டிருந்தார். அவருடன் இராமேசுவரம் வரையில் போவதற்கு ஆயத்தமாக இருந்தார். ஆகையால் திரும்பி வந்து விசாரிப்பதாகவும் அதுவரையில் அந்த வீரனைக் காவலில் வைத்திருக்கும்படியும் சொல்லி விட்டுப் போனார்.

பிறகு வந்தியத்தேவனை அழைத்துப் போய் ஒரு பாழடைந்த மாளிகையில் ஓர் அறையில் தள்ளிப் பூட்டினார்கள். வாசலில் காவலும் போட்டார்கள்.

வந்தியத்தேவன் நீண்ட வழிப் பிரயாணத்தினால், களைப்படைந்திருந்தான். ஆகையால், தன்னைச் சிறைப் படுத்தியது குறித்து அவன் மகிழ்ந்தான். இரண்டொரு நாள் அலைச்சலின்றி ஓய்வு பெறலாம் அல்லவா?

முதல்நாள் அவனுக்கு ப[illegible]த்தகைய ஓய்வு கிடைத்தது. ஆனால் இரண்டாம் நாள் ஒரு தொல்லை ஏற்பட்டது.

அவன் இருந்த அறைக்கு அடுத்த அறையில் ஏதேதோ விசித்திரமான சத்தங்கள் கேட்கத் தொடங்கின. யாரோ ஒருவன் இன்னொருவனை அதட்டி மிரட்டினான். அவனுடைய வீரப் பேச்சுக்கள் பிரமாதமாயிருந்தன. "இந்தா!" "சீ, சீ!" "போ போ!" "கிட்ட வராதே!" "அருகில் வந்தாயோ கொன்று விடுவேன்!" "அடித்து நொறுக்கி விடுவேன்!" "ஜாக்கிரதை!" "உன் உயிர் உன்னுடையதல்ல!" "யமலோகத்துக்கு அனுப்பிவிடுவேன்!" "ஒரே உதையில் உன் உயிர் போய்விடும்!" என்று இப்படியெல்லாம் அடுத்த அறையில் ஒருவன் இரைந்து கொண்டிருந்தான். யாரைப் பார்த்து இப்படி அவன் வீர வாதமிடுகிறான் என்று தெரியவில்லை. ஒரே குரல்தான் கேட்டதே தவிர, அதற்கு எதிர்க் குரல் கேட்கவில்லை. ஒருவேளை யாராவது பைத்தியம் பிடித்த போர் வீரனாயிருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. அப்படியென்றால், இரவெல்லாம் தூக்கமில்லாமல் செய்துவிடுவானே? கொஞ்சம் தூங்கலாம் என்றால் அதற்கும் இடையூறு நேர்ந்து விட்டதே!......

"சொன்னால் கேட்க மாட்டாயா சும்மா போக மாட்டாயா! சரி, சரி! உன்னை என்ன செய்கிறேன், பார்!"

இந்த வார்த்தைகளுக்குப் பிறகு தொப்பென்று அவனுடைய அறையில் வந்து ஏதோ விழுந்தது. படுத்திருந்த வந்தியத்தேவன் தூக்கிவாரிப் போட்டு எழுந்தான். விழுந்தது என்னவென்று உற்றுப் பார்த்தான். உடனே அவனையறியாமல் சிரிப்பு வந்தது. கலகலவென்று சிரித்தான். ஏனெனில், அடுத்த அறையிலிருந்து அப்படி வேகமாக வந்து விழுந்தது ஒரு பூனை என்று தெரிந்தது!

"ஓ! ஹோ! உனக்குச் சிரிக்க வேறே தெரியுமா? சிரி! சிரி! மறுபடியும் இங்கே மட்டும் வராதே!" என்று அந்தக் குரல் சொல்லியது.

யாரோ பைத்தியக்காரன் என்பதில் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் பூனையுடன் இவ்வளவு வாதமிடுவானா? அல்லது பூனை மனிதரைப் போல் சிரிக்கும் என்றுதான் எண்ணுவானா? ஆனால், அதிலும் ஓர் அதிசயம் என்னவென்றால், அப்படியெல்லாம் பேசிய குரல் அவனுக்குத் தெரிந்த குரலோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. எங்கேயோ, எப்போதோ கேட்ட குரலாகத் தோன்றியது. ஆனால் யாருடைய குரல்? எங்கே கேட்ட குரல்? — நினைத்து நினைத்துப் பார்த்தும் ஞாபகம் வரவில்லை!

எப்படியாவது இருக்கட்டும், யாராவது இருக்கட்டும் என்று எண்ணி வந்தியத்தேவன் படுத்துக் கொண்டான். கண்ணை மூடித் தூங்கப் பார்த்தான். ஆனால் தூங்க முடியவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் உள்ளங்கால்களில் ஏதோ வழவழவென்று தட்டுப்பட்டது. கண்ணைத் திறந்து பார்த்தால் பூனை அங்கே படுத்திருந்தது. அட கடவுளே! இதைக்கால் மாட்டில் வைத்துக் கொண்டு எப்படித் தூங்குவது? உதைத்துத் தள்ளினான். பூனை நகர்ந்து சென்றது. கண்ணை மூடினான். மறுபடி அவன் பக்கத்தில் கையில் ஏதோ மிருதுவாகத் தட்டுப்பட்டது. கண்ணைத் திறந்து பார்த்தால் பூனை அவன் பக்கத்தில் வந்து படுத்துக் கொண்டு செல்லம் கொஞ்சிக் கொண்டிருந்தது!

மறுபடியும் கையினால் பிடித்துத் தள்ளினான். பூனை தூரச் சென்றது. மீண்டும் கண்ணை மூடினான். தலைமாட்டில் வந்து பூனை படுத்துக் கொண்டு வாலினால் அவனுடைய நெற்றியைத் தடவத் தொடங்கியது.

வாளையும் வேலையும் அச்சமின்றித் தாங்கக் கூடிய அவ்வீரனுக்குப் பூனை தன் வாலினால் தடவும் அனுபவத்தைத் தாங்க முடியவில்லை; எழுந்து பூனையை அதன் கழுத்தைப் பிடித்துத் தூக்கினான். அவனுடைய அறைக்கும் அடுத்த அறைக்கும் மத்தியில் இருந்த சுவரின் உச்சியில் கொஞ்சம் இடிந்து பொக்கை விழுந்திருந்தது. அதன் வழி



யாகப் பூனையைத் தூக்கி எறிந்தான்.

அடுத்த அறையில் சிறிது நேரம் ஒரே ரகளையாயிருந்தது. மனிதக் குரலின் கூப்பாட்டுடன் பூனையின் கராமுரா சத்தமும் சேர்ந்து கொண்டது. சற்றுநேரத்துக்குப் பிறகு, "போ! தொலை!" என்ற குரல் கேட்டது. பூனையின் மியாவ் மியாவ் சத்தம் கொஞ்ச தூரம் வரையில் சென்று மறைந்தது. பிறகு நிசப்தம் நிலவியது.

வந்தியத்தேவன் கண்ணயர்ந்தான். அரைத் தூக்க நிலையில் ஒரு கனவு கண்டான். மிக இன்பமான கனவு. இளையபிராட்டி குந்தவை அவன் அருகில் வந்து உட்கார்ந்து அவன் நெற்றியைத் தடவிக் கொடுத்தாள். ஆகா! பூனையின் வாலுக்கும் இளவரசியின் கைவிரலுக்கும் எத்தனை வித்தியாசம்?

சட்டென்று மறுபடி விழிப்பு வந்தது. கனவு கலைந்துவிட்டதே என்று வருத்தமாயிருந்தது.

அடுத்த அறையிலிருந்து யாரோ சுவரைத் தட்டினார்கள். அந்தப் பைத்தியமாகத்தான் இருக்க வேண்டும்.

"யார் அங்கே? பூனையை எடுத்து எறிந்தது யார்?"

வந்தியத்தேவன் மறுமொழி சொல்லவில்லை; மௌனமாயிருந்தான். ஆ! இது என்ன, பூனை பிராண்டுவது போன்ற சத்தம் மறுபடியும்? இல்லை, இல்லை! யாரோ அப்புறத்தில் சுவரில் ஏறுவதற்கு முயல்கிறார்கள்!

வந்தியத்தேவன் எழுந்திருக்கவில்லை. படுத்தபடியே கவனமாய்க் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால் முன் ஜாக்கிரதையாகக் கைமட்டும் கத்திப் பிடியில் இருந்தது.

சுவரின் உச்சியிலிருந்த பொக்கையில் முதலில் இரு கைகள் தெரிந்தன. பிறகு ஒரு முண்டாசு தெரிந்தது. முண்டாசுக்கடியில் ஒரு முகம் மேலே வந்து குனிந்து பார்த்தது.


ஆ! இவன் ஆழ்வார்க்கடியான் அல்லவா? தலைப்பாகை கட்டியிருப்பதால் தோற்றத்தில் சிறிது மாறியிருக்கிறான்! ஆனால் ஆழ்வார்க்கடியான் என்பதில் சந்தேகமில்லை.

இவன் எதற்காக, எப்படி இங்கே வந்தான்? நாம் இருப்பது தெரிந்துதான் வந்திருக்க வேண்டும்! உதவி செய்ய வந்திருக்கிறானா? அல்லது இடையூறு செய்ய வந்திருக்கிறானா?

வந்தியத்தேவன் எழுந்து உட்கார்ந்து "ஓ வீர வைஷ்ணவரே! வருக! வருக! சிவபுண்ணிய ஸ்தலமாகிய திருக்கேதீசுவரத்துக்கு வருக! வருக!" என்றான்.

"தம்பி! நீதானா? நினைத்தேன்! வேறு யார் இவ்வளவு அழுமுக்குப் பிள்ளையாராகக் குரல் காட்டாமல் உட்கார்ந்திருக்க முடியும்?" என்று ஆழ்வார்க்கடியான் சொல்லிக் கொண்டு அறையில் குதித்தான்.

(தொடரும்)



இரண்டும் ஒரே தோற்றம் தான்



கலவை : 70% காப்பி 30% சிக்கரி



கலவை : 80% காப்பி 20% சிக்கரி

ஒன்றில் கசப்பு குறைவு

இரண்டு இன்ஸ்டன்ட் காப்பி—சிக்கரி கலவைகளில் உள்ள வித்தியாசத்தைக் காட்டுவது எளிதல்ல. ஆனால் கலவையை பொறுத்துத்தான் சுவை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். சிக்கரி அளவுக்கு அதிகமானால் கசப்பாக இருக்கும். எனவேதான் ஸன்ரைஸ் தரும் கூடுதல் காப்பி சுவையும் ஸ்ட்ராங்கும் உங்களுக்கு சிறப்பாக இருக்கிறது. ஏனெனில், ஸன்ரைஸில் காப்பியும் சிக்கரியும் 80:20 என்ற விகிதத்தில் கலந்திருக்கிறது. மற்ற சாதாரண இன்ஸ்டன்ட் கலவையிலோ 70:30 என்ற விகிதம். ஸன்ரைஸ் கசப்பாக இல்லாமல் சிறப்பாக ருசிப்பதற்கு இதுவே காரணம்.

நாங்கள் சொல்வதை நம்புவதைவிட நீங்களே சுவைத்துப் பாருங்கள்.



Nestlé.

ஸன்ரைஸ்

இன்ஸ்டன்ட் காப்பி-சிக்கரி கலவை

கூடுதலான காப்பி கலவை

HTA 5118 TAM

பெண்

சுகந்தி அலுவலகத்திற்குப் புறப்படும் முன் அப்பா நிதானமாய்ச் சொன்னார், "சாயங்காலம் கொஞ்சம் சுருக்கா வந்திடும்மா."

அப்பாவின் முகத்தைப் பார்த்ததும் விஷயம் என்னவென்று அவளுக்குப் புரிந்து விட்டது.

"என்னப்பா? என்னை யாராச்சும் பெண் பார்க்க வர்றாங்களா?"

"ஆமாம்மா."

"சரிப்பா." நடந்தாள்.

அவளது குரலில் தொனித்த மன வேதனை வேதலிங்கத்திற்குப் புரியாமலில்லை. அவரும் தம்மால் முடிந்த வரை ஒரு நல்ல சம்பந்தம் அமையட்டுமென்று எவ்வளவோ முயற்சி செய்து வந்தார். ஆனால் எதுவும் அமையவில்லை. பெருவாரியான சம்பந்தங்கள் வரதட்சணைக் கெடுபிடியில் அடிபட்டுப் போயின. ஆயினும் அவர் சும்மா இருந்து விடவில்லை. தமக்குத் தெரிந்தவர்களிடமும் கல்யாணத் தரகர்களிடமும் சொல்லி வைத்தார்.

இன்று மாலை பெண் பார்க்க வரப் போகும் சம்பந்தம் கல்யாணத் தரகர் மூலம் ஏற்பாடு பண்ணியது. இது அநேகமாய் அமைந்துவிடும் என்று அவர் நம்பிக்கையுடன் இருந்தார்.

மாலை பெண்கள் பஸ்ஸுக்காகக் காத்திராமல் ஓர் ஆட்டோ பிடித்து வீடு வந்து சேர்ந்தாள் சுகந்தி. அவள் வீட்டுக்கு வருவதற்கு முன்பே அவர்கள் எப்போதோ வந்திருந்தனர்.

மேக்கப் எதுவும் இல்லாமல் பெண்ணைப் பார்த்தால் எப்படியிருப்பாள் என்ற முன் யோசனையுடன் வந்திருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.

வரனின் அம்மா கண்ணுக்கு முதலில் தென்பட்டதும் கரம் குவித்து நமஸ்கரித்து விட்டு உள்ளே சென்று விட்டாள். ஒரே பார்வையில் அவளது அழகும், நிறமும் அவர்களைக் கவர்ந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் முகம் கழுவிக் கொண்டு, அம்மா ஆதங்கத்துடன் கூந்தலில் பூச்சூட, வேறு புடைவையை மாற்றிக் கொண்டாள்.

வரனின் அப்பாவும், சுகந்தியின் அப்பாவும் ஏதோ ஊர் விஷயம் பேசிக் கொண்டிருப்பது லேசாய்க் கேட்டது. பேச்சு சற்று



ஓய்ந்ததும் அப்பா எழுந்து வந்து, மகளைச் சன்னமான குரலில் அழைத்தார்.

"வாம்மா. இந்த இடம் முடிஞ்சிடும்னு நினைக்கிறேன். மனுஷாளைப் பார்த்தால் நல்லவாளா படறது. சூதுவாது தெரியாத ஊர் ஜனங்க"

அவள் ஒன்றும் சொல்லவில்லை. அமைதியாய் அம்மாவைப் பார்த்தாள். அம்மா வாழ்த்துக்களுடன் மகளின் கையில் காப்பி ட்ரேயைக் கொடுத்தாள். "போயிட்டு வாம்மா. மாப்பிள்ளையை நல்லாப் பார்த்துக்க. இந்த இடமாச்சும் உனக்கு அமையட்டும்."

கல்யாணத் தரகரோடு சேர்த்து மொத்தம் நாலு பேர் வந்திருந்தனர். பையனின் அக்காவும் வந்திருந்தாள். கைகால் உருப்படியாக இருக்கிறதா என்று கண்ணால் எக்ஸ்ரே எடுத்துக் கொண்டிருந்தாள்.

சுகந்தி ஒரு வழக்கமான புன்னகையை முகத்தில் படர விட்டு எல்லோருக்கும் காப்பி பரிமாறினாள்.

மாப்பிள்ளையைக் கவனிக்க அவளுக்கு இரண்டே விநாடிகள் போதுமானதாய் இருந்தது. அவன் பார்க்கச் சுமாராய் இருந்தான். அவள் இருந்த நிறம் கூட அவன் இல்லை.

ஆனால் அவன் பார்த்த விதம் ஒரு கணம் அவளைத் திகைக்க வைத்தது. அப்படியே அவளை ஊடுருவிப் பார்த்தான். கண்களில் அப்படியொரு வெறி. சுகந்தி சேலையை இறுகப் போர்த்திக் கொண்டு வேகமாய் அடுத்த அறைக்கு வந்துவிட்டாள். கதவோரமாய் மறைந்து நின்று அவனைப் பார்த்த போது, அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

இப்படியொரு பார்வையா? என்ன மிருகத்தனம்? என்ன வெறி? இதுவரை எத்தனை பேர் என்னை இப்படித் துளைத்திருக்கிறார்கள்? இப்படி எத்தனை ஒத்திகைகள் நடந்திருக்கின்றன.

மனம் வலித்தது.

சில நிமிடங்களில் முக்கியமான பேச்சு ஆரம்பமாயிற்று. எல்லாரும் ஜாடை மாடையாய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். எல்லோர் முகத்திலும் திருப்தியின் அறிகுறி தெரியவே, பையனின் அம்மாக்காரி மெதுவாய் ஆரம்பித்தாள். "எங்களெல்லாருக்கும் பெண்ணைப் பிடிச்சிருக்கு. உங்க விருப்பத்தைச் சொன்னீங்கன்னா எல்லாத்தையும் இப்பவே பேசி முடிச்சிடலாம்!"

வேதலிங்கத்திற்கு முகம் மலர்ந்தது. ஒளிவு மறைவு இல்லாமல் வெளிப்படையாகப் பேசுகிறார்கள் என்று நினைத்துக் கொண்டு உள்ளே சென்றார். மகளையும் மனைவியையும் விசாரித்தார். மனைவி மட்டும் விருப்பத்தைத் தெரிவித்தாள். சுகந்தி ஒன்றும் சொல்லவில்லை.

திரும்பவும் அவளை ஒருமுறை கேட்டார், "நீ என்னம்மா சொல்றே?"

"நான் என்னப்பா சொல்ல வேண்டியிருக்கு? நீங்க சரின்னு சொன்னா எனக்கும் சம்மதம்தான்."

அவள் பதில் சொன்ன விதம் அவருக்குத் திருப்தியாய் இல்லை. இருந்தாலும் அதை அவர் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு பெண்ணுக்கு நல்ல கணவனைத் தேர்ந்தெடுப்பதன் பொறுப்பும் கடமையும் பெற்றோருக்கே இருப்பதாக நினைத்தார். கூடத்திற்குச் சென்று தொண்டையைச் செருமிக் கொண்டு உட்கார்ந்தார்.

"எங்கள் எல்லோருக்கும் சம்மதம்தான். நீங்கதான் மேற்கொண்டு சொல்லணும். எங்களுக்கு இவன் ஒரே பையன். இவனுக்கு நல்லபடியா ஒரு கல்யாணத்தைப் பண்ணிப் பார்த்துட்டோம்னா எங்க கடமை முடிஞ்சிடும். நாங்க ஊரிலேயே இருந்து காலத்தைத் தள்ளிடுவோம். நாங்கள் ஒண்ணும் பெரிசாக் கேட்கலே. ஒரு முப்பது சவரன் போட்டு அம்பதாயிரம் கொடுத்து, கல்யாணத்தை நல்லாப் பண்ணி வைச்சீங்கன்னாப்



மகுமிஞு

போதும்.''

வேதலிங்கத்தின் முகத்தில் சரேலென்று இருள் மண்டியது. ரேகைகள் படர்ந்தன. கண்களில் வியப்பும் ஏமாற்றமும் பளிச்சிட்டது. இருந்தாலும் தம் பாதிப்பை முழுதும் வெளிப்படுத்தாமல் வயதுக்கேற்ற பக்குவத்துடன் சொன்னார்.

''இப்படிக் கேட்டா எப்படிங்க முடியும்? எனக்கும் நாலு பொண்ணுங்க. ஒவ்வொருத்தருக்கா கல்யாணம் பண்ணி முடிச்சி இப்ப இந்தக் கடைசிப் பெண்ணுக்குப் பிரயத்தனம் பண்ணிக்கிட்டிருக்கோம். எங்களுக்கும் நிறையக் கடன் இருக்கு. இப்ப என் வியாபாரமும் அவ்வளவாச் சரியில்லே.''

''அதெல்லாம் இருக்கும்தான். எங்களுக்கும் கடன் இல்லாம இல்ல. எல்லாம் ஒரு அட்ஜஸ்ட்மெண்ட் பண்ணிக்கிட வேண்டியதுதான். இவனே மெட்ராஸுக்கு அனுப்பி பி. எஸ்ஸி. படிக்க வெச்சி அப்புறம் வேலே தேடி வாங்க நாங்களும் எவ்வளவோ செலவு பண்ணியிருக்கோம். அதெல்லாம் வெளியில சொல்ல முடியுமா?''

''சரி அதெல்லாம் இருக்கட்டும். சும்மா பேசிப் பிரயோஜனமில்லே. எங்க சக்தியைச் சொல்லிடறேன். எங்களால ஒரு பதினஞ்சாயிரம் தர முடியும். ஒரு இருபது சவரன் போட முடியும்.''

பையனின் அம்மா கசப்பான பொருளே விழுங்கியது போல முகத்தை வைத்துக் கொண்டாள். தலையாட்டி கணவனேயும் மகனேயும் மகளேயும் கிளம்பலாமா என்பது போல் பார்த்தாள். அவர்கள் சித்தமாய் இருப்பதை உணர்ந்ததும் எழுந்தாள்.

''அப்போ உங்க இஷ்டம். நாங்க வர்றோம்.''

''நல்லது.''

வேதலிங்கம் கைகூப்பி நமஸ்கரித்து அவர்களே வாசல் வரை சென்று வழியனுப்பி வைத்தார். அவர்கள் வெளியேறியதும் சுகந்தி அப்பாவிடம் வந்தாள்.

''ஏம்பா அப்படி மயங்கி மயங்கிப் பேசிக்கிட்டிருக்கீங்க? கட் அண்ட் ரைட்டாப் பேசி அவர்களே அனுப்ப வேண்டியதுதானே?''

''அதெப்படிம்மா பேச முடியும்? நான் பெண்ணைப் பெத்தவன். வயத்துலே நெருப்பைக் கட்டிக்கிட்டிருக்கிறவன். வளேஞ்சுதான் போகணும்.''

''உங்களே மாதிரி அப்பாக்கள் இருக்கிறதாலேதான் இந்தச் சமுதாயம் மாற மாட்டேனென்கிறது. அவங்க நெருப்பாப் பேசறது உங்களுக்குப் படலேயா? இருந்தாலும் எத்தனே பேராசை? அம்மாவும் பிள்ளேயும் ஒரேவர்க்கம். அம்மாவுக்குப்பணவெறின்னு பிள்ளேக்கு வேறே வெறி.''

''சுகந்தி அப்படியெல்லாம் பேசக் கூடாதும்மா. நீ என்ன இருந்தாலும் ஒருத்தனுக்குக் கழுத்தை நீட்ட வேண்டியவள். கொஞ்சம் பொறுமையா இருக்கணும். அதுதான் பொண்ணுக்கு லட்சணம்.''

அவள் அதற்குமேல் அங்கு நின்றிருக்கவில்லே. கோபமாய் முகத்தை வைத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றுவிட்டாள்.

வேதலிங்கம் அதன் பிறகு தம் வியாபாரத்தில் மூழ்கிப்போனார். வியாபாரப்பார்ட்டிகளுக்கு போன் செய்வதும் அடிக்கடி பாம்பே செல்வதும் நவீன போர்ட்டபிள் மாடல் நாற்காலி, மேஜை, அலமாரி ஆகியவைகளுக்கு ஆர்டர் கொடுப்பதுமாய் இருந்தார்.

ஒரு சமயம் அவர் கொடுத்த ஆர்டரின் படி அன்று வீட்டிற்கு நூறு புதிய போர்ட்டபுள் மாடல் அலமாரிகள் வந்திருந்தன. ஒவ்வொன்றும் அழகிய பேக்கிங் கேஸ்களில் இருந்தன. அத்தனேயும் ஸ்டோர் ரூமில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வியாபாரப் பார்ட்டிகளுக்கும் ஏஜெண்ட்டுகளுக்கும் வேதலிங்கம் போன் செய்தார். வியாபாரிகள் தொலைபேசியில் பேரம் பேசினர். சிலர் கட்டாதென்று ரிசீவரை வைத்துவிட்டனர்.

இரண்டு மூன்று ஏஜெண்டுகள் மட்டும் நேரில் வந்திருந்தனர். ஒவ்வொருவருக்கும் அந்த போர்ட்டபுள் பிளாஸ்டிக் மாடலேப் பிரித்துக் காட்டினார். அவர்கள் ஆர்வமாய்ப் பார்த்தனர். பிறகு தங்களுக்கு வேண்டிய கமிஷனேப் பேசிவிட்டு ஓரிரு நாட்களில் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றனர்.

ஒரு வாரத்திற்குப் பிறகு இன்னொரு ஏஜெண்ட் வந்தார். அவரும் அந்தப் புதிய மாடலேப் பார்க்க விரும்பினார். ஆனால் வேதலிங்கத்துக்கு அதைப் பிரித்துக் காட்ட விருப்பமில்லே.

வெறும் விட்டரேச்சரை மட்டும் எடுத்துக் காண்பித்தார்.

''இதைப் பாரப்பா. எல்லாம் டீடெய்லா இருக்கு. மார்க்கெட்ல இப்பதான் புதுசா வந்திருக்கு. ப்ளாஸ்டிக். ஃபர்ஸ்ட் க்வாலிடி. கலர் கூட எல்லாம் டெஸ்டர்ன் கலர்ஸ். எந்தக் கஸ்டமரும் கண்ணே மூடிக்கிட்டு வாங்கிடுவாங்க.''

நிழல் யுத்தம் — வாசகர் கருத்து:

• கடந்த இருபத்தேழு வார காலமாக வெளிவந்த பாலகுமாரன் எழுதிய 'நிழல் யுத்தம்' கதையில் வரும் சங்கரன், முரளி, லலிதா முதலிய பாத்திரங்கள் இன்னும் என் மனக்கண் முன்னுல் பவனி வந்து கொண்டிருக்கிறார்கள்.

சென்னே — 14. கே. வீரராஜன்.

• நிஜ வாழ்வில் நம்மிடையே நடக்கும் மனப் போராட்டங்களேத் தம் 'நிழல் யுத்தத்'தின் மூலம் அருமையாக விளக்கிவிட்டார் பாலகுமாரன். ஒவ்வொரு கதாபாத்திரமும் கதையில் வருவதாக இல்லாமல் நம் கண்முன் நடமாடும் நிஜ வடிவங்களாக இருந்தனர்!

கோவை — 5. செல்வி மாதவன்.

• ''மனிதனுடைய கௌரவம் அவன் நிழல் மாதிரி... அந்த நிழல் மனிதனில்லே. அதற்கு வலிமையில்லே. அது உயிரில்லே. ஆனால் அது கூடவே வரும். தனியே இருட்டில் கௌரவம் ஏதுமில்லே.



நாலு பேர் கண் வெளிச்சம்பட, பின்னால் அடைகாத்து நிற்கும்.'' — அற்புதமான வரிகள்.

காஞ்சிபுரம். பத்மநாபன்.

* ''ஒவ்வொரு வாரமும் கல்கியை எதிர்நோக்கிக் காத்திருக்கும்படி செய்துவிட்டது பாலகுமாரனின் 'நிழல் யுத்தம்'. தாய், தாரம் ஆகியோர் மீது செலுத்தும் அன்பில் இறுதியில் தாய் மீது செலுத்தும் அன்பே வெற்றி பெறுகிறது என்பதை முரளி மூலம் அறியாமை பத்ததோடு அழவும் வைத்து விட்டது.

திருநெல்விக்காவல். எஸ். அரிஅரன்.

* ''கல்யாண வயதில் இருக்கும் என் போன்ற பல இளைஞர்களின் கல்யாணக் கனவுகளைத் தெளிவுபடுத்தி, தாம்பத்திய வாழ்க்கையின் அப்பட்டமான உண்மைகளைத் திறம்பட எடுத்து விளக்கிய பாலகுமாரனுக்கு எனது வாழ்த்துக்கள்.''

சென்னை — 2. வை. அனந்த ராமகிருஷ்ணன்.

* ''நிழல் யுத்தம்'' தொடர்கதை முடிந்துவிட்டது. ஆனால் இன்றும் சில குடும்பங்களில் நிழல் யுத்தம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. பாலகுமாரன் மிக அருமையாக எழுதியுள்ளார். நல்ல சிந்தனை, நல்ல கருத்துக்கள், நல்ல முடிவு. எனது உளமார்ந்த பாராட்டுக்கள்!

சென்னை — 99. எம். ராஜப்பா.

* கையில் பேனா என்னும் மந்திரக்கோல் கொண்டு, என் போன்ற எண்ணற்றோரைத் தம் எழுத்தால் ஆட்டிப் படைத்து வரும் பாலகுமாரனுக்கு இதயபூர்வமான வாழ்த்துக்கள்!

பாண்டிச்சேரி. ல. ஸ்ரீராம்.

''அது இருக்கட்டும் சார்.. நான் பார்த்தால் எனக்கொரு திருப்தி இருக்கும் இல்லையா?''

''முடியாதுப்பா. சும்மா ஒவ்வொருத்தருக்கும் பிரிச்சுக் காட்டிக்கிட்டிருக்க முடியுமா? க்ளாம்ப்போட க்ரிப் போயிடுச்சுன்னு லூஸாயிடும். கைபட்டுக் கைபட்டு அழுக்காயிடும். அப்புறம் அந்த 'பீஸ்' வீணா சேல்ஸ் ஆகாமப் போயிடும். அதான் லிட்டரேச்சர்லே விலாவாரியாப் போட்டிருக்கே. உயரம் நாலடி அகலம் மூணடி...

அவன் விடைபெற்றுக் கொண்டான்.

''சரி சார்... நான் வரேன்.''

அடுத்த நாள் காலை போன் ஒலித்தது. வியாபார விஷயமாக இல்லை. கல்யாணத் தரகர் அற்புதசாமி பேசினார். வேதலிங்கம் அத்தனையையும் கவனமாய்க் காதில் வாங்கிக் கொண்டார். பிறகு சரியென்று சொல்லிவிட்டு ரிஸீவரை வைத்தார்.

சுகந்தி அலுவலகத்திற்குக் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தாள். வேதலிங்கம் இயல்பாய் மகளை விசாரித்தார்.

''என்னம்மா ஆபீஸுக்குப் புறப்பட்டுட்டியா?''

''ஆமாம்பா.''

''சாயங்காலம் கொஞ்சம் சீக்கிரமா வந்திடும்மா.''

அவளுக்கு மனம் விண்ணென்றது. விரக்தியாய் அவரைப் பார்த்தாள்.

''ஏம்பா திரும்பவும் என்னைப் பெண் பார்க்க வர்றாங்களா?''

''ஆமாம்மா.''

''தயவு செய்து போன் பண்ணி வர வேண்டாம்னு சொல்லிடுங்கப்பா!''

''சுகந்தி!'' பிரமித்துப் போய் மகளைப் பார்த்தார்.

''நான் ஒண்ணு கேட்கிறேன், சொல்லுவீங்களா?''

''கேளும்மா.''

''நேத்து ஒரு ஏஜெண்ட் போர்ட்டபுள் அலமாரியைப் பிரிச்சுக் காட்டச் சொல்லிக் கேட்டப்போ நீங்க காட்டினீங்களா?''

''அதெப்படிம்மா காட்ட முடியும்? ஒவ்வொருத்தருக்கும் திறந்து காட்டிக்கிட்டேயிருந்தா அப்புறம் அந்தப் பொருளுக்கு என்ன மதிப்பு? அதான் அவன்கிட்டே பார்த்துக்கோடான்னு லிட்டரேச்சரைக் கொடுத்தேன்.

''அப்ப ஒரு ஜடப் பொருளுக்கு இருக்கக் கூடிய மரியாதை கூட ஒரு குலப் பெண்ணுக்கு இல்லாம போச்சு, இல்லே?''

''சுகந்தி! நீ என்னம்மா பேசறே? அது வியாபாரம். இது வாழ்க்கை.''

''என் வாழ்க்கை கூட இப்ப வியாபாரமாத்தானேப்பா ஆயிப் போச்சு.''

''அதனாலே என்னம்மா பண்ணச் சொல்றே?''

''நான் கல்யாணம் பண்ணிக்க எந்தத் தடையும் சொல்லலேப்பா. ஆனா ஒண்ணே ஒண்ணு உங்களைக் கேட்டுக்கறேன்.''

''என்னம்மா அது?''

''அந்தப் போர்ட்டபுள் அலமாரிக்கு எப்படி ஒரு லிட்டரேச்சரைக் காட்டினீங்களோ, அதே மாதிரி எனக்கும் ஒரு லிட்டரேச்சரைத் தயார் பண்ணுங்கப்பா. படிப்பு இவ்வளவு; சம்பளம் இவ்வளவு; வரதட்சணை இவ்வளவு; உயரம் இவ்வளவுன்னு சொல்லுங்க போதும்... அதில் அமைந்தால் அமையட்டும்... தயவு செய்து நேர்ல பெண் பார்க்க வரச் சொல்லாதீங்க...''

''சுகந்தி!''

அவர் மகளை நிமிர்ந்து பார்த்த போது அவள் கண்கள் கலங்கியிருந்தன. அவருடைய கண்களும்தான்!

சிவசங்கரி

வேரில்லாத மரங்கள்

23

"அத்தம்மா..."

பால் பாக்கெட்டுகளைக் கவனத்துடன் ஓரத்தில் வெட்டி, ஒவ்வொன்றாய்ப் பாத்திரத்தில் ஊற்றிக் கொண்டிருந்த பரிமளம், திரும்பாமலேயே 'அட!' என்றார்.

"ஆறரை மணி ஆனாலும் எழுந்திருக்க மாட்டேன்னு பண்றவ, இன்னிக்கு இத்தனை சீக்கிரமா எழுந்திட்டியே!"

வசந்தா 'ப்ச்' என்று அலுத்துக் கொண்டாள்.

அருகில் வந்து சுவரில் சரிந்தபடி நின்றாள்.

"தூக்கம் வரலை அத்தம்மா..."

காலி பாக்கெட் ஒவ்வொன்றுக்குள்ளும் கொஞ்சம் நீரை விட்டுக் குலுக்கி, அதை பால் இருந்த பாத்திரத்தில் பரிமளம் விட்டார்.

"ராத்திரியே கவனிச்சேன்... பொரண்டுக்கிட்டேதான் இருந்தே... உடம்புக்கு முடியலையா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல அத்தம்மா... மனசு பரபரன்னு இருக்கறதுல தூங்க முடியலை..."

"ஞானஸ்நானம் நல்லபடியா நடந்து முடியணுமேன்னு எனக்குக் கூடத்தான் கவலையா இருக்கு... குழந்தைக்கு நாலு நாளா காய்ச்சல்... நேத்துதான் மட்டுப்பட்டிருக்கு... இதோட கோயிலுக்கு எடுத்துப் போய் அலைக்கழிக்கறதுல மறுபடியும் காய்ச்சல் வராம இருக்கணுமேன்னு பதைப்பா இருக்கு..."

வசந்தா உதட்டை மடித்து முகத்தைச் சுளித்தாள்.

"எனக்கொண்ணும் ஞானஸ்நானம் நல்லபடியா நடக்கணுமேன்னு பதற்றமா இல்ல... அத நினைச்சு பதற்றப்பட என்ன இருக்கு? கோயிலுக்கு எடுத்துப் போறது, சாமியார் நடத்தி வைக்கப் போறார்..."

பாலைக் கிளறிய வண்ணம் பரிமளம் திரும்பி மருமகளை ஏறிட்டார்.

"அப்புறம்?"

"என்ன அத்தம்மா, ஒண்ணுமே நினைவில்லாதது போலக் கேக்கறீங்க? இன்னிக்குத்தான் நான் முதல் முதல்ல வேலைக்குப் போகப் போறேன்... மெய்யாலுமா மறந்திட்டீங்க?"

பரிமளம் சிரித்துச் சமாளிக்க முயன்றார்.

"அ! ஆமா? இன்னிலேர்ந்து நீ வேலைக்குப் போகப் போறே இல்லே! ஞானஸ்நானம் நடக்கப் போற அமர்க்களத்துல அதை நான் நினைக்கவேயில்லை... கர்த்தரோட ஆசீர்வாதத்துல எல்லாம் நல்லபடியா நடக்கும். கவலைப்படாதே... பல் விளக்கிட்டியா? பீடத்துல விளக்கேத்தி வச்சிருக்கேன்... போய் ஜபம் சொல்லிட்டு வா... காப்பி கலந்து தர்றேன்..."

பேசி அரை நிமிஷம் ஆகியும் வசந்தா நகராமல் நிற்க, பரிமளம் கொஞ்சலாகப் பேசினாள்.

"போம்மா... பல் விளக்கிட்டு ஜபம் சொல்லிட்டு வான்னு சொல்றேன் இல்ல..."

"பல் விளக்கிட்டேன் அத்தம்மா..."

"அப்போ, பீடத்து கிட்டே போய், ஜபம் சொல்லிட்டு வந்திடு."

"ஜபம் சொல்லாட்டி காப்பி தர மாட்டீங்களா?"

"ஏசுவே" என்று முணுமுணுத்த பரிமளம், "ஏன்தான் இந்தப் பெண்ணை இப்படிக் காலை வேளைல மொரண்டு பண்ண வைக்கறியோ!" என்றாள் தொடர்ந்து.



எதற்கும் மசியாமல் வசந்தா நிற்க, பாலைக் கிண்டுவதை விட்டுவிட்டு அவள் கையை வாஞ்சையுடன் பரிமளம் பிடித்துக் கொண்டாள்.

"உறங்கி எழுந்து முகம் கழுவிக்கிட்டதும், பீடத்து விளக்கை ஏத்தி, ஜபம் சொல்லிப் பிரார்த்திக்கிறது நல்ல வழக்கம் வசந்தா. இந்தப் பிறவியைக் கொடுத்த ஆண்டவருக்கு நன்றி சொல்லி, நாளை நல்லபடியா கழிக்க வேண்டிப் பெரியவங்க ஏற்பாடு செஞ்சு வெச்ச பழக்கத்தை ஏனோ புரிஞ்சுக்கவே மாட்டேங்கறே... ம்... இப்படியே நீ இருந்தா... உன்னை ஒருத்தரும்

ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. ஆனா, தாய் தகப்பன் இல்லாத பொண்ணுக்கு அடிப் படை நல்ல விஷயங்கள் கூட இந்த அத்தைக்காரி கத்துத் தரலே பாருன்னு என்னைத்தான் ஏசுவாங்க... போம்மா, போய் ஜபம் சொல்லிட்டு வா... அரை நிமிஷம் கண்ணை மூடிக்கிட்டு நின்னு, 'ஏசுவே — எம்மை ரட்சியும்'னு பிரார்த்திச் சிட்டு வர்றது அத்தனை கஷ்டமான வேலை யாம்மா, ம்?... போ..."

அவளைத் திருப்பி, பீடம் இருந்த உள் அறைப்பக்கம் லேசாகப் பரிமளம் தள்ள, மனசில்லாமல் வசந்தா போனாள்.

முந்தின வருஷம் அந்த வீட்டுக்குக் குடி வந்த பிறகு, பங்கு சாமியாரை அழைத்து,



வீட்டை மந்திரித்து, அந்த அறையில் இருந்த அலமாரியில் ஏசு படத்தை ஸ்தாபித்ததி லிருந்து, அதுதான் அந்தக்குடும்பம்வழிபடும் பீடமாக, இருந்து வருகிறது.

அலமாரி ஷெல்ப்பில் நடுநாயகமாய் — உங்களின் நன்மைக்காக நான் ரத்தம் சிந்து கிறேன் என்னும் அர்த்தத்தில், ரத்தம் வடியும் இருதயத்தோடு காணப்படும் ஏசு வின் படம்.

இரண்டு பக்கமும் மெழுகுவர்த்தி ஸ்டாண்டுகள்.

இந்தியக் கலாசார வழக்கத்தின்படி எண்ணெய்த் திரிபோட்டு ஏற்றப்பட்ட விளக்கு, பிளாஸ்டிக் பூமாலை...

உள்ளே வந்த வசந்தா பீடத்தின் முன் மண்டியிட்டாள்.

நெற்றியில் துவங்கி நெஞ்சில் சிலுவைக் குறி இட்டுக் கொண்டாள்.

கண்களை மூடி ஜபித்தாள் —

— பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப் படுவதாக! உம்முடைய ராஜ்யம் வருக! உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப் படுவது போல் பூலோகத்திலும் செய்யப் படுவதாக... ஆமென்...

அவள் மீண்டும் சமையல் கட்டுக்குள் சென்றபோது காப்பியுடன் பரிமளம் தயா ராக இருந்தார்.

ஒரு டம்ளரை அவளிடம் நீட்டிய பரிமளம், இன்னொன்றைத் தம் கையில் எடுத்துக் கொண்டார்.

கண்களை மூடி உரக்கத் தியானித்தார். "சர்வேஸ்வரா ஸ்வாமி — என்னையும், உமது அருளினால் நான் புசிக்கப் போகும் இந்த உணவையும் ஆசீர்வதித்து அருளும்... ஆமென்..."


"ஆமென்..." என்று முனகின வசந்தா காப்பியை ஒரு வாய் குடித்துவிட்டு, சின்னக் குரலில் 'அத்தம்மா' என்று அழைத்தாள்.

"ம்?"

"வந்து — இன்னிக்கு ஞானஸ்நான வைப வத்துக்கு நான் கோயிலுக்கு வந்தே ஆக ணுமா?"

"என்னது?"

"கோவிலுக்கு வந்திட்டு, கிளம்பறதுன்னு



''உங்க பத்திரிகையில் பிரசுரமாகாத எனது படைப்புகளைத் திரும்பப் பெற என்ன செய்யணும்?''

''இனி சத்தியமா எழுதவே மாட்டேன்னு உறுதி மொழிப் பத்திரம் எழுதித் தரணும்!''

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.

நாழியாயிடும்... முதல் நாளே யாராச்சும் வேலைக்குத் தாமதமாப் போவாங்களா?''

''அதுக்காக வரமாட்டேன்னு சொல்றதா? தாஸ் காதுல விழுந்தா கத்தப் போறான்..''

''அதனால்தான் உங்ககிட்டே சொல்றேன். அத்தம்மா... அண்ணன்கிட்டே பக்குவமா...''

முடியாது என்று தலை அசைத்தாள் பரிமளம்.

''ரெண்டு பொண்களுக்கப்புறம் பிறந்திருக்குற மகனுக்குத் தடபுடலா ஞானஸ்நானம் பண்ணணும்னு உங்கண்ணன் ஆசைப்படறப்போ, நீ வரமாட்டேன்னு சொன்னா நல்லா இருக்குமா, வசந்தா? எத்தனை மணிக்கு நீ ஆபீஸ்ல இருக்கணும்? ஒன்பதரைக்கா? ஒன்பதுக்குள்ள ஞானஸ்நானம் செஞ்சு வச்சிடறதா சாமியார் தாஸ் கிட்ட சொல்லிக்கிட்டு 'இருந்தாரு... கோயில்லேர்ந்தே நீ நேராப் போயிடலாம்... வீணா எதையாவது பேசி, அண்ணன் கோவத்துக்கு ஆளாகாதே... கையில டிபன் கட்டித் தரட்டுமா? இல்ல இன்னி ஒரு பொழுதுக்கு ஆபீஸ்லேயே பார்த்துக்கறியா?''

அத்தை தீர்மானமாகப் பேசின பிறகு, இனியும் அங்கு நிற்பதில் அர்த்தம் இல்லை என்பது புரிய, வசந்தா காலி டம்ளரை முற்றத்தில் கழுவிக் கவிழ்த்துவிட்டு, வாசல் பக்கமாய் நடந்தாள்.

அவளுடைய அண்ணன் தாஸ், அண்ணி மல்லிகாவின் அருமைப் புத்திரனுக்கு அன்று ஞானஸ்நான வைபவம் நடக்கப் போகிறது.

வெள்ளன கோயிலுக்குப் போனால்தான், எல்லாம் முடிந்து ஒன்பதுக்குள் இவள் கிளம்ப முடியும்...

ஆறு மாசமாய்த் தேடி அலைந்த வேலை கிடைத்து, முதல் நாள் வேலைக்குப் போகும் இன்றைக்குத்தா ன இந்த ஞானஸ்நானமும் அமர்க்களமும் சேர்ந்து கொள்ள வேண்டும்?

அண்ணன் அண்ணியிடம் இதுகுறித்து எதுவும் பேச முடியாது. அண்ணனுக்குக் கோயில், வழிபாடு என்று வந்துவிட்டால் தலைகால் புரியாது. 'கோவிலுக்கு வர முடியாம தடுக்குற அந்த வேலைக்கு நீ போக வேண்டியதில்ல... நீ வேலைக்குப் போய்த்தான் இங்க குடும்பம் நடக்கணும்னு எந்த முடையும் இல்ல... புரியுதா?' என்று உறுமுவதோடு நிற்க மாட்டார். வேலையை விடச் செய்து விட்டுத்தான் உட்காருவார்.

ஏனோ, அண்ணனுக்கு இவள் வேலைக்குப் போவதில் அவ்வளவு விருப்பம் இல்லை.

''தாய் தகப்பன் இல்லாத பொண்ணை வேலைக்கு அனுப்பிவிட்டு இவன் வேடிக்கை பார்க்கறான் பாரு'ன்ற கெட்ட பேர்தான் எனக்கு வரப் போறது. சொன்னா நீ கேக்க மாட்டேங்குறே... தையல் கிளாஸ், குக்கரி கிளாஸ்னு போய் வந்தா பத்தாதா? வர்ற வருஷம் எப்படியும் உனக்குக் கல்யாணம் பண்ணிடறதாத்தான் இருக்கேன். அருள் சாமியோட பையன் ஆல்பர்ட் அமெரிக்காலேர்ந்து தை மாசம் வர்றானாம்... வந்ததும் முடிச்சிடுவோம்னு அருள்சாமி சொல்லிட்டாரு... அதுக்குள்ள உனக்குப் பொறுக்கலே... வேலைக்குப் போயே தீருவேன்னு பிடிவாதம் பிடிச்சு, சாதிச்சுக்கிட்டே... கூடாதுன்னு திட்டவட்டமாச் சொல்லவும் மனசாகல... தாய், தகப்பன் இல்லாத பொண்ணுக்கு நம்பள விட்டா யாருன்னு தயக்கமா இருக்கு...''

எப்படியோ கெஞ்சி, அழுது, வாதாடி வேலைக்குப் போக அனுமதி வாங்கியது ஒரு கதை என்றால், நல்ல இடத்தில் மனசுக்குப் பிடித்த வேலை அமையத் தேடியது இன்னொரு கதை...

இந்தச் சமயத்தில் 'கோயிலுக்கு வரலை, வேலைக்குப் போகணும்' என்றால், அத்தை சொல்வது போல வேண்டாத வம்பை விலை கொடுத்து வாங்குவதாகத்தான் ஆகிவிடும்...

வசந்தா மாற்றுடைகளை எடுத்துக் கொண்டு குளிக்கப் போனாள்.

கவனம் அண்ணன் இவளுக்காகக் குறி வைத்திருக்கும் ஆல்பர்ட்டிடம் ஓட, அடி வயிற்றில் குமட்டியது.

எருமை மாடு மாதிரி ஓர் அசட்டு வளர்த்தி... தொந்தியும் தொப்பையுமாய், சிகரெட் பிடித்துப் பிடித்துக் கருப்பேறிய உதடுகளும், பொறுக்கிப் பார்வையுமாய்... குடிப்பழக்கம் கூட எக்கச்சக்கமாய் உண்டு என்று பேசிக் கொள்கிறார்கள்.

ஏனோ இவனைப் போய் அண்ணன் நல்ல இடம் என்று தலையில் வைத்துக் கொண்டு கூத்தாடுகிறார்...

தை மாசத்துக்கு இன்னும் எத்தனை மாசங்கள் இருக்கின்றன? ஆறு... ஏழு? அதற்குள் எப்படியாவது பக்குவமாய் அத்தை மூலம், அண்ணி, அண்ணன் மனங்களை மாற்றி இந்தச் சம்பந்தம் வேண்டாம் என்று சொல்ல வைத்துவிட வேண்டும்...

பின்னே?

புருஷன் என்றால், நம்பி வந்த பெண்ணை வழி நடத்தி அழைத்துப் போகக் கூடிய ஆண்மகனாக அல்லவா இருக்க வேண்டும்!

கம்பீரமானவனாய், கண்களுக்கு லட்சணமானவனாய், மனைவியின் அருமை பெருமை தெரிந்தவனாய்...

"வசந்தா பாத்ரூமுக்குள்ள இன்னும் என்ன பண்ணிக்கிட்டு இருக்கே...? மளமளன்னு தயாராகிக் குழந்தையை ரெடி பண்றதை விட்டுட்டு...?"

தயாரானாள்.

வெள்ளை ஜார்ஜெட் புடைவை, ஸ்லீவ்லெஸ் வெள்ளை டைட் ரவிக்கை அணிந்து, முடியை பிரஷ் செய்து காற்றில் பறக்க விட்டாள். கழுத்தில் எப்போதும் அணியும் செயின், இடது கையில் ரிஸ்ட் வாட்ச்.

ஞானத்தாய், தகப்பனாகப் பொறுப்பேற்க முன்வந்துள்ள பால் பாண்டியன் தம்பதி வந்து சேர்ந்ததும், பெற்று நாளாகாத காரணத்தால் மல்லிகா வர முடியாது என்பதால் பதினாறு நாட்கள் ஆன சிசுவை பரிமளம் தூக்கிக் கொள்ள, கிளம்பினார்கள்.

நாலு தெருக்கள் தள்ளி இருந்த சர்ச்சை அடைந்ததும், ஞானத்தாய் ரோஸி, குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டார்.

சடங்குகளைத் துவங்கும் முன், வாசலில் அவர்களை நிறுத்தி "பிசாசை விட்டு விடுகிறாயா? அதன் ஆதிக்கத்தை விட்டு விடுகிறாயா? கடவுளை ஏற்றுக் கொள்கிறாயா? விசுவாசப் பிரமாணம் செய்ய முன் வருகிறாயா?" — என்று பாதிரியார் வினவி, குழந்தையின் சார்பில் அத்தனைக்கும் ஞானத்தாய் சரி, சம்மதிக்கிறேன் என்று கூறியதும், உள்ளே வந்தார்கள்.

ஞானஸ்நானத் தொட்டியை அடைந்ததும், ஒரு கையில் மெழுகுவர்த்தியை ஏற்றிக் கொண்டு இன்னொன்றில் வெள்ளை உடை உடுத்திய குழந்தையை ஞானத்தாய் ரோஸி அழுத்தமாகப் பிடித்துக் கொண்டார்.

பங்கு சாமியார் குழந்தையின் நாக்கில் உப்பைத் தடவினதும், என்றும் நல்ல கிறிஸ்துவனாகத் திகழும் உத்தேசத்துடனும், ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்ட குலம் என்பதை உணர்த்தவும் குழந்தையின் நெற்றி, நெஞ்சு, முதுகில் உடையை விலக்கிப் பரிமள தைலம் பூசப்பட்டது.

பிறகு தொட்டித் தண்ணீரைச் சிலுவை ரூபத்தில் மூன்று தரம் குழந்தையின் தலையில் ஊற்றியபடியே பாதிரியார், "தாமஸ் சந்திரன் — பிதா சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் நான் உன்னைக் கழுவுகிறேன்" என்று கூற, ஞானஸ்நானம் நல்ல விதமாய் நடந்து முடிந்ததை உணர்த்த கோவில் மணி அடிக்கப்பட்டது.

விசேஷப் பிரார்த்தனையைத் தொடர்ந்து, பிரசாதம் அளிக்கப்பட்டதைப் பெற்றுக் கொண்டு, பாதிரியாரிடம் ஆசீர்வாதம் பெற்று, அவருக்கு நன்றி சொல்லிவிட்டு அண்ணன் விடை பெற்றுக் கொள்வதற்குள் 'மணி ஆகிவிட்டது' — என்று இருப்புக் கொள்ளாமல் வசந்தா தவித்துத்தான் போனாள்.

சர்ச் வாசலில் ஒவ்வொருவரிடமும் ஞானஸ்நான வைபவத்துக்கு வந்திருந்து கௌரவித்தமைக்கு தாஸ் நன்றி கூறின நிமிஷத்தில் பரிமளத்திடம் சென்று, "நான் கிளம்பறேன். அண்ணன்கிட்டே சொல்லுங்க..." என்று வசந்தா முணுமுணுக்க... குழந்தையுடன் தாஸிடம் பரிமளம் போனாள்.

"அப்ப, வசந்தா இங்கிருந்தே கிளம்பிப் போகட்டுமா, தாஸ்? அவளுக்கு ஒன்பதரைக்கெல்லாம் ஆபீஸ்ல இருக்கணுமாமே!"

நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்த தாஸ் லேசான கோபத்தில் புருவங்களை உயர்த்தினான்.

"இப்படியே எப்படி அத்தம்மா அனுப்பறது? வீட்டுக்கு வந்து குழந்தையை மல்லிகாகிட்டே கொடுத்திட்டு, இனிப்புச் சாப்பிட வேணாமா?"

"குழந்தையோட வீட்டுக்கு வர, அதான் நாங்க இத்தனை பேருங்க இருக்கமே. அவ எதுக்கு? முதல் நாளே வேலைக்கு லேட்டாப் போனா எப்படி? அது நப்பிச்சுடு..."

அண்ணனின் சம்மதமாய்த் தலை அசைவு கிடைத்த சந்தோஷத்தோடு பரிமளத்தை அணைத்து, "வரேன்' அத்தம்மா" என்று கூறி, திரும்பின நிமிஷத்தில் வசந்தா அவனைப் பார்த்தாள்.

பெல்ஸ் பேண்ட், கோடு போட்ட ஷர்ட்டில், கம்பீரமாய், ஓர் இளவரசனைப் போன்ற தோற்றத்துடன் எதிரில் நின்றவன் சட்டென்று திரும்பியதில் இருவர் பார்வையும் சந்தித்துக் கொண்ட போது, நெற்றி விபூதிப் பூச்சு, அந்தக் காலை வெயிலில் பளிச்சென்று தெரிந்தது.

('தொடரும்)



"என்னங்க, ஒரு கதை பிரசுரமானால் ரூபாய் நூறுன்னு சொன்னீங்க. ஆனா அறுபது ரூபாய் முப்பது காசுதான் அனுப்பி இருக்காங்க?"

"கதையில பிழைகள் இருந்துச்சாம்; அதுக்கானதைக் குறைச்சுக்கிட்டு, மீதியை அனுப்பி இருக்காங்க!"

— கடுவை கோபால்சாமி.



'வித்தியாசம் தெரிகிறது. ப்ரொபஸர் எப்போதும் போலில்லை. ஸம்திங் ராங்...' மனசுக்குள் தோன்றினாலும் பேசாமல் அவரோடு நடந்தேன். லஞ்ச் டைம் எப்போது வருமென்று காத்திருந்து காரிடாரில் நடக்கும் போதே அன்றைய வகுப்பு விசேஷங்களைச் சொல்லி அதிர அதிரச் சிரித்துக் கொண்டு வரும் ப்ரொபஸர் சந்திரன் காணாமல் போயிருந்தார். குனிந்த தலை, இறுகிய முகம்...

கேண்டீன் வந்தது. எப்போதும் உட்காரும் மேசை.

"ப்ரொபஸர்..." என் இரண்டாவது கூப்பிடுதலுக்கு நிமிர்ந்தார்.

"வாட்ஸ் ராங் வித் யூ... சும்முனு உட்கார்ந்திருக்கிங்க..."

"நத்திங்" சிரிக்க முயன்றார்.

"எங்கே, என்னை நேராப் பார்த்துச் சொல்லுங்க."

'உன் கண்ணைப் பார்த்து எவனும் பொய் சொல்ல முடியாது பிரகதீ...' என்று என்றோ என்னைப் பார்த்துச் சொன்ன சந்திரன் இன்று குனிந்து உட்கார்ந்திருந்தார்.

"ப்ரொபஸர்... ஷேர் பண்ணிக்கறதைப் போல பெஸ்ட் மெடிசின் வேற ஏதுமில்லைன்னு சொல்லியிருக்கிங்க. எனக்குத் தெரிஞ்சு நீங்க எந்த விஷயத்துக்கும் கவலைப் பட்டதில்லை. பட் நௌ..." காத்திருந்தேன்.

அவர் ஆழமாய்ப் பெருமூச்சு விட்டார்.

"பிரகதீ... நம்ம காமர்ஸ் ஸெகண்ட் இயர் ஜானகியும் எம். காம். ராபர்ட்டும்..." அவர் முடிக்கவில்லை. நான் சிரித்தேன்.

"என்ன ப்ரொபஸர்... காதலிக்கறதும், ஊரை எதிர்த்துக் கல்யாணம் பண்ணிக்கறதும், நமக்குப் புதிதில்லையே. வீ ஆர் லிவிங் இன் 1987..."

"அதனாலே... அவங்க செஞ்சது தப்பில்லைங்கறியா?"

"அது அவரவர் மனசைப் பொறுத்த விஷயம்..."

"அவன் மதம் வேறே... ஜானகி மதம் வேறே; ஜாதி வேறே..."

"ப்ரொபஸர்... நீங்களா இப்படிப் பேசறது? ஜாதி, மதம், வித்தியாசம் பார்த்தா நீங்க பேசறீங்க? பழகறீங்க?"

"ஐ'ம் ஸாரி பிரகதீ... மனிதர்களுக்கிடையில் தகராறையும் இடைவெளியையும் உண்டு பண்ணுகிற விஷயங்களில் இரண்டு, ஜாதியும், மதமும். ராபர்ட் கிறிஸ்டியன். ஜானகி பிராமின்... எப்படி ஒத்து வரும்?"

"மனசு இணையறதுக்கும் மதத்துக்கும் என்ன சம்பந்தம் ப்ரொபஸர்?"

"அவன் கிறிஸ்துமஸ் கொண்டாடுவான். இவ தீபாவளி கொண்டாடுவா... அவன் சண்டே கோயிலுக்குப் போவான். இவ ஃப்ரைடே போவா. உன் கடவுள் ஒசத்தி... என் கடவுள் ஒசத்தின்னு தகராறு வருமே...?"

போட்டிக் கதை — 9



"நீயும் உன் தம்பியும் சொத்துக்காகச் சண்டை போட்டுப் பாகப்பிரிவினை செய்து கொண்டீர்களே! யார் யாருக்கு என்னென்ன கெடைச்சுது?"

"50 சதம் டாக்டருக்கும்; 50 சதம் வக்கீலுக்கும் போய்ச் சேர்ந்து விட்டது!"

"இவிட்... நீங்க சொல்லுங்களேன். எந்தக் கடவுள் ஒசத்தி?"

"......"

"ப்ரொபஸர். அவன் ஏசுவைக் கும்பிடறதோட நிறுத்திக்கிட்டா தகராறே வராது. உன் கடவுள் கல்லு; பொய்யின்னு சொன்னாத்தான் சண்டை வரும். காரணம், அவனுக்கு அந்த ரைட் இல்லை. எங்கம்மா கெட்டவள்னு நீங்க சொல்லிங்கனா? சொன்னா நான் சும்மா விடுவேனா? இன்னைன்னு ப்ரொபஸர்... எல்லாக் கடவுளுக்கும் மூலம் ஒண்ணுதான். அந்த மூலம் மனிதனுக்கு நல்லதைத்தான் நினைக்கும். நல்லதைத்தான் செய்யும். தெய்வம் ஒரு நாளும் மனிதனை வதைக்க நினைக்கிறதில்லை."

"அப்போ அந்த மூலத்தை நீ சிவன்னு சொல்லே..."

"ஆமாம்... ராபர்ட் ஜீஸஸ்னு சொல்வான். ரெண்டு பேர் மேலேயும் தப்பில்லை ப்ரொபஸர். மனிதனுக்குச் சுயநலம் ஜாஸ்தி. கடவுளைக் கூட தனித்தனியா எனக்கு உனக்குன்னு பிரித்து ஆளாளுக்குப் புடிச்ச மாதிரி பெயிண்ட் அடிச்சிருக்கிறோம். தட்ஸ் ஆல்..."

"அப்படியும் இடிக்குதே. ஜீஸஸ் செஞ்ச பாவத்துக்கு மன்னிப்பு உண்டுன்னாரே.... இந்து தர்மம் அப்படிச் சொல்லலியே?"

அவ்வளவுதான் நீங்க புரிஞ்சிக்கிட்டது. செய்த பாவத்தை நினைத்து வருத்தப்பட்டு மன்னிப்புக் கேட்டால் மன்னிப்புக் கிடைச்சிடும். இது கிறிஸ்துவத்திலே. அதே மாதிரிதான் இந்துக்களும் செஞ்ச பாவத்துக்குப் பரிகாரமா காசியும், பத்ரியும் போயிட்டு வர்றாங்க. கங்கையில் குளிச்சவன் பாவம் கரைஞ்சதா நெனைக்கிறானே! பாவம் கங்கைத் தண்ணியாலே கரையலே... அந்த நிமிஷம் அவன் மனசு உருகி, 'என்னப்பனே என் பாவத்தை இல்லாத பண்ணிட்டே'ன்னு சொல்றான் பாருங்க... அந்த நிமிஷ சரண்டர்தான் அவனை மாத்துது. மனசிலே நிம்மதி

குடியேறுது. கிறிஸ்டியானிட்டி வெளியிலேர்ந்து வந்த மதம். அதனால அதில் நிறைய அலங்காரம் இல்லே. இந்து மதம் இங்கேயே பிறந்தது. காலங்காலமாக் கடவுளுக்கே அலங்காரம் பண்ணிப் பார்த்த மனுஷங்க... அதனால் அவங்க செய்கைகளிலே பல வழி முறைகள்...''

''அப்போ மூலம்னு சொன்னியே, அதை ஜீஸஸ்னு நீ ஏத்துக்குவியா?''

''நெவர்... நான் ஏன் ஏத்துக்கனும்? நான் ஒரு இந்து. மூலம்னா சிவனைத்தான் நினைப்பேன்...

''அப்போ எல்லா மதமும் ஒண்ணு தானா...? எல்லாக் கடவுளும் ஒண்ணு தானா?''

''எல்லா மதங்களோட கடவுளோட நோக்கமும் ஒண்ணுதான். அதுதான் மனுஷனுக்கு நல்லது செய்யறது... யூ நோ ஒன் திங்... கடவுளை நம்பற நான் இப்படிச் சொல்றேன். ஆனால், இதே பாவம், பிரார்த்தனை எல்லாத்தையும் ஒரு கம்யூனிஸ்ட், சைக்காலஜியோட ஜாயின் பண்ணிடுவான். அவன் பார்வைக்கு அவன் சரி... என் பார்வைக்கு நான் சரி... இதில யாருக்குப் பிரச்னை?''

''அப்போ... ராபர்ட்டுக்கும், ஜானகிக்கும் இடையில் இந்தப் பிரச்னை வராதுங்கிறியா?''

''எப்படி வரும்? உண்மையான அன்பில் இணைந்த இரண்டு பேரில், யாரோட கடவுளுக்கு இது பிடிக்காமல் போகும், ப்ரொபஸர்? எந்தக் கடவுளும் மனிதனை தப்புப் பண்ணச் சொல்லலே. அடுத்தவன் கடவுளைக் குறை சொல்லாம, அவனவன் நடந்தாலே இன்னைக்கி உலகம் இப்படி ஆயிருக்காது ப்ரொபஸர். ஜாதியைப் பொறுத்தவரைக்கும் வருகிறதலைமுறைகளில் அது சுத்தமா காணாமல் போயிடும். மதம் ஒரு நாளும் மனிதன் வாழ்வைக் கெடுக்காது. பிரிவினை உண்டாக்காது.''

''சரி... நீயும் நானும் புரிஞ்சுக்கிட்டா போதுமா? ஜானகிக்கும், ராபர்ட்டுக்கும் யார் சொல்றது?''

நான் சிரித்தேன்.

''ப்ரொபஸர்... அவங்க ஊரை எதிர்த்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க, உண்மை. என்னை எதிர்த்து இல்லியே.... கல்யாணத்திற்கு நான்தான் நெறைய ஹெல்ப் பண்ணினேன். இந்த விஷயத்தையும் சொல்லியிருக்கேன். தே கான் மேனேஜ். என்ன ப்ரொபஸர் அப்படிப் பார்க்கறீங்க?''

''இல்ல... ஐ'ம் நௌ ஃபார்ட்டி ஃபைவ். இருபது வருஷங்களுக்கு முன்னாடி இதையெல்லாம் யாராவது எனக்குச் சொல்லி இருந்தா, நான் உன்னைச் சந்திச்சிருந்தா...''

''சந்திச்சிருந்தா?''

''இன்னைக்கு நான் பிரம்மச்சாரியா கேண்டீன் சோறு திங்க வேண்டியிருந்திருக்காது. என் ஷெல்மா எனக்குக் கிடைச்சிருப்பா. நான் விட்டுக் குடுத்திருக்க மாட்டேன்...''

அவர் தாம் பிரிந்து வந்த குயிலைக் காற்றில் தேடிக் கொண்டிருக்க, நான் அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்தேன்.

அடுத்த இதழ்...

வ. உ. சி. மாவட்டத்தில் கல்கி — II



- தடைப்பட்டுக் கிடக்கும் தமிழக முன்னேற்றம்...
  — கவர் ஸ்டோரி

- ''சொன்னதைச் செய்தீர்களா?''
  — ஒரு நகரசபைத் தலைவரிடம் கேள்வி!




- ''உங்கள் ரீ—விசிட்டுக்கும் நாங்கள் காத்திருக்கிறோம்!''
  — வ. உ. சி. மாவட்டக் கலெக்டர் பேட்டி!



படியுங்கள் இதோ...ஃபேர் அண்ட் லவ்லி எப்படி ராதாவுக்கு கவனிக்கத் தக்க சிகப்பழகை அளித்துவிட்டது... இயற்கைக்கே உரிய இதமான வழியில்.

விளக்கேற்றி வணங்குகிறாள் ராதா...நெஞ்சிலே நன்றிக் கீதம்—பூரணமாய்த் தன் மீது பொன்மாரி பொழிந்ததற்கு, மேனிமலர நன்றி... நன்றி பொங்க வாழ்த்துகிறாள் ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமை. எந்தப் பெண்ணும் கனவு காணும் பொன்வண்ணம்—சிகப்பழகு, அதனை மேனி மென்மையோடு இயல்பாகப் பூக்க வைத்த க்ரீம்—அதன் வண்ணஜாலமோ, துவக்கிய இரண்டே மாதங்களில்! நடந்ததை நம்பமுடியவில்லை. இந்நாளிலோ, ராதாவின் காதுகளில் ராகமென ஒலிக்குது ராஜா 'அவர்' கொஞ்சும் ரகசியப் புகழுரை: ''பொன்னிறமாய் பூக்குதே உன் அழகு...!''

ராதாவைப் போலவே உங்களுக்கும், அந்த சிகப்பழகுக் கனவு பலித்திட முடியும் - ஃபேர் அண்ட் லவ்லி துணையோடு.




ஃபேர் அண்ட் லவ்லி துவங்குமுன்



ஃபேர் அண்ட் லவ்லி உபயோகிக்கும் நாட்களில்

ஒரு முக்கிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு...

ஃபேர் அண்ட் லவ்லி, இயல்பாக உங்களை சிகப்பழகியாக்க இதிலுள்ள ஒப்பற்ற ஃபார்முலா—இரு முக்கிய வழிகளில் வேலை செய்கிறது. ஒன்று: சருமத்தின் அடியாழத்தில்



செயல்பட்டு, உடல் கறுக்கும் உள்வினையைத் தடுக்கிறது—வேறெந்த க்ரீமுக்கும் இது இயலாத சாதனை. மற்றொன்று: இதிலுள்ள இரட்டை ஸன்ஸ்க்ரீன் ஆற்றல், உடல் கறுக்க வைக்கும் சூரிய ஒளியை உட்புகாதபடி தடுத்து நிறம் காத்திடுகிறது. ஆகவே, 6 முதல் 8 வாரங்களில் புதிதாக மேலெழும்பும் கொழுந்துச் சருமப் படலங்களில் செவலையான சாயல் மிளிரும். அன்றாடம் இருமுறை ஃபேர் அண்ட் லவ்லி—நாள் தவறாமல் உபயோகித்து வந்தால், மென்மை கொஞ்சும் இயல்பான சிகப்பழகு உறுதியாக உமதாகிவிடும்.

உபயோக முறை:
கழுவிக் கொண்ட முகம், கழுத்து, கரங்கள்மீது ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமை பொட்டுப் பொட்டாக இட்டபின், மேல் நோக்கித் தேய்க்க வேண்டும் மெதுவாக. ஃபேர் அண்ட் லவ்லி செயல்படத் துவங்கும் போது சற்றே கூசும் உணர்வு ஏற்படுமானால் கவலை வேண்டாம், விரைவில் அது மறைந்துவிடும்.

எளிதில் உள் உறிஞ்சப்படும். குழைவு குணமோங்கி முன்னிலும் மென்மையாக வருகிறது ஃபேர் அண்ட் லவ்லி, ஒரேசீராய் பரவுகிறது சருமத்தில் மேலும் எளிதில் உறிஞ்சப்படுகிறது. உடலார உணருவீர் அந்த மாறுதலை...பிறகு காண்பீர் கண்கூடாய்.

ஃபேர் அண்ட் லவ்லி பற்றி மேலும் கேட்டறிய விரும்பினீரானால் எழுதுங்கள் இம் முகவரிக்கு: திருமதி கவிதா குமார், ஃபேர் அண்ட் லவ்லி அட்வைசர், பி.ஒ. பாக்ஸ் 758, பம்பாய் 400 021.

ஃபேர் அண்ட் லவ்லி
சிகப்பழகு க்ரீம்



கண்காணும் சிகப்பழகை உமதாக்கும்... இயற்கைக்கே உரிய இதமான வழியில்


Marie
BRITANNIA
BRITANNIA
டீ காப்பியோடு சேர்த்தி: பிரிட்டானியா மாரி நேர்த்தி.
பிரிட்டானியா
மாரி

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — IV
ராஜ்மோகன் காந்தி

பட்டேலின் உடல் நிலை கவலைக்கிடம்

நேரு இல்லாத காங்கிரஸ் காரியக் கமிட்டி என்பது கட்சியில் பெரிய பிளவு ஏற்பட்டுவிட்டதைப் பகிரங்கமாக அறிவித்த தாகிவிடும். ஸி. ஆர். மத்தியஸ்த அம்புகளை மீண்டும் எய்தார். உடல்நலம் குன்றியிருந்த பட்டேலைப் போய்ப் பார்த்தார். மவுண்ட் பேட்டன்களையும் சம்பந்தப்படுத்த முயன்றார். மவுலானா அபுல்கலாம் ஆஸாத்தை உடன் அழைத்துக் கொண்டு, ராஜேந்திர பிரசாத்தைக் கூடச் சந்தித்தார். டாண்டனை, விட்டுக் கொடுக்குமாறு பிரசாத் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். டாண்டனுடன் தொடர்பு கொள்ளு மாறு ஜனாதிபதி தமது காரியஸ்தர்களுக்குச் சொன்னார். ஆனால் அவர்கள் தொடர்பு கொள்வதற்கு முன்பு மனம் மாறியும் விட்டார்! ஸி. ஆருக்குப் பிரசாத் எழுதினார்: ''இங்குமங்குமாக தூது போய்க் கொண்டிருக்கிற நிலையில் இருப்பது எனக்கு ஒரு தர்மசங்கடமான உணர்வை உண்டாக்குகிறது. இதில் எனக்குத் திறமை போதாது என்று நினைக்கிறேன். என்னை மன்னிக்குமாறு மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.''

ஸி. ஆர். ஒரு பகிரங்க அறிக்கையில் சொன்னார்: ''நமது பிரதமர், துணைப் பிரதமர் ஆகிய இருவரது வழிகாட்டலும் கண்டிப்பாகத் தேவைப்படுகிற நிலையில்தான் இன்று நமது நாட்டின் நிலவரங்கள் உள்ளன.


• ''காந்திஜி தமது வாழ்நாளிலேயே நேருவைத் தமது வாரிசாக நியமித்தார்...''



இவர்களில் ஒருவர் ஓய்வு பெற்றால் நிர்வாகம் அபிவிருத்தி அடையும் என்ற கருத்து எனக்கு உடன்பாடானது அல்ல. கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக ஒன்றாக ஒத்துழைத்து வந்துள்ள எங்களில் பலர், தொடர்ந்து, பாக்கியுள்ள எங்கள் பணியாண்டுகளில் அவ்வாறே ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும்.''

நேரு, பட்டேல், டாண்டன். ஆஸாத் ஆகியோர் பங்கு பற்றிய ஒரு கூட்டத்தில் ஸி. ஆரும் கலந்து கொண்டார். மூன்று மணி நேர விவாதத்துக்குப் பிறகும் பலன் ஒன்றுமில்லை. இருந்தாலும் ஸி. ஆர். மனந்தளராமல் டாண்டனுக்கு எழுதினார். டாண்டனின் பெருந்தன்மையையும் மென்மையான சுபாவத்தையும் கடிதத்தில் போற்றிய ஸி. ஆர்., இத்வாயை ஏற்றுக் கொள்ளுமாறு அவரைக் கோரினார்: ''சரித்திரத்தில் இடம் பெற வேண்டிய ஒரு சமரசம் உருவாவதற்குக் கடைசியாக உள்ள ஒரே இடையூறு இதுதான். சிவபெருமான் விஷத்தை உண்டதுபோல் நீங்களும் இந்தக் கசப்பை விழுங்கி நாட்டைக் காப்பாற்ற வேண்டும். உங்களால் இதைச் செய்ய முடியும். இதனால் நீங்கள் பலவீனமடைந்து விட மாட்டீர்கள்; மாறாக உங்கள் பலம் பெருகும்.'' நேரு, காரியக் கமிட்டியில் அங்கம் வகிக்காமல் ஒதுங்கினால் தாமும் விலகி நிற்க வேண்டியிருக்கும்; சென்னை

• ''...நான் தலைவனுக்குத் துரோகம் செய்யும் வீரன் அல்ல.''



திரும்ப நேரும் என்பதையும் ஸி. ஆர். கடிதத்தில் குறிப்பிட்டார்.

மிகுந்த பணிவுடன், ஆனால் உறுதியாக, டாண்டன் ஸி. ஆரின் கோரிக்கையை நிராகரித்தார். ''வேறு ஒரு குறிப்பிட்ட நபரை காரியக் கமிட்டியில் சேர்த்துக் கொண்டால்தான் நானும் சேர்வேன் என்று நிபந்தனை போடாமலேயே ஜவாஹர்லால்ஜி காங்கிரஸ் காரியக் கமிட்டியில் சேர்வார் என்றே நான் இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறேன். இவ்வாறு நேரு செய்ய உங்கள் வற்புறுத்தல் உதவும் என்றும் கருதுகிறேன்.'' (8.10.50).

இதற்கிடையில் ஜவாஹர்லால், தாம் இழந்து விட்டிருந்த தன்னம்பிக்கையைப் படிப்படியாகத் திரும்பப் பெற்றுக் கொண்டிருந்தார். 'என்னைத்தான் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டீர்களே' என்ற மனத்தாங்கல் பாணியில் பேசிக் கொண்டிருந்த அவர் இப்போது, 'நானில்லாமல் உங்களால் என்ன செய்ய முடியும்?' என்ற சவால் விடுகிற பாணியில் பேச ஆரம்பித்திருந்தார். ஸி. ஆருக்கு அவர் ஒரு குறிப்பு எழுதி அனுப்பினார்:

பண்பாடு பற்றிப் புருஷோத்தமதாஸ் டாண்டனுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அதன் ஒரு நகலை உங்களுக்கு இத்துடன் இணைத்து அனுப்புகிறேன். உங்களுக்கு ஒரு வேடிக்கைப் பொழுது போக்காக இது அமையலாம்.''

ஸி. ஆரின் பதில் சுச்சிதமாக இருந்தது: ''பண்பாடு பற்றிய உங்கள் கடிதம் எழுதப்பட்ட சமயமும் அதிலுள்ள விஷயங்களும் டாண்டன்ஜிக்கு நிச்சயம் புதிராக இருக்கும். இப்போது இது எதற்கு? இப்போது நம் முன் உள்ள ஒரே கேள்வி நீங்கள் காரியக் கமிட்டி உறுப்பினர் ஆவீர்களா, மாட்டீர்களா என்பதுதான்.'' (11.10.50).

'மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி' என்பது போலிருந்தது ஸி. ஆரின் நிலைமை. பல சமயங்களில் அவரைத் தப்பர்த்தம் செய்து கொண்டார்கள். இதனாலெல்லாம் அவர் உற்சாகம் குன்றி இருந்தார். எட்வினா மவுண்ட்பேட்டனுக்கு அவர் எழுதினார்: ''ஒருவரை ஒருவர் பார்த்துப் பழகி — அதனாலேயே சலிப்படைந்து விடுகிறார்கள். அவர்களை இணை பிரியாதிருக்கச் செய்ய முயல்பவர்களிடமும் அவர்களுடைய சலிப்பு வெளியாகிறது. எல்லாப் புன்னகைகளும் சோகமானவையாக இருக்கின்றன. மகிழ்ச்சியே அவற்றில் இல்லை. நான் மிகவும் வருத்தமடைந்திருக்கிறேன்.'' (5.9.50).

நோய்வாய்ப்பட்டிருந்த பட்டேல் யாரும் எதிர்பாராத விதமாக ஒரு காரியம் செய்தார். இந்தோர் அருகே, மாதர் சேவா கேந்திரமாக ஆரம்பிக்கப்படவிருந்த கஸ்தூர்பா கிராமத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் பேசும் போது அவர் சொன்னார்:

''நமது தலைவர் ஜவாஹர்லால் நேருவே. காந்திஜி தமது வாழ்நாளிலேயே அவரைத் தமது வாரிசாக நியமித்தார். காந்தியின் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பது காந்தியின் சேனை வீரர்களுடைய கடமை. நான் தலைவனுக்குத் துரோகம் செய்யும் வீரன் அல்ல.'' (3.10.50 நாளிதழ்.)

ஸி. ஆர். மனமுருகிப் போய்ப் பட்டேலுக்கு எழுதினார்:

''அச்சடித்த செய்தியாகப் படிக்கும் போதே உங்களுடைய இந்தோர் பேச்சு மனத்தைத் தொடுவதாக அமைந்திருக்கிறது. நேரில் கேட்க இன்னும் உருக்கமாக இருந்திருக்கும். ஒருவர் என்னவெல்லாம் செய்யக் கூடுமோ அவ்வளவும் நீங்கள் செய்து விட்டீர்கள். இதுவும் கூடச் சிலரது சந்தேகங்களைப் போக்கவில்லையென்றால் மனிதன் வேறு என்னதான் செய்ய முடியும்? நாம் செய்துள்ள தவறுகள், பாவங்கள் எவ்வளவோ இருந்தும் நம்மை இதுவரை ரட்சித்துவந்துள்ள மகாசக்தியைப்பிரார்த்தித்து, அதனிடமே முடிவை விட்டு விடுவோம்.''

ஆனால் நேருவுக்கு உண்மையான திருப்தி ஏற்படவில்லை. காரியக் கமிட்டி பற்றி ஸி. ஆர். எழுதிய புதியதொரு கடிதத்துக்குப் பதிலெழுதும் முகமாக அவர் சொன்னார்: ''இந்த விஷயத்தில் உங்கள் அறிவுரைப்படி நான் நடந்துகொள்ளாததற்குஎன்னை மன்னியுங்கள்.'' (13.10.50).

அன்றே பட்டேல் ஸி. ஆருக்கு எழுதினார்: ''இப்படி மனத்தைத் தொடர்ந்து துன்புறுத்திக் கொள்வதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். நேரு நடந்து வர வேண்டிய பாதையைச் செப்பனிட என்னால் எந்த அளவுக்கு முடியுமோ அந்தக் கடைசி எல்லை வரை சென்று பாடுபட்டிருக்கிறேன். ஆனால் ஒரு பிரயோஜனமும் இல்லை என்று காண்கிறேன். எனக்கு நம்பிக்கை இல்லை. கடவுளிடம் பொறுப்பை ஒப்படைப்பது ஒன்றே நாம் செய்யக் கூடியது. நீங்கள் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளுக்கு நன்றி.'' (13.10.50)

ஸி. ஆரும், பட்டேலும் குறிப்பிட்ட அந்த மகாசக்தி உதவிக்கு வரவே செய்தது. ஸி. ஆர்., ஆஸாத் ஆகிய இருவர் மூலமும் இயங்கியது. அக்டோபர் 15 ஆம் தேதி, ஒவ்வொன்றும் நீண்ட நேரம் நீடித்த மூன்று கூட்டங்கள் நடந்தன. அவற்றின் முடிவில் டாண்டன், இருபது பேர் அடங்கிய காரியக் கமிட்டியை அறிவித்தார். கமிட்டியில் நேரு இருந்தார்; ஸி. ஆரும் இருந்தார்; கித்வாய் இல்லை! பல ரவுண்டுகள் நடந்த ரோஷமான குஸ்திச் சண்டையில் இறுதி வெற்றி டாண்டனுக்கே!

ஸி. ஆரைப் பாராட்டி தந்திகள் குவிந்தன. காங்கிரஸ் பிளவுபடாமல் காத்தது அவருடைய தனிப்பட்ட சாதனை என்று கருதப்பட்டது. ஆனால் ஸி. ஆர். மகிழ்ச்சியில் மிதக்கவில்லை. சமரசம் ஏற்பட்டிருந்தாலும் அது அரைகுறை மனத்துடன்தான் உருவாகியிருந்தது. வெகு சீக்கிரமே வேறு ஓர் உண்மையான கவலை அனைவரையும் ஆட்கொண்டது. அது பட்டேலின் உடல்நிலை பற்றிய கவலை.

(தொடரும்)

கோகுலம்

கோகுலம்
தம்பி, தங்கைகளுக்கு...
குழந்தைகள் தின
வாழ்த்துக்கள்!

நவம்பர் இதழில்:

குழந்தைக் கவிஞர்:

காணாமல் போன நேரு!



சீர்காழி கோவிந்தராஜன்:

என் குழந்தைப் பருவம்

ஜானகி மணாளன்:

நேருஜியிடம் சிறுவன்
கையெழுத்துப் பெற்ற விதம்!



16 பக்க வண்ணப்படக் கதை:

பரமஹம்ஸர் சொன்ன
பாலர் கதைகள்



* சிரிப்புத் துணுக்குகள் * கதைகள் * கவிதைகள் * கட்டுரைகள் * பிருந்தாவனப் பக்கங்கள்

• உமா மகேஸ்வரி: வ. உ. சி. யின் கொள்ளுப் பேத்தி.



அங்கே கண்டவை

●● நவ திருப்பதிகளுள் முதன்மையான தாகத் தொழப்படுவது ஸ்ரீவைகுண்டத்தி லுள்ள அருள்மிகு கள்ளர்பிரான் சுவாமி திருக்கோயில். அப்படியிருந்தும் கடந்த 72 ஆம் ஆண்டில் ஓர் இடித் தாக்குதலால் கொஞ்சம் இடிந்து போன இதன் ராஜ கோபுரம் இன்னமும் திருப்பணி செய்யப் படாமலேயே இருப்பது அங்குள்ள பலருக்கு வேதனையான விஷயம். இத்தனைக் கும் கடந்த 82 லேயே இந்த ராஜகோபுரத் திருப்பணிக்கு அப்போதைய அறநிலையத் துறை அமைச்சர் ஆர். எம். வீ. யால் அடிக் கல் நாட்டப்பட்டிருக்கிறது! ராஜகோபுரம் போலவே, கோயிலின் வெளிப்பிராகார மண்டபமும் ஆபத்தான நிலையில்தான் இருக்




• பக்கிள் கால்வாய்: ஒரு குட்டிக் கூவம்



• மாணிக்கம்



• தூத்துக்குடியில் கட்டியும் திறக்கப்படாத மருத்துவ மனைக் கட்டடம்.



• வெயிலிலும் மழையிலும் கிடக்கும் தேர்.

கிறது. என்ன காரணம்? நிதிப் பற்றாக்குறைதான் என்கிறார்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள். பக்தர்கள்தானாகட்டும், திருப்பதி வெங்கடேஸ்வரரிடம் கொண்டு போய்க் கொட்டுவதில் ஒரு பகுதியையாவது நவ திருப்பதிகளில் தலையாயதான இந்தக் கள்ளர்பிரானிடமும் கொண்டு வந்து கொடுக்கக் கூடாதோ?

●● ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு அருகிலேயே நகராட்சியினர் குப்பை கொண்டு வந்து கொட்டுவது மிகப் பெரிய சுகாதாரக் கேடு. அப்படி வரும் சுகாதாரக் கேட்டைச் சரிப்படுத்துவதற்காகவாவது மருத்துவமனையில் போதுமான மருந்துகள் உள்ளனவா என்றால் அதுவும் இல்லை. "இங்கு பி. சி. ஜி. தடுப்பு ஊசிகள் போடப்படும்" என்று போர்டு மாட்டி வைத்திருந்தாலும் அதற்கான மருந்து எப்போதுமே இருப்பதில்லை, சார்!" என்று ரொம்பவும் வருத்தப்பட்டுச் சொன்னார்கள் உள்ளூர் இளைஞர்களான பிச்சுமணி, சிவஞான முருகன், பட்டன் ஆகிய மூவரும்.

●● வ. உ. சி. மாவட்டம் முழுவதிலும் குடிநீர்ப் பிரச்னை என்பது கடுமையான அளவுக்கு இல்லாமல் நிர்வாகம் பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பாராட்டும்



* பிச்சமணி, பட்டன், சிவஞான முருகன்.


அதே நேரத்தில், திருச்செந்தூரில் குடிநீர்ப் பிரச்னை இருப்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். "நாங்கள் வசிக்கும் கீழரத வீதிக்கு மட்டும் குடிநீரே வருவதில்லை. ஆனால் தண்ணீர் வரி மட்டும் வசூலிக்கத் தவறுவதில்லை. மேலும் இந்த நூற்றாண்டிலும் சாக்கடை வசதி செய்யப்படாத ஒரே ஊர் எங்கள் திருச்செந்தூராகத்தான் இருக்க வேண்டும்" என்றார்கள் மாணிக்கம் என்பவரும் லட்சுமியம்மாள் என்பவரும். உண்மைதான். பக்தர்கள் கூடும் இடமாக இருந்தும் சாக்கடை வசதி கூட இல்லாதது நமக்கே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது!

●● திருச்செந்தூரைச் சுற்றியுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் மாணவ, மாணவியரின் தேர்ச்சி விகிதம் எழுபத்தைந்துக்கு மேல் இருந்தாலும் திருச்செந்தூர் அரசு மேல் நிலைப்பள்ளியின் சதவிகிதம் மட்டும் முப்பத்தேழுதான். பக்தி தரும் இடத்தில் படிப்பு இப்படி பாழ்பட்டுக் கொண்டு வருவது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

●● ஒரு தேரைச் செய்வதென்பது எத்தனை பெரிய நுணுக்கமான விஷயம். ஆனால் திருச்செந்தூர் தேவஸ்தானத்திலுள்ளவர்களுக்கு மட்டும் அது ஒரு பெரிய விஷயமாகப் படவில்லை போலிருக்கிறது. இல்லையென்றால், கோயில் தேரை இப்படி வெயிலிலும் மழையிலுமாகத் திறந்து வைத்திருப்பார்களா? கீழ ரத வீதியில் மேற்கூரை வேயப்படாமல் கிடக்கும் தேரைப் பார்த்ததும் வேதனையாக இருந்தது. அதுபோலவே, தேவஸ்தானத்தாரால் விற்பனை செய்யப்படும் பிரசாதப் பொட்டலத்திலுள்ள லட்டு, அதிரசம், முறுக்கு ஆகியவற்றில் லட்டைத் தவிர மற்ற இரண்டையும் சாப்பிடவே முடியவில்லை. அப்படியொரு சுவையில்லாத பிரசாதத்தைப் பக்தர்களுக்கு விற்பனை செய்துதான் ஆக வேண்டுமா? தேவஸ்தானம் யோசித்துப் பார்ப்பது நல்லது.

●● வ. உ. சி. மாவட்டத்திலேயே தூத்துக்குடிக்கு அடுத்தபடியான பெரிய நகரம்

* கோவில்பட்டி அரசு மருத்துவமனை.





* ஸ்ரீவைகுண்டம் ராஜகோபுரம்.



என்றால் அது கோவில்பட்டிதான். அப்படியிருந்தும் இங்குள்ள அரசு மருத்துவமனையில் போதுமான வசதிகள் எதுவுமே இல்லை. பிரசவம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, வொயரிங் பழுதடைந்து மின்சாரம் தடைப்பட்டு மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் பிரசவம் பார்க்க வேண்டியிருக்குமாம். தண்ணீர் வசதி சுத்தமாக இல்லை. தலைக் காயங்களுக்கு மருத்துவம் பார்க்கும் வசதி இல்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் முன்பு சுகாதார அமைச்சராக இருந்த ஹண்டே ஒருமுறை வந்திருந்த போது, "இதுபோன்றதொரு மோசமான மருத்துவமனையை நான் வேறு எங்குமே பார்த்ததில்லை!" என்று சொன்னதைத்தான் சொல்ல வேண்டும் என்கிறார்கள் உள்ளூர் வாசிகள். ஓர் அமைச்சரே அப்படிச் சொன்ன பிறகும் ஆஸ்பத்திரி மாறவில்லை; அந்த அமைச்சர்தான் மாற்றப்பட்டார் என்பது வருத்தத்திற்குரிய விஷயம்.

●● ஏதோ கோவில்பட்டியில்தான் அப்படி என்பதில்லை. தூத்துக்குடியிலுள்ள அரசு தலைமை மருத்துவமனையிலும் போதுமான படுக்கைகள் இல்லாமல் நோயாளிகள் படும் அவஸ்தை சொல்லி மாளாது. இதைப் போக்குவதற்காக இருநூற்றியறுபது படுக்கைகள் வசதி கொண்ட மூன்று மாடிக் கட்டடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டும் இன்னும் திறக்கப்படாமலிருப்பதுதான் வேடிக்கை. அதுபோலவே தூத்துக்குடி அரசு விருந்தினர் மாளிகை வளாகத்திற்குள் கட்டி முடிக்கப்பட்ட கட்டடமும் விருந்தினர்கள் தங்குவதற்குத் திறந்து வைக்கப்படவில்லை.

●● தூத்துக்குடியிலும் வழக்கமாக எல்லாத் தமிழக நகரங்களிலும் இருப்பது போல் ஆட்டோவுக்கு மீட்டர் இல்லை என்பதோடு, சினிமாத் தியேட்டர்காரர்கள் அடிக்கும் கொள்ளைதான் மிகமிக அதிகம். ஆம்; இங்குள்ள பல தியேட்டர்களிலும் டிக்கெட்டுகளில் அச்சடிக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்கே விற்பனை செய்வதில்லை. அதற்கு மேல் இரண்டு ரூபாய் மூன்று போய் என்று அதிகம் விலை வைத்துத்தான் விற்கிறார்கள். அதாவது டிக்கெட் கவுண்டரிலேயே பிளாக்கில் விற்கிறார்கள். அங்கு போய் நாம் நியாயம் பேசினால் வீட்டுக்கு முழுசாகத் திரும்பி வர முடியாதாம்; பொது மக்களே உள்ளுக்குள் பொருமினாலும் வெளியில் பயந்து பயந்துதான் புகார் சொல்லுகிறார்கள்.

●● தூத்துக்குடியில் பொழுது போக்குவதற்குச் சினிமாவைத் தவிர வேறு இடங்களே இல்லையா? ஏன் இல்லை! இராஜாஜி பூங்கா, சத்திரம் பூங்கா, சுக்கன் பார்க், நேருஜி பார்க், ரோச் (பீச்) பூங்கா என்று ஏராளமான பூங்காக்கள் இருக்கத்தான் செய்கின்றன. கவனிப்புத்தான் சுத்தமாக இல்லை. அதனால் அனைத்தும் சமூக விரோதச் செயல்களுக்கான இடங்களாகத்தான் பயன்படுகின்றனவாம்.

●● சென்னையில்தான் கூவம் என்ற ஒரு 'புண்ணிய நதி' இருக்கிறது என்பதில்லை. தூத்துக்குடியிலும் ஒரு குட்டிக் கூவம் இருக்கிறது. பெயர், பக்கிள் கால்வாய் என்பது. ஊரின் நடுவில் ஓடும் அதனால்தான் தூத்துக்குடி நகரே அசிங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றால் அதில் சிறிதும் மிகையில்லை. அப்படியிருந்தும் அதை ஏன் யாரும் சுத்தப்படுத்த முன்வரவில்லை? அதன் இரண்டு கரைகளிலும் ஏராளமான குடிசைகளின் ஆக்கிரமிப்புக்கள். அவர்கள் அனைவரும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள். அதனால் அந்த ஆக்கிரமிப்புக்களை அகற்றிக் கால்வாயைச் சுத்தப்படுத்துவதில் பிரச்னை. அதனாலேயே தூத்துக்குடி மேலும் மேலும் அசிங்கமாகி வருகிறது.

●● தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்டு எனது பாட்டனார் வ. உ. சி. பெயரில் மாவட்டம் ஆரம்பித்த சமயம் எனக்கு ஒரு வேலை தரும்படி மனு கொடுத்தேன். மனுவை வாங்கிக் கொண்ட அதிகாரிகளும் 'இன்னும் ஓரிரு மாதங்களில் வேலை கிடைத்துவிடும்' என்று நம்பிக்கையோடு சொன்னதால் எனக்கு எம். ஏ. யில் அட்மிஷன் கிடைத்தும் சேரவில்லை. ஆனால் பிறகோ, 'ஒன்றும் செய்வதற்கில்லை' என்று அதிகாரிகள் கையை விரித்து விட்டார்கள். வேலைக்கு வேலையும் கிடைக்கவில்லை; படிப்பையும் தொடர முடியவில்லை. நீங்களாவது, ஏதாவது எடுத்துச் சொல்லக் கூடாதா, சார்? — இப்படி நம்மிடம் முறையிட்டவர் வ. உ. சி. யின் கொள்ளுப் பேத்தியான செல்வி உமா மகேஸ்வரி. கூடவே, வ.உ.சி. யின் சொந்த மருமகன் வள்ளிநாயகம் இப்போது முதியோர் இல்லத்தில் இருந்துதான் காலந்தள்ளுகிறார் என்றும் கேள்விப்பட்டோம். இன்னமும் மனம் நெருடிக் கொண்டே இருக்கிறது. இவர்களுக்கெல்லாம் அரசாங்கம் தேடிப் போய் உதவ வேண்டாமா?

— பானு மணாளன்



ஏவி. எம். ஸ்டுடியோ. ஒரு பூஜையில் கலந்து கொள்ள வந்திருக்கும் டைரக்டர் ராமராஜனும், நிஷாந்தியும் ஆளுக்கொரு நாற்காலியுடன் வெளியே காற்றாட உட்கார்ந்து கொள்கிறார்கள். பேச்சு தீபாவளி ரிலீஸ் படமான 'நேரம் நல்லாருக்கு' பற்றித் திரும்புகிறது.



நேரம் நல்லாருக்கு

நிஷாந்தி: நாம ஜோடியா நடிச்ச இன்னொரு படம் வெளிய வந்திருச்சி, இல்ல?

ராமராஜன்: கிராமத்தை நம்பி இப்படி வரிசையாப் படம் வந்துக்கிட்டுத்தான் இருக்கும் போலருக்கு...

நிஷாந்தி: நீங்களே ஒரு சினிமா டைரக்டர்... நீங்களே இப்படிச் சொல்லலாமா?

ராமராஜன்: டைரக்ஷனை விட இது ஜாலியான வேலைங்க. கொஞ்சம் அசடு வழியணும், தமிழை இழுத்து இழுத்துப் பேசணும், ஒரே ராகத்திலேயே சோகம், சந்தோஷம், துக்கம், படபடப்பு எல்லா டயலாக்கையும் பேசலாம். யாரும் கண்டுக்க மாட்டாங்க!

நிஷாந்தி: அதுதானே இப்போ லேட்டஸ்ட் ஃபாஷன்? எனக்குப் பரவாயில்லே, கலர் கலரா தாவணி போட்டுக்கிட்டு, ஹீரோவோடு கொஞ்சம் புரண்டு, மண்ணை வாசனை பார்த்து, தண்ணில இறங்கி, நெறைய அழுது...

ராமராஜன்: உங்க கண்ணு ரெண்டும் பெரிசு பெரிசா இருக்கா, க்ளோசப்ல காட்டணும்னு டைரக்டருக்கு ஆசை. அதான் நெறைய அழ விட்டுட்டாரு. இன்னொரு விஷயம் கவனிச்சீங்களா... கதை போற போக்கிலேயே டைரக்டர் விட்டுட்டாரு... கழுத்தை சாய்ச்சி, கையைக் கோணிக்கிட்டு ஒரு வில்லன்... அவன் சாராய கோஷ்டி... டைரக்ட் பண்றப்ப தெரிய மாட்டேங்குது. உக்காந்து படம் பாக்கறப்பதான் எத்தனை அபத்தமா இருக்குன்னே புரியுது...



நிஷாந்தி: படம் கடைசி ஒரு மணி நேரம் ஜரூரா இருந்ததுன்னு நான் நெனைக்கறேன். மாடு ஒண்ணு அட்டாக் பண்ணியிருக்கே, நம்மளையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டுடும்...

ராமராஜன்: அந்த சீன் நிஜமாவே நெஞ்சுல நெருப்பைக் கட்டின மாதிரிதான் இருந்தது. சாராயம் குடிச்சிட்டு மாடு தன்னை வளர்த்த பெண்ணையே துரத்தித் துரத்தி முட்டிச் சாகடிக்கறப்ப பக்குன்னு இல்ல? சாராயத்தை ஊத்திக் கொடுத்த ஜனகராஜ் அழுவாரே, மனசு உருகிடுது...

நிஷாந்தி: நீங்க அப்படிச் சொல்றீங்க. ஜனகராஜ் அழுதுக்கிட்டே டயலாக் பேசற ஸ்டைலே இன்னும் எத்தனை படத்துல பார்க்கறது? ஐயோ, எனக்கு அலுத்துப் போயிடுது. சாராயம் ஊத்திக்கிட்டு அவங்க அடிக்கற கதையெல்லாமும் காணச் சகிக்கலே.

ராமராஜன்: நீங்க நெஜமான சாராயக் கடைக்குப் போனதில்ல. அதான் அப்படி சொல்றீங்கன்னு நெனைக்கறேன்... இதை விட மோசமா இருக்கும் அங்க...

நிஷாந்தி: எம். எஸ். வி. மியூசிக்ல அந்த 'சம்மதம், சம்மதம்' பாட்டு பாடறப்ப நமக்கே சந்தோஷமா இருந்தது. ஆமா, படத்தில கலர் ஏன் சாயம் போன மாதிரி டல்லா இருந்துது?

ராமராஜன்: பார்த்தீங்களா... டெக்னிகலான விஷயத்தையெல்லாம் கிளறினா, நான் அம்பேல் ஆயிடுவேன்... படத்தில அந்த லாஸ்ட் சஸ்பென்ஸ் பிரமாதமா அமைஞ்சிருக்கு. அதை நெனைச்சுச் சந்தோஷப்பட்டுக்க வேண்டியதுதான்.

கற்பனை உரையாடல் ஏற்பாடு:

ஜெயமன்மதன்

ஜோக்ஸ்



- "பிரதமரின் மனைவி எவ்வளவு சாப் பிட்டாலும் பெருக்க முடியாது."

  "ஏன்?"

  "அவங்கதான் 'சோனி'யா வாச்சே!"

  — மு. சுகந்தி, லால்குடி.

- "நேற்று டி.வி. யில் படு போரான படம். முழுக்கப் பார்த்தும் கூடத் தலை வலிக்கவேயில்லை!"

  "அதெப்படி....?"

  "'ஸ்பான்சர்' பண்ணினது 'அமிர் தாஞ்சனம்' ஆச்சே!"

  — இ. ஏஞ்ஜெல்ஸ் கமல், தஞ்சாவூர்.



- அப்பா: டேய், அந்தப் பொண்ணைக் கூட்டிக்கிட்டு ஊரை விட்டு ஓடிடா தடா!

  மகன்: இல்லேப்பா, நடந்தே போறேன்!

  — மு. கண்ணன், திருச்சி — 20.

- "விகவின் அப்பா படம் எடுத்தால் என்ன தலைப்பில் எடுப்பார்?"

  "விக என் சிசு."

  — ஜி. எல். ராஜேந்திரன், திருச்சி — 8.

- ராமு: பாபு, இன்னிக்குத் தேதி என்னப்பா?

  பாபு: செப்டம்பர் இருபத்திநாலு.

  ராமு: சரியா ஒரு வருஷம் ஆச்சப்பா!

  பாபு: கம்பெனில சேர்ந்தா?

  ராமு: இல்லே, போன செப்டம்பர் இருபத்திநாலுலேர்ந்து!

  — பி. பி. ரவிச்சந்திரன், அம்பூர் — 1.

- "காதலனும் காதலியும் பூத்துக் குலுங் கும் பூங்காவில் கட்டிப் பிடித்துக் காதல் டூயட் பாடி முடித்தபின் காதலனிடம் காதலி என்ன கூறுவாள்?"

  "என்னங்க, 'புல்'லரிக்குதுங்க!"

  — ஜி. கண்ணப்பன், சேலம் —

- முதியவர்: தம்பி! வைகை எக்ஸ்பிரஸ் முதல் பிளாட்பாரத்தில் நிற்குமா? இரண்டாவது பிளாட்பாரத்தில் நிற் குமா?

  இளைஞன்: ரயில் எல்லாம் தண்டவாளத் தின் மீதுதான் நிற்கும்; மனிதர்கள்



தான் பிளாட்பாரத்தில் நிற்பார்கள்! ஹா! ஹா!!


— எஸ். பாஸ்கரன், சென்னை — 51.

• "வில்லுப் பாட்டு கேட்கப் போகும் போது, முன்னால உட்கார்ந்து கேட்கக் கூடாது.

"ஏன்?"

"சமயத்துல அம்பு நம்ம மேலே பாய்ஞ்சுட்டா?"

— வெ. சீதாராமன், சென்னை — 5.



• "எந்த மிருகத்தின் காலை வாரி விடுவது சுலபம் — ஏன்?"

"கரடி. ஏன்னு அதனோட கால்ல தான் நிறைய முடி இருக்கு!"

— எஸ். ஆர். கே., சென்னை — 61.

• ஜோசியர்: நாளையிலிருந்து உங்களை விட்டு ஒரு தோஷம் போகிறது.

கையை நீட்டியவர்: என்ன தோஷம்?

ஜோசியர்: சந்தோஷம்!

— எஸ். ஹரிக்குட்டி, வத்திராயிருப்பு.

• அவர்: அந்த ஆள் எந்தப் புத்தகம் படிச்சாலும் நெளிஞ்சுக்கிட்டே படிக்கிறாரே, ஏன்?

இவர்: அவர் ஒரு புத்தகப் 'புழு' வாச்சே!

— சி. ஜி. மகேஷ், சென்னை — 1.

• "மோதிர விரலுக்கு அடுத்த விரல் எது...?"

"மோதிரம் இல்லாத விரல்...!"

— விருதை ராஜா, விருதுநகர் — 1.

(ரூ. 200/— பரிசை ஒவ்வொருவரும் சமமாகப் பகிர்ந்து கொள்கிறார்கள்...)



• "இந்த மழை ஏன் நாணிக் கோணிப் பெய்கிறது?"

"அதுதான் 'பருவ' மழையாச்சே!"

— புளியரை கணேசன், சென்னை — 30.

• "ராஜேஷ் கன்னாவுக்கும் வினோத் கன்னாவுக்கும் சண்டை வந்தால் எப்படித் திட்டிக் கொள்வார்கள்?"

"தெரியாதே, எப்படி?"

"கன்னாபின்னாவென்றுதான்!"

— எஸ். சந்திரசேகர், பம்பாய் — 71.



• ஆசிரியர்: அசோகர் ஏன் சாலையோரங்களில் மரங்களை நட்டார்?

மாணவன்: நடுரோட்டில நட்டா பஸ், லாரியெல்லாம் போக முடியாதுன்னு தான் சார்!

— எஸ். வி. மதி, நாகப்பட்டினம் — 1.

செவிகளும் பசித்திருக்கும்

உத்தமசோழன்

எதிரில் உட்கார்ந்திருந்த பாரிக்கு ராஜேஸ்வரியின் மனவெறுமை தெரிந்திருக்க நியாயமில்லை. சின்னஞ்சிறு கத்தியால் செதுக்கியும், இழைத்தும், குடைந்தும் கையிலிருந்த நெட்டிக்கு உயிர் ஊட்டிக் கொண்டிருந்தான்.

செதுக்கி விட்ட நெட்டித் துகள்கள் சின்னச்சின்ன முல்லையரும்பு மொட்டுகளாய்க் குவிந்துகிடந்தன.

இப்போது பாரியின் சிந்தனை, செயல் எல்லாமே கையிலிருந்த தோலுரித்த நெட்டியில்தான். திருத்துறைப்பூண்டி பிறவி மருந்தீசரின் ஆலயக் கட்டுமானப் பணிகள் வெகு மும்முரமாக நடந்து கொண்டிருந்தன — நெட்டியில்தான்.

அவனையும், அவனது செய்கையையும் கவனித்துக் கொண்டேயிருந்த ராஜேஸ்வரியின் மனத்தில் ஆற்றாமை, பொங்கியது. 'இத்தனை அற்புதமான கலையை அவருக்கு அன்பளிப்பாகத் தந்த கடவுளே! அதற்காக எவ்வளவு பெரிய ஓரவஞ்சகம் செய்துவிட்டாய் அவருக்கு?'

மனசுக்குள்ளாகவே அவள் இப்படி மருகிப்போவது இன்று மட்டும்தானா? அவனுக்கு மாலை சூட்டி இந்த வீட்டில் கால் எடுத்து வைத்த கடந்த ஐந்தாண்டுகளில் இப்படி ஐயாயிரம் முறையாவது இருக்கும்.

என்ன செய்வது? அவளால் முடிந்தது அது மட்டும் தானே!

"ராஜேஸ்வரி.. ராஜராஜேஸ்வரி..!"

இந்த அழைப்பு ஜில்லென்று மனசைத் தாக்க, சட்டென்று வாசலைப் பார்த்தாள். யாருமில்லை.

யார் அது? இப்படித் தனது முழுப் பெயரையும் சொல்லி வாஞ்சையாய்க் கூப்பிடும் அப்பா போய்ச் சேர்ந்து நான்காண்டுகளாகி விட்டதே! அப்பாவுக்குப் பிறகு இத்தனை உரிமையாய் என்னை யாரும் அழைத்ததில்லையே! யாராயிருக்கும்..?

விடுவிடென்று வாசலுக்கு ஓடினாள்.

அங்கே வேலியோரமாய், வேப்பமரத் தடியில், கையில் ஒரு சூட்கேஸுடன் அவன் நின்றிருந்தான்.

சட்டென்று அவளுக்கு புரியவில்லை.

'யார்?...யாரிது...? அந்தச் சிவப்பையும் ஒடிசலையும் எடுப்பான மூக்கையும் பார்த்தால்...அழகு போலிருக்... அடடே நம்ப அழகனேதான்.. அடேயப்பா ஆள் எப்படி மாறிவிட்டான்...!'

அவன் அவளது பிறந்த ஊரில் பக்கத்து வீட்டுப் பையன்தான். பத்தாம் வகுப்புவரை ஒன்றாகப் படித்து, விளையாடி, இவளது புத்தகப்பையையும்சேர்த்துச்சுமந்துசென்று, பதிலுக்குஇவளின் கறுப்புமுகக்கவர்ச்சியில், திராட்சையாய்ச் சுழலும் விழிப்பாவையின் அழகில், பளீரென்ற பச்சரிசிச் சிரிப்பில்மனச் சுகம் கண்டு திரிந்தவன்தான். ஒருநாள் அவனது அப்பாவின் கோபம் அபாய அளவைத் தாண்டிவிட்டபோது, அடி தாங்கமுடியாமல், ஓடிப் போனவன்தான்.

அந்த அழகன்தான், ஆறேழு ஆண்டுகளுக்குப் பின்னர் இப்படி உருமாறி வந்து நின்றான்.

அவளின் முகம் முற்றாக மலர்ந்துவிட்டது.

"அழகு... அழகா... அழகன்தானே! நிஜமா நீதானே! நம்பவே முடியலையே! எங்கப்பா போயிட்டே இத்தனை நாளா? சட்டுன்னு அடையாளமே தெரியலையே...?"

"போச்சுடா! எல்லாக் கேள்விகளையும் வாசல்லே நிக்க வைச்சுக் கேட்டுட்டு, 'இதாண்டா பாதை போயிட்டு வா'ன்னு அனுப்பிடுவே போலிருக்கே!"

"சேச்சே! என்ன நீ! உன்னைப் பார்த்த சந்தோஷத்துலே... நெஜமாச் சொல்றேன் எனக்கு ஒண்ணுமே புரியலே... சரிசரி... உள்ளே வா!"

பரபரப்புடன் அவன் உள்ளே ஓடினாள். அந்த ஓட்டத்தில் துள்ளலே அதிகம். மகிழ்ச்சியின் வெளிப்பாடுகள்தான் எத்தனை அழகானவை.

பாரிக்கு அழகனை அறிமுகப்படுத்தி வைத்தாள். அவன் அவனைக் கைகூப்பி வரவேற்றுத் தன்னருகே அமரச் செய்தான்.

"ஒரு நிமிஷம் அழகு! டீ கொண்டு வர்றேன். குடிச்சுட்டுக் குளிக்கலாம்..."

பாரியின் எதிரில் இருந்த நெட்டியின் அற்புதங்கள், அழகனை அசர வைத்திருக்க வேண்டும். அந்தப் பிரமிப்பு மாறுமலே, "ராஜேஸ்வரி.... ராஜராஜேஸ்வரி..." என்ற போது அவன் சட்டென்று இடைமறித்தான்.

"என்ன... என்ன சொல்லிக் கூப்பிட்டே?"

''என்னவா...? உன் பேரைச் சொல்லித் தான்...''

''எங்கே அந்த மாதிரி இன்னொரு முறை கூப்பிடு பார்க்கலாம்.''

அவன் அவளைக் கொஞ்சம் வித்தியாச மாய்ப் பார்த்தான். அவளின் குரலில் தெரிந்த ஏக்கமும், கண்களில் தெளிந்த பளபளப்பும் அவனை அப்படிப் பார்க்க வைத்தன!

''ராஜேஸ்வரி... ராஜராஜேஸ்வரி... நான் சரியாகத்தானே கூப்பிட்டேன்...?''

அவளிடம் பதில் இல்லை. 'முகம் தெளி வாகச் சொல்லிற்று. 'அவள் இப்போது எங்கோ சஞ்சாரம் செய்து கொண்டிருக் கிறாள்.'

''என்னது...? என்னாச்சும்மா உனக்கு?'' இவன் பதற்றப்படத் தொடங்கிய போது, ''ம்ம்... என்ன? ஒண்ணும் ஆகலையே... அடடே ஸ்டவ்லே பாலை வைச்சிட்டு வந் தேனே!'' என்றபடி அவள் உள்ளே போனாள். இவன் குழப்பத்தில் ஆழ்ந்தான்.

மதிய உணவுக்குப் பிறகு அழகனை ராஜி நிதானமாக விசாரிக்கத் தொடங்கினாள்.

''என்னத்தைச் சொல்றது. என்னமோ கோபம். எங்கெங்கேயோ அலைஞ்சேன். அடி வாங்கினேன். பட்டினி கிடந்தேன். இதையெல்லாம் இப்ப நான் ஞாபகப்படுத் திக்கிறதேயில்லே. இப்போ நான் நல்லா இருக்கேன். மெட்ராஸ்லே சொந்தத் தொழில்... எங்கிட்டே இருபது பேர் வேலை பார்க்கிறாங்க. சொந்த வீடு, வாகனம் எல்லாம் உண்டு.. ஆனால் மனைவியைத் தேடிக் கிடணும்னு ஞாபகம் வந்தப்ப ஊர் ஞாபகம் வந்துச்சு. அங்கே வந்தா... ம், போகட்டும்,



இனிமேல்தான் அதெல்லாம் ஆகணும். சரி வந்ததுதான் வந்தோம், அப்படியே உன்னையும் பார்த்துட்டுப் போவோமேன்னு விசாரிச்சுக்கிட்டு வந்தேன்...''

அவன் சொன்னதில் ராஜிக்கு ஏதோ ஒன்று புரிந்த மாதிரியும் இருந்தது; புரியாத மாதிரியும் இருந்தது.

''கவலைப்படாதே! உனக்குன்னு ஒருத்தி இனிமேலா பொறக்கப் போறா... ஏற்கெனவே அவ கையிலே மாலையோட நின்னுக்கிட்டுத்தானிருப்பா... கண்டுபிடிச்சுடுவோம்.''

அவன் மெலிதாய்ச் சிரித்துக் கொண்டான்.

இரவு உணவு முடிந்ததும், வேப்ப மரக்காற்று தாராளமாய்ப் படும் அறையில் 'பாரிக்கு இருமருங்கிலும், அழகனும், ராஜேஸ்வரியும் அமர்ந்து நெடுநேரம் 'போன கதை—வந்தகதை' பேசிக்கொண்டேயிருந்தனர்.

கொஞ்ச நாட்களாக 'உம்மணா மூஞ்சி' யாயிருந்த ராஜேஸ்வரி இன்று பழைய கலகலப்புக்குத் திரும்பிவிட்டிருந்த மகிழ்ச்சியினாலோ என்னவோ, பாரி நிம்மதியாய் உறங்கிப் போய்விட்டிருந்தான்.

சொல்லி வைத்தது போல் இருவரும் கொஞ்ச நேரம் வாசல் வழியே தெரியும் நிலவின் அழகை ரசித்தபடியே இருந்தனர்.

திடீரென்று நினைவுக்கு வந்தவனாக, அழகன் கேட்டான்.

''சின்னப் பிள்ளையா இருந்தப்ப ஏதாவது முணுமுணுன்னு பாடிக்கிட்டேயிருப்பியே... இப்பவெல்லாம் பாடறதில்லையா ராஜேஸ்வரி!''

''கிண்டலா? யாருகிட்டே பாடறது?''

''சே! சாரிம்மா...''

கொஞ்ச நேரம் கொஞ்சம் அழுத்தமான மௌனம்.

''ம், சரி விடு! இப்ப எனக்காகத்தான் ஒரு பாட்டுப் பாடேன்.''

''எனக்குத் தெரிஞ்சதெல்லாம் சினிமாப் பாட்டுத்தானே?''

''வேறே பாட்டுப் பாடினாலும் எனக்குப் புரியாதே!''

அவளிடமிருந்து பதிலில்லை. மௌனம் மட்டும் கொஞ்சம் நீண்டு கொண்டேயிருந்தது. இவனுள் ஓர் அச்சம். 'நாம் இப்படிக் கேட்டிருக்கக் கூடாதோ?'

சற்றும் எதிர்பாராமல் அவள் பாடத் தொடங்கினாள்.

''மடிமீது தலைவைத்து விடியும் வரை தூங்குவோம்......''

ஆணும் பெண்ணுமாகப் பாடப்பட்ட அந்தப் பாடலை இருவரும் அவளாகவே மாறியபடி பாடிய போது, அதன் பொருள்... அதன் உருக்கம்... அவன் நெஞ்சை உருகத் தொடங்கி விட்டிருந்தது.

பாட்டு முடிந்து ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவில்லை. இருவருமே உணர்ச்சிவசப்பட்டுப் போயிருந்தனர்.

சற்று நேரம் இதே நிலை நீடித்தது.

திடீரென்று ராஜியின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டான் அழகன். ''நிஜமா சொல்லு ராஜேஸ்வரி, உன்னால் இந்த ஜடத்து கிட்டே நிம்மதியா வாழ முடியுதான்னு. ஊருக்காக ஒப்புக்கு வாழ்ந்துக்கிட்டேயிருக்கே... இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலே... இப்பவே எங்கூட கிளம்பி வா... மிச்ச காலத்தை நிம்மதியாக் கழிப்போம்.''

''ச்சே!'' சட்டென்று அவன் கைகளைத் தட்டிவிட்டாள் ராஜி. பதற்றத்துடன் எழுந்திருந்து வெளியில் ஓடினாள்.

அவளின் தேகம் முழுவதும் நடுங்கிக் கொண்டிருந்தது. ஒன்றுமேசெய்யத்தோன்றாமல், வாசல் முற்றத்தில் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்.

அப்படி உட்கார்ந்திருந்தவள் எவ்வளவு நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாளோ!

பூட்ஸ் சத்தம் கேட்டு நிமிர்ந்தாள். எதிரில் அழகன், கையில் சூட்கேஸுடன் பயணத்துக்குத்தயாராய்... தலைமட்டும்தாழ்ந்திருந்தது.

அவள் அதிர்ந்து எழுந்தாள். நிதானமாய் அவனைப் பார்த்தாள்.

''என்னை மன்னிச்சிடு ராஜேஸ்வரி... அதுக்கு மேலே எனக்கு...'' அவன் பேச முடியாமல் குமறினான்.

அவள் அவனைக் கொஞ்சம் பரிதாபத்துடன் பார்த்தாள்.

''சரி மன்னிச்சிடுவோம். ஆனால் ஒரு நிபந்தனை. இப்ப இந்த சூட்கேஸைக் கொண்டு போயி வீட்டுக்குள்ளே வெச்சுட்டு, லுங்கியைக் கட்டிக்கிட்டு இங்கே என் எதிரே வந்து உட்காரு.''

''........''

''காலையிலே குளிச்சுட்டு, உனக்காகப் போட்டிருக்கிற ஆப்பத்தைச் சாப்பிட்டுட்டு சந்தோஷமாக எல்லார்கிட்டேயும் சொல்லிக்கிட்டுப் போ.''

அவன் மலைப்பது தெரிந்தது. இருப்பினும் மீறுவதற்கும் தைரியமில்லை. சொன்னபடியே செய்தான்.

''அழகு! சித்த முன்னாடி என்ன சொன்னே? 'உன்னை மன்னிக்கச் சொல்லி! இல்லையா?''

''......''

''ஒங்கிட்டே என் மனசுலே இருக்கிற எல்லாத்தையும் சொல்லிடறேன். எங்க அப்பாவுக்கு நோயும் தள்ளாமையும் வந்தப்போ, எங்கே அம்மாவும் இல்லாத நான், அனாதையாப் போயிடுவேனோன்னு கலங்கிட்டார். அந்த நேரத்திலேதான் தூரத்துச் சொந்தமான இவர் வந்து சேர்ந்தார். அவ்வளவுதான். இவருக்கு நான் மனைவியாயிட்டேன். அப்பாவும் நிம்மதியாய்ப் போய்ச் சேர்ந்தார்.''

''......''

''நீதான் பார்த்தியே. கலை இவர் சொன்னபடி கேட்கும். வருமானத்திற்குப் பஞ்ச

தபால்காரர்: தலைதீபாவளிக்கு வந்த உங்க மாப்பிள்ளை வீடு தெரியாம அலைஞ்சுக்கிட்டிருந்தார். நான்தான் சரியான அட்ரஸ் கொடுத்தேன்!

மாமனார்: தபால் கொடுக்கிற வேலையை விட்டுட்டு இதையெல்லாம் உன்னை யாருய்யா செய்யச் சொன்னது?

— எஸ். வேங்கடராமன்.



மில்லே. ஆனும் எவ்வளவு ஜோராக இருக்கிறார் பாரேன். அதுமட்டுமில்லே. என்னைக் கண்களுக்குள்ளேதான் பொத்தி வைச்சுக் காப்பாத்திக்கிட்டிருக்கார்.''

''......''

''உனக்கே தெரியும். எங்க அப்பா என்னை எப்படிக் கூப்பிடுவாருன்னு. 'ராஜேஸ்வரி... ராஜராஜேஸ்வரி' இப்படித்தான். வாய் கொள்ளாம ஒரு நாளைக்கு நூறு தடவை யாவது கூப்பிடுவாரு. நீ கூட அப்போ என்னை 'ராஜி'ன்னு கூப்பிட்டா அப்பா சண்டைக்கு வருவாரில்லே. 'ஏண்டா அப்படி மூளியாக்கூப்பிடறே. அம்பாளோட பேரை வெச்சிருக்கேன். இஷ்டம்னா அவளோட முழுப் பேரையும் சொல்லிக் கூப்பிடு. இல்லேன்னா கூப்பிடாதே!'ன்னு. பிறகு நீயும் அப்படிக் கூப்பிட ஆரம்பிச்சிட்டே இல்லே...?''

''ஆமாம்'' என்ருன் தன்னை மறந்து. பழைய நினைவுகளில்.

''என்னிக்காவது ஒருநாள் அப்பா வெளியூர் போயிட்டா 'ராஜேஸ்வரி'ங்கற சத்தம் என் காதுகளுக்குக் கேட்காம தவிச்சுப் போயிடுவேன். மத்தவங்களுக்கு என்னை முழுசாப் பேர் சொல்லிக் கூப்பிடவும் வராது.''

''......''

''அப்புறம் பாட்டு. அதுல ஒரு பித்து. ரேடியோவிலே கேட்டுக் கேட்டு எல்லா சினிமாப் பாட்டுகளும் மனப்பாடம். அதே மாதிரி பாடவும் வருமா, பைத்தியம் மாதிரி தனியா உட்கார்ந்து மெதுவா பாடிக்கிட்டேயிருப்பேன்.''

''......''

''ஒருநாள் இப்படிப் பாட்டுக் கேட்டுக்கிட்டிருந்தப்போ, நேத்து உங்கிட்டே பாடிக் காண்பிச்சேனே அந்தப் பாட்டைக் கேட்டேன். அது எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. அப்பவே நினைச்சுக்கிட்டேன். நாம கல்யாணம் ஆகிப் புருஷன் வீட்டுக்குப் போனதும், இதே மாதிரி நிலவிலே புருஷன் மடியிலே தலை வைச்சுக்கிட்டு இந்தப் பாட்டைப் பாடிக் காட்டணும்னு.''

அவன் கண்கள் ஈரத்தில் பளபளக்கத் தொடங்கின.

''ம்ம், என்ன செய்யறது? நாம ஒண்ணு நினைச்சா கடவுள் ஒண்ணு நினைக்கிருரே! இப்போதான் ஒனக்கே தெரிஞ்சிருக்குமே. ஒரு தடவை கூட 'ராஜேஸ்வரி'ன்னு அவர் என்னைக் கூப்பிட்டதில்லே. நான் பாடின எந்தப் பாட்டையுமே அவர் கேட்டதில்லே. என்ன செய்வது. எம் புருஷன்தான் பிறவியிலேயே செவிடாகவும் ஊமையாகவும் ஆகிவிட்டாரே!''

அவன் பதில் சொல்லாவிட்டாலும் மனம் மட்டும் ரகசியமாய் அழத் தொடங்கி விட்டது.

''என் புருஷன் என்னை வாய் நிறையப் பெயர் சொல்லிக் கூப்பிட முடியவில்லையே, என்னால் பாட்டுப் பாடி அவரைச் சந்தோஷப்படுத்த முடியவில்லையே என்ற சின்னச் சின்ன ஏக்கங்களையெல்லாம் மனசிலே போட்டுப் புதைச்சுக்கிட்டு, அவரோட மற்ற நிறைவுகள்லே சந்தோஷமா இருந்துக்கிட்டிருந்தேன். ஆனா அந்தப் பாழாய்ப் போற ஆசைகள் கொஞ்ச நாளா விசுவரூபம் எடுத்து என்னை இம்சைப்படுத்திக்கிட்டிருந்துச்சு. இந்த நேரத்திலேதான் 'ராஜேஸ்வரி'ன்னு வாய் நிறையக் கூப்பிட்டுக்கிட்டு நீ வந்தே! ஒரு பாட்டுப் பாடுன்னே. ரொம்ப நாளா என் மனசிலே அடைகாத்து வெச்சிருந்த பாட்டைப் பாடினேன். சோறே கிடைக்காதவன்கிட்டே விருந்துச் சாப்பாட்டைப் போட்டது மாதிரி சந்தோஷப்பட்டேன். இதெல்லாம் சரி. முக்கியமான ஒண்ணை மட்டும் மனசு மறந்து போச்சு.''

கலங்கிய கண்களுடன் ஒன்றும் புரியாமல் அவளைப் பார்த்தான்.

''ரொம்ப நாளா உன்னோட மனசிலே என்னைப் பத்தி ஒரு சின்னப் பொறி இருந்திருக்கு. என்னையறியாமலே அதை ஊதிப் பெரிசாக்கிட்டேன். நிஜமாச் சொல்றேன். நீ நினைச்சுக்கிட்ட மாதிரி, உணர்ச்சி வசப்பட்ட மாதிரி என் மனசிலே எதுவுமே இல்லை. ஆனா நான் நடந்துக்கிட்ட விதம் உன்னை அப்படி நினைக்க வெச்சுட்டுது. ஏன் அப்படி நான் நடந்துக்கிட்டேன்னு சொல்லிட்டேன். எப்படியிருந்தாலும் தப்பு என் மேலதான். இப்ப சொல்லு. நீதானே என்னை மன்னிக்கணும்?''

அவன் குலுங்கத் தொடங்கியபோது. ''ஐயய்யே, ஆம்பிளைப் பிள்ளையா நீ...? சரி, சரி... உள்ளே வா போகலாம்'' என்று அவள் அவனைச் சமாதானப்படுத்தி வீட்டிற்குள் அழைத்துச் சென்ருள்.

* இரா. இராஜதுரை, சீர்காழி.

? சென்னைக்கு மழை பெய்யா விட்டாலும் டிசம்பர் முடியக் குடிநீர் வழங்க இருப்பு இருக்கிறதென்று குடிநீர் வாரியத் தலைவர் ஜேப்பியார் கூறியது குறித்து?

! டிசம்பருக்குப் பிறகு என்ன செய்வது? இப்போது செலவுகளைப் பற்றிக் கவலைப் படாமல், கணக்குப் பாராமல் ஒரு போர்க் கால நடவடிக்கையாகச் சென்னை நகருக்கு நிலத்தடி நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. செய்கிற வரை சரிதான்; ஆனால் எந்த நிலையிலும் நமது அரசுக்கு ஒரு தொலை நோக்குப் பார்வையோ அதற்கான திட்டங்களை நிறைவேற்றுகிற முனைப்போ, ஆற்றலோ இல்லை என்பதுதான் நமது துரதிர்ஷ்டம். எப்படியும் வடகிழக்குப் பருவ மழை பொய்க்காது; தப்பித்துக் கொள்ளலாம் என்ற துணிவில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

* பா. நாராயணன், சென்னை — 40.

? 'இந்திரா காந்தியின் பிறந்த நாளுக்கு மத்திய அரசு விடுமுறை அளிக்க வேண்டும்' என்று வைஜயந்திமாலா நற்பணி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதே?

! இருக்கிற விடுமுறைகளைக் குறைத்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருந்தால்தான் நிஜமான நற்பணியாக இருந்திருக்கும். அரசு விடுமுறைகளை அதிகரிக்கக் கோருவது தேச விரோதமே.

* ஏ. பாலசந்திரன், கே. வி. குப்பம்.

? நெல்சன் மண்டேலா இத்தனை வருடம் சிறையிலிருந்தும் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் போராடி வரும் தன்மையையும், ஈழத்தில் தமிழ்ப் போராளிகள் விசாரணையை எதிர்கொள்ள விருப்பமின்றிக் கொள்கைக்காக உயிரை மாய்த்துக்கொண்டதையும் ஒப்பிடுங்களேன்?

! அஹிம்சாவாதியையும் ஆயுதம் தாங்கியவர்களையும் ஒரு போதும் ஒப்பிட முடியாது.

* கே. அமிர்தம், வேதாரண்யம்.

? 'பள்ளி ஆசிரியர்களுக்குப் படம்வரையத் தெரியவில்லை' என்று அமைச்சர் சௌந்தரராஜன் கவலை தெரிவித்துள்ளாரே?

! எந்தப் படம்? எம். ஜி. ஆர். படமா!

* பி. எம். பிரபாகரன், திருமங்கலம்.

? படித்த பட்டதாரிகளுக்கு எல்லாம் எப்போது சார், வேலை?

! கம்ப்யூட்டர் சயன்ஸ் படித்தவர்களோ அல்லது தொழிற்கல்வி, விவசாயக் கல்வி என்று படித்துப் பட்டம் பெற்றவர்களோ வேலை வெட்டி இல்லாமல் இருப்பதாகச் செய்தி இல்லை. எனவே, இளைஞர்கள் அனைவரும் எதிர்காலத்தில் எந்தத் துறைக்கு முக்கியத்துவமும் அத்தியாவசியத் தன்மையும் ஏற்படும் என்று யோசித்துப் படிப்பதொன்றுதான் வேலை பெறுவதற்கான சிறந்த வழி.

* ஜி. இந்திரா, திருச்சி — 14.

? 'வாள், கிரீடம் போன்றவற்றை அரசியல் தலைவர்களுக்குக் கொடுப்பது ஜனநாயக முறைக்கு விரோதமானது; ஏனென்றால் இவையெல்லாம் சர்வாதிகாரத்தின் சின்னங்கள்' என்று நெடுஞ்செழியன் கூறியிருக்கிறாரே?

! உண்மைதான். அந்த வகையில் பார்த்தால் நிறைய வாள்களையும் கிரீடங்களையும் பெற்றிருக்கும் எம். ஜி. ஆரும் கருணாநிதியும் சர்வாதிகாரிகளே, அல்லவா? அவர்களுக்குக் கீழ்தான் நெடுஞ்செழியனும் அமைச்சராக இருந்தார் — இருந்து கொண்டிருக்கிறார்.

"அரசியல் ஜோக் ஒன்று சொல்லுங்களேன்!"



• 'விமர்சனமா? டோண்ட் கேர்!'

* எஸ். ராஜகணேஷ், தலைஞாயிறு.

? தமிழகத்தைப்பொறுத்தவரையில்கருணாநிதி காலத்திய பத்திரிகைச் சுதந்திரம், எம். ஜி. ஆர் காலத்திய பத்திரிகைச் சுதந்திரம் — எது தேவலாம்?

! 47 க்கு முன்பிருந்த பத்திரிகைச் சுதந்திரமே தேவலாம்.

* ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? 'விழாவுக்கு வராத கலெக்டரின் பெயர் கல்வெட்டில் எதற்கு?' என்று சபாநாயகர் பாண்டியன் கூறுவது சரிதானே?

நீங்கள் கேட்டவை — தராசு

! எத்தனையோ விழாக்களில் எம். ஜி. ஆர். கலந்து கொள்ளாத நிலையிலும் அங்கே வைக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுக்களில் எம். ஜி. ஆர். பெயர் உள்ளதே. அதற்கும் சேர்த்துத்தான் -பாண்டியன் சொல்லியிருக்கிறார் என்றால் ஓ. கே!

* கே. என். ஸ்ரீனிவாஸ், சென்னை — 80.

? சமீபத்தில் தங்களைச் சிரிக்க வைத்த ஓர் அரசியல் ஜோக்?

! ஒரு கூட்டத்தில் பேசிய முன்னாள் அமைச்சர் காளிமுத்து, 'நான் இலங்கையில் இருந்திருந்தால் ஜெயவர்த்தனவின் தலையைப் பந்தாடியிருப்பேன்...' என்று பேசிய பேச்சுத்தான் என்னை இடி இடி என்று சிரிக்க வைத்தது. சீரியஸான இலங்கைத் தமிழர் பிரச்னையை இப்படியா கோமாளித்தனமாக்குவது?

* எல். மாறன், மேல்பட்டி.

? இந்தியா சட்டங்களால் ஆளப்படுகிறதா? சட்டங்களிலுள்ள ஓட்டைகளால் ஆளப்படுகிறதா?

! ட்டங்களின் பிரதான நோக்கமே, நூறு குற்றவாளிகள் தப்பிக்க நேர்ந்தாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக் கூடாது என்பதுதான். ஆனால் நடைமுறையில் இதுவே பல குற்றவாளிகளுக்குச் சாதகமாகி விடுகிறது என்பதும் உண்மைதான்.

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.


? 'யாருடைய விமர்சனத்தையும் பொருட்படுத்தாமல் தமிழக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது!' என்று திருநாவுக்கரசு சொல்கிறாரே?

! தவறுகளைத் திருத்திக் கொள்ளும் மனோபாவம் தங்களுக்குக் கிடையாது என்பதைத்தான் இப்படிச் சுட்டிக்காட்டுகிறாரோ, என்னவோ! விமர்சனங்களைப் பொருட்படுத்தாமலிருப்பதில் பெருமையில்லை.

* க. தியாகராசன், நெய்வேலி. *

? பிரெஞ்சு பீரங்கிகளுக்குப் பதிலாக போஃபர்ஸ் பீரங்கிகளை வாங்கலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டதற்கு என்ன காரணம் என்று ஆராய்வதை விட்டுவிட்டுப் பீரங்கிகளின் தரத்தைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருப்பது எதனைக் காட்டுகிறது?

! சுவரின் விரிசல்களை மறைக்க 'வால் பேப்பர்' ஒட்டுகிறார்கள் என்பதைத்தான். 'கமிஷனே தரப்படவில்லை' என்று நாடாளுமன்றத்திலேயே சத்தியம் செய்த பிரதமர், இப்போது, 'இந்தியர்களுக்கு கமிஷன் தரப்படவில்லை' என்கிறார்; கூடவே, 'நானறிந்த வரை' என்றும் சேர்த்துக் கொள்கிறார். நாளைக்கு இன்னும் எப்படி இறங்கி வருவாரோ, தெரியாது! கோடி கோடியாக கமிஷன் பெறப்படும்போது அதை யாரும் சுலபத்தில் நிரூபிக்கும் வகையில் வாங்க மாட்டார்கள். பினாமி கணக்குகளில் போய்ச் சுற்றி வளைத்துக் கொண்டு இவர்களுக்கு ரகசியமாக வந்து சேரும். ஆகவே, 'கமிஷன் தரப்படவில்லை' என்று ராஜீவ் கூறியிருக்க, தரப்பட்டிருப்பது நிரூபணம் ஆனதும் மக்களின் வரிப்பணம் பல கோடி இதனால் நஷ்டமாகியிருப்பதுமே போதும்; ராஜீவ் ஆட்சியில் இருக்கவே தகுதியற்றவராகிறார்.


* 'பந்தாடுவேன்!'


* மேலும் ஒரு விடுமுறை!


* 'சர்வாதிகாரச் சின்னங்கள்'


* படக்கவலை!

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

க. தியாகராசன்,
எம். 152/2, மந்தாரக்குப்பம் காலனி,
நெய்வேலி — 607 802.

ரசிகர்களுக்கு ஓர் ஏமாற்றம்!

• கார்ட்டூன் போட்டாலே சிறையிலடைக்கும் நம்மவர்கள் 'அவஸ்தே' படத்தில் நடித்த கர்நாடக அரசியல்வாதிகளிடத்தில்தான் ஸ்போர்ட்டிவ்னஸ்ஸுக்கு அர்த்தம் கேட்க வேண்டும்.

கே. வி. குப்பம், ஏ. பாலச்சந்திரன்.

• 'அவஸ்தே' பட விமர்சனத்தைப் படித்துவிட்டுப் படத்தைப் பார்க்கத் துடிப்பவர்களுக்கு ஓர் ஏமாற்றமான விஷயம், பெங்களூரில் படம் திரையிடப்பட்ட முதல் நாளே — முதல் காட்சியோடு படத்தைத் தடை செய்து விட்டார்கள் என்பதுதான். உண்மையிலேயே வாழ்ந்து மடிந்த கிருஷ்ணப்பாவை உயிருடன் இருந்த போதே சந்தித்து, அவரது சம்மதத்துடன் அனந்தமூர்த்தி இந்த நாவலை எழுத, தற்போது திரைப்படமாக்கப்பட்டவுடன் அதிலுள்ள காட்சிகள் தங்கள் குடும்பத்தினரைக் களங்கப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாகக் காரணம் காட்டி, கிருஷ்ணப்பாவின் மனைவியும், மகனும், மருமகனும் கோர்ட் மூலம் தடை உத்தரவு வாங்கிப் படம் ஓடுவதை நிறுத்தி விட்டார்கள்!

பெங்களூர் — 5, அ. குமார்.

• 'ஏற்றுமதிக் கொள்கையில் ஓர் ஏமாற்றுக் கொள்கை!' தலையங்கம் இன்றைய நிலையில் இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையில் ஏற்பட்டுள்ள சிதைவினை நன்கு எடுத்துக் காட்டியது. பிரதமர் ராஜீவின் சமீப காலச் சரிவை ஈடுகட்டவாவது, பக்குவப்பட்ட பொருளாதார வல்லுனர்களுடன் விவாதித்துச் செயல்முறைப்படுத்தினால், சரிவை ஈடுகட்ட முடியும். பொறுத்திருந்து பார்ப்போம்.

திருச்சி — 2, வித்யா மணாளன்.

• மற்றவர்களிடமிருந்து மாறுபட்டு வித்தியாசமான கோணத்தில் பார்வையைச் செலுத்தி, சமுதாயக் கண்ணோட்டத்துடன் தலையங்கம் எழுதும் தங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

திருச்சி — 8, மின்னல்ராஜன்.

• 'வருமான வரி பாக்கி வைப்பவர்களுக்கு வோட்டு உரிமை கிடையாது; தேர்தலில் நிற்க முடியாது' என்று சட்டம் வர வேண்டும் என்று தராசு கூறுவது நல்ல யோசனைதான்! இதை ஏற்று அரசு சட்டம் கொண்டு வந்தால் நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும்.

வலங்கைமான், வலங்கை ஜி. ராஜசேகர்.

• எங்களது அன்புத் தலைவியின் பேட்டியில் தங்கள் நிருபர்களின் துணிச்சலான கேள்விகள் மூலம் எங்கள் தலைவியின் எதிர்காலத் திட்டங்களை வெளிக்கொண்டு வந்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தண். நடராசன்,
செயலர், அ. இ. வைஜயந்திமாலா பாலி மன்றம்,
திண்டிவனம்.

• எந்தவித எதிர்பார்ப்புடனும் நான் அரசியலில் நுழையவில்லையென வைஜயந்திமாலா கூறியிருப்பதை முழுமையாய் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

சென்னை — 15, இரா. சி. இரஞ்சன்.

• வைஜயந்திமாலாவிற்கு ராஜீவ்ஜியிடம் ராஜ விசுவாசம். ஜெயலலிதாவுக்கு எம். ஜி. ஆரிடம் ராஜ விசுவாசம். அட கடவுளே! வோட்டுப் போட்ட மக்களிடம் யாருக்கும் விசுவாசம் இல்லையே!

திருச்சி — 6, ஸ்ரீரங்கம் ஆர். கோபாலன்.

• வேலைக்குச் செல்லும் மகளின் பிரிவை எண்ணித் தாய் அடையும் துயரை, மிக அழகாகச் சித்திரித்துள்ளார், லதா ராமகிருஷ்ணன். மகளைப் பெற்ற எந்த ஒரு தாயும், இக்கதையைப் படித்து நிச்சயம் கண் கலங்குவார். உருக்கமான சிறுகதை!

குத்தாலம், எல். ராஜா.

• ஒரே நாளில் 201 இலவச போலியோ ஆபரேஷன்களைச் செய்து முடித்திருக்கும் என். எம். சி. யின் சாதனை வியக்கவைத்தது; புகழை மட்டும் பிரதானமாகக் கொள்ளாமல் உண்மையான பரிவோடு செயல்படும் அவர்களின் சேவை மேலும் தொடரட்டும்.

தோப்புத்துறை, ஹெச். கே. நாசர்.

• பகட்டுச் சேவை பெருகிவரும் இக்காலத்தில், தூய சேவை உணர்வோடு போலியோ ஆபரேஷன்கள் செய்ய முன்வந்த சமூக இயக்கங்களை, அந்தப் பெற்றோர்கள் மட்டுமல்ல; நல்லிதயங்கள் அனைத்துமே மனதாரப் பாராட்டுகின்றன!

திருப்பத்தூர் (வ. ஆ.), த. கோவிந்தராசன்.

• முகாம் நடத்தக் களம் அமைத்துக் கொடுத்த அதே நெய்வேலி பொது மருத்துவமனையில் இப்போது போலியோ தடுப்பு மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதைப் போக்கவும் உரியவர்கள் விரைந்து உதவலாம்.

நெய்வேலி — 3, உஷாராணி மணிமன்னன்.

• தமது சங்கம் சம்பந்தப்பட்ட தகராறாக இருந்தும், அதன் சார்பாகப் பேசாமல், சங்க மேலாளர் செய்த குற்றத்திற்காக வருந்தி, இனிமேல் இதுமாதிரி நடக்காது! என்று உறுதி அளித்த ராதாரவி... அதன்படி நடந்து கொண்டால் பாராட்டுக்குரியவரே!

சிவகங்கை, ஆர். ஜெ. பாலன்.

• வகுப்பறைச் சிரிப்புகள் எங்களைப் பள்ளி மற்றும் கல்லூரி நாட்களுக்கே அழைத்துச் சென்று விட்டன!

கோவை, உமார்த்தி.

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: இ. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை — 600 034. போன்: 473389.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 280/-; விமானத் தபால் ரூ. 680/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 340/-.



கதிரவன் ஒளியில் கனிந்த சூரிய காந்தி வித்துக்களின் சத்து...
உடம்புக்கு இலேசு இலேசான
உணவுகளை சமைக்கும் எண்ணெய்
புதிய ஃப்ளோரா, சுத்தீகரித்த சூரியகாந்தி எண்ணெய், கண்ணாரக் காண்பீர்கள் இதிலே பொன்னுன தூய்மை, பூப்போல் இலேசுத் தன்மை, சமையலே இலேசு, உணவு தோறும் இலேசு, சீரணிக்க இலேசு, உடம்புணர்விலும் ஓகோ இலேசு! தேகத்தில் கொலஸ்ட்ரால் கொழுப்புச் சத்து திரளாமல் தடுத்திட— சமைப்பீர் புதிய ஃப்ளோராவினுல்; எந்தச் சமையலிலும் சொந்த ருசி வந்து இழையும், உணவிலே சுவை காண்பீர் சுகாலத்தின் சூரியோதயம்; பூப்போல் இலேசான புதிய ஃப்ளோரா.
Flora
REFINED
SUNFLOWER OIL
LINTAS LIL SFO 1 2416 TI
புதிய
ஃப்ளோரா
ரிஃபைன்டு சூரிய காந்தி எண்ணெய்
சீரணிக்க இலேசான சுவை உணவு சமைக்கிறது.

REGISTERED No. M. 4092
Registered as a Newspaper in Sri Lanka

வினாடிகளில் நிவாரண
மளிக்கும் பாம்!



ஜண்டு பாம்

ஜலதோஷம், தலைவலி
மற்றும் நோவுகளிலிருந்து
துரித நிவாரணம்

OFFICIALLY SELECTED BY
RELIANCE CUP '87

ZANDU BALM

RELIANCE CUP 1987

CRICKET FOR PEACE

ஜண்டு பாம் பலவகை வலிகளையும் நீக்குவதில், இதர பாம்களைவிட, அதிக சக்தி வாய்ந்த வலி நிவாரணி.

தலைவலி, ஜலதோஷம், தசைப்பிடிப்பு, மூட்டுவலி, மற்றும் சுளுக்கு ஆகியவைகளிலிருந்து நிவாரணமளிக்கிறது.

ஜண்டு பாம் ஈடு இணையற்றது; நிறமற்றது—அதனால் கறை படியுமோ என்ற பயமில்லை, பிசுபிசுப்பற்றது—அதனால் வீட்டிலோ வெளியிலோ உபயோகிக்கலாம். நறுமணமும் கொண்டது. ஜண்டு பாம் வீரியமிக்க ஃபார்முலா கொண்டதால் குறைவாக உபயோகித்தால் போதும். அதனால் சிக்கனமானது. மிருதுவான சருமத் திற்கும் உகந்தது. அதனால்தான் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஜண்டு பாமையே தடவ விரும்புகிறார்கள்.

சீசாவின்மேல் இருக்கும் சிகப்பு சீலைப் பார்த்து வாங்குங்கள்.

ஜண்டு பாம்
வலிகளை நீக்கும் பாம்

Z-2-87 TAM